

# சிசிலிய ராகங்கள்

## 2017

மட்/மட்/புனித சிசிலியா
பெண்கள் கல்லூரி
(தேசிய பாடசாலை),
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Mother Mary Veronica of the Passion (1823 to 1906)
( Foundress of the Apostolic Carmel )

Mother Veronica (Miss Sophie Leeves), Foundress of the Sisters of the Apostolic Carmel, Mangalore, was deeply religious and highly intellectual. She was English, the daughter of an Anglican Chaplain to the British Embassy at Constantinople. Born on October 1, 1823, she was received into the Catholic Church on February 2, 1850. A life of prayer and renunciation culminated in the dedication of her whole self to the education of youth in the Congregation of the Sisters of Saint Joseph of the Apparition. On September 14, 1851, she became Sister Mary Veronica of the Passion, and the Cross had a large place in her life making her in truth, a victim.

She came out to India and at Calicut met the saintly Carmelite Bishop, Marie Ephrem, who guided her in her work of founding the Apostolic Carmel, a Congregation of Carmelite women devoted to teaching. She obtained the sanction of the Holy See and, leaving her own Congregation, she joined the Carmel of Pau, France, and then prepared a band of young girls, French, English and Irish, and sent them to India in 1870.

Three years later, when the Apostolic Carmel was firmly established on Indian soil, she returned to the Carmel of Pau, making the Apostolic Carmel the special object of her prayers and affection. In 1906, God called her to Himself, to reward her for her life of love, labour and sacrifice.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசிலிய ராகங்கள்

மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி

தேசிய பாடசாலை

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bt/St.Cecilia's Girls' College


| | |
|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : சிசிலிய ராகங்கள் |
| பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | : 1876 |
| வெளியீடு | : மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி |
| விலாசம் | : 2ம் குறுக்குத்தெரு, மட்டக்களப்பு. |
| பாடசாலை அடையாள இலக்கம் | : 1501023 |
| பாடசாலைத் தொகை மதிப்பீட்டு இலக்கம் | : 14118 |
| மின்னஞ்சல் | : *ceciliabco@yahoo.com* |
| இணையம் | : *http://www.ceciliabco.sch.lk* |
| தொலைபேசி & தொலைநகல் | : 065-2222588 |
| வெளியீடு | : 2018 |
| பக்கங்கள் | : xii + 137 |
| பிரதிகள் | : 1000 |
| ISBN | : 2279-1078 |
| அச்சுப்பதிப்பு | : ஷெரோணி பிரிண்டர்ஸ்<br>புதிய எல்லை வீதி, கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு.<br>065-2228660 |

| | |
|---|---|
| Title of the Magazine | : Cecilian Melodies |
| St.Cecilia's College Originally Started | : 1876 |
| Published by | : Bt/Bt/St.Cecilia's Girls' College |
| Address | : 2nd Cross, Street, Batticaloa. |
| School ID No. | : 1501023 |
| School Census No. | : 14118 |
| E-mail | : cecilia bco@yahoo.com |
| Web | : http:\www.ceciliabco.sch.lk |
| Tel & Fax | : 065-2222588 |
| Published | : 2017 |
| Pages | : xii + 137 |
| Copies | : 1000 |
| ISBN | : 2279-1078 |
| Printers | : Sheroni Printers<br>New Boundary Rd, Karuverpankeny, Batticaloa.<br>Te : 065-2228660 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானமறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

புனித சிசிலியா மகளிர் வித்தியாலயம்
என்றும் வாழிய வாழியவே
எனப் புதல்வியர் நாம் அதன் பெருமை
பாடிப் புகழ்ந்திடுவோம்
இந்தப் புவியினிலே மேன்மை அடைந்திட
வாழ்த்திப் போற்றிடுவோம்.

மட்டுமா நகரின் மத்தியிலே
மாபெரும் கல்வியின் ஆலயமாம்
மகளீர் கல்வியின் நலன் ஒன்றே
மாபெரும் சேவையின் குறிக்கோளாம்
பல்கலையோடு நற்பண்புகளும்
பயிற்றிடும் பாங்கான நிறுவனமாம்
கௌரவம் பெறுவதல்ல பிறருக்கு
கௌரவம் அளிப்பது எம்கொள்கை
கருஞ்சிவப்பும் மஞ்சளும் எமது கொடி
அதைப் பணிந்து வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Motto

**மேன்மை அல்ல சீர்மை**

***Not Honours But Honour***

## தூர நோக்கு *Vision*

ஆன்மீக உறுதியோடு முழு ஆளுமை
வளர்ச்சியை நோக்கிய உயர்அறிவுத் தேடல்

## பணி நோக்கு *Mission*

முழு ஆளுமை வளர்ச்சிக்கான
எத்தனங்களை ஆன்மீகப் பற்றுறுதியுடனும்
பெண்ணிய நோக்கிலும் முன்னெடுக்கும்
தொடர் தேடலின் ஊடாக, ஆளுமையும்,
ஆற்றலும் தூரநோக்குமுடைய மகளீரை
உருவாக்குவதன் மூலம் எம் நாட்டிற்கும்
சர்வதேசத்திற்கும் பாரிய பங்களிப்பை நல்கும்
கல்வியகமாக இக்கல்லூரி விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசிலிய ராக சஞ்சிகைக் குழு

## ஆலோசனை, வழிகாட்டல்

அருட்சகோதரி அருள்மரியா (அதிபர்)

திரு.N.சந்திரகுமார் (பிரதி அதிபர்)

## இதழாசிரியர்

திரு.க.அரியநாயகம்

## ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

திருமதி.ஜோ.எஸ்.ஜெயசீலன்

திருமதி.க.புவனேந்திரன்

திருமதி.எஸ்.ரெனாறன்ஸ்

திருமதி.த.அருண்

திருமதி. எஸ். உதயகுமார்

திருமதி. சு.சிறிதரன்

திருமதி.த.தனரூபன்

திருமதி. டெ.சசிதரன்

## மாணவக்குழு உறுப்பினர்கள்

செல்வி. ரெ. சிவதாறினி

செல்வி. டில்கிறிக்ஷிக்கா . கொ

செல்வி. ஞா.தேவசௌமியா

செல்வி. ஐ. கிஷானிகா

செல்வி. M.மொனிக்கா

செல்வி. அ.நிவேதா

செல்வி. சி.மெடலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Magazine Committee



**SEATED LEFT TO RIGHT**

(1) Mrs.S.Tenarentzs
(2) Mr.S.Uthayakumar
(3) Mr.K.Ariyanayagam
(4) Mr.N.Santhirakumar
(5) Rev.Sr.Arul Mariya
(6) Mrs.K.Puvanenthiran
(7) Mrs.J.S.Jeyaseelan
(8) Mrs.T.Arun

**STANDING FROM LEFT TO RIGHT**

(01) Mrs.D.Sasikaran
(02) Miss.K.Dilky Rikshika
(03) Miss.R.Sivadhariny
(04) Miss.N.Theva showmiya
(05) Miss.I.Kishanika
(06) Miss.M.Monika
(07) Miss.A.Nivetha
(08) Miss.S.M.Madalin
(09) Mrs.T.Thanarupan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Development Officers



**SEATED LEFT TO RIGHT**

(1) Mr.M.Suntharalingam
(2) Rev.Sr.Arul Mariya
(3) Rev.Sr.Vijitha (4) Mr.N.Santhirakumar

**STANDING FROM LEFT TO RIGHT**

(1) Mrs.L.Raveenthar (2) Mrs.W.A.Malkanthi
(3) Mrs.S.Vijayakumar (4) Miss.S.Dhevahi
(5)Mrs.M.Suventhiran

# Non Academic Staff



**SEATED FROM LEFT TO RIGHT**

(1) Mr.T.Nilojan (2) Mr.M.Sethuram
(3) Mr.A.Varatharasan
(4) Mr.S. Kamalathas

**STANDING FROM LEFT TO RIGHT**

(1) Mrs.K.Srikamushthira (2) Mrs.P.Piriyakala
(3) Mrs.P.Lingeshwaran (4) Mrs.I.Sivaganesan
(5) Miss.S.Niroshini (6) Mrs.T.Sivasathan
(7) Miss.K.Niroshini (8) Miss.S.Thanusiya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை பாராட்டு



## திரு. N.பத்மநாதன்

திரு.N.பத்மநாதன் ஆசிரியர் அவர்கள் 2010ம் ஆண்டு இப்பாட சாலைக்கு இடமாற்றமாக வந்து கடமையைப் பொறுப்பேற்று தனது நீண்டகால அனுபவத்தின் மூலம் சிறந்த கல்விச் சேவையை ஓய்வுபெறும் இறுதி நாள் வரை மேலுமாக ஓய்வு பெற்ற பின்னரும் சிறப்பாக ஆற்றியவர். இவர் தனது கற்பித்தலுக்கு மேலதி கமாக ஆசிரியர்கட்கு ஒரு வழிகாட்டியாகவும், பாடசாலை ஆசிரியர்களின் நிகழ்வுகளில் சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும், க.பொ.த (சா/த) மாண வர்களுக்கு விசேட செயற்திட்டங்கள் மூலம் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்கு விசேடமாக செயற்பட்டவர். அவரது தன்னலமற்ற சேவையை பாராட்டுவதில் இப்பாடசாலைச் சமூகம் பெருமிதம் கொள்கிறது.

## திருமதி. பவானி ஜெயசீலன்



இடமாற்றம் பெற்றுவந்த காலத்திலிருந்து தனது சேவையை தனக்கும் பாடசாலைக்கும் பிரமாணிக்கமாக வழங்கியுள்ளார். ஆரம்ப காலத்தில் தரம் 5 இல் பொறுப்பாசிரியராக இருந்து பின்னர் தரம் 6 இற்கு பகுதித் தலைவராகப் பொறுப்பேற்று அத்துடன் முகாமைத்துவக்குழு, சமயக்குழு, விளையாட்டுக் குழு என்று பாடசாலையின் அனேக உள்ளக வெளியக செயற்பாட்டுக்காக தனது முழு நேரத்தையும் அர்ப்பணித்த ஆசிரியர். தனது வீடு பாடசாலைக்கு அருகில் இருந்ததால் அருட்சகோதரிகள் அழைத்த போதெல்லாம் உடன் வந்து உதவியவர். 2017 ஆம் ஆண்டு ஓய்வுபெறும் வரை பாடசாலையை தனது குடும் பமாகக் கருதிட கடமையாற்றிய இவருக்கு சிசிலிய சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூறுகிறது.



## திருமதி.P.T.L. எட்வேட்

திருமதி.P.T.L.எட்வேட் ஆசிரியர் 1993ம் ஆண்டு இப்பாடசா லைக்கு இடமாற்றம் பெற்று வந்த காலத்திலிருந்து 2017ம் ஆண்டு ஓய்வுபெற்றுச் செல்லும் வரை அவர் தமது கற்பித்தல் வேலையைத் தாராளமாக இப்பாடசாலைக்கு வழங்கியுள் ளார். கற்பித்தலில் மட்டுமன்றி கலைத்திறமை கொண்ட ஆசி ரியரும் கூட. தமிழ்மொழித்தினப் போட்டிகளில் மாணவரைப் பயிற்றுவித்து தேசிய மட்டம் வரை கொண்டு சென்ற பெருமையும் அவரைச்சாரும். அவரது சேவையைப் பாராட்டி மகிழ்ச்சியடைவதில் எமது பாடசாலைச் சமூகம் முன்நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACADEMIC STAFF - 2017

| | | | |
|---|---|---|---|
| 1 | Sr.Arulmaria (A.C.) | 35 | Mrs.T.Thayaparan |
| 2 | Mr.N.Chandrakumar | 36 | Mrs.T.Uthayakumar |
| 3 | Sr.M.Vijitha (A.C.) | 37 | Mrs.V.Pushparajah |
| 4 | Mr.M.Sundaralingam | 38 | Mrs.B.Jehanathan |
| 5 | Mrs.B.Jeyaseelan | 39 | Mrs.V.Pulendran |
| 6 | Mrs.A.Varatharaj | 40 | Mrs.P.J.Manimaran |
| 7 | Mrs.K.Premkumar | 41 | Mrs.P.Sritharan |
| 8 | Mrs.P.Christopher | 42 | Mrs.K.Uthayasooriyan |
| 9 | Mrs.A.Ganesh | 43 | Mr. J.Gajendren |
| 10 | Mr.I.M.Iruthayam | 44 | Mr.M.Mahendran |
| 11 | Mrs.A.Nallathamby | 45 | Mr.D.Dharshayan |
| 12 | Mr.K.Rathakrishnan | 46 | Mrs.S.Tenarentzs |
| 13 | Mrs.A.Ragavan | 47 | Mrs.P.Lesley |
| 14 | Mrs.P.T.L.Edward | 48 | Mrs.N.Baskar |
| 15 | Mrs.C.Gajendran | 49 | Mrs.T.Arun |
| 16 | Mrs.T.Iruthayanathan | 50 | Mrs.S.P.E.Dharshan |
| 17 | Mrs.K.Puvanendren | 51 | Mr.S.Arul Jeyanthan |
| 18 | Mr.S.Sivanesaraja | 52 | Mr.S.Elankeeran |
| 19 | Mrs.D.N.Jeyaraja | 53 | Mrs.M.Outschoorn |
| 20 | Mrs.S.Sritharan | 54 | Mrs.P.Kirupakaran |
| 21 | Mrs.T.Yogarasa | 55 | Mrs.D.Y.Navaretnasingam |
| 22 | Mrs.S.Guruparan | 56 | Mrs.M.Shanthakumar |
| 23 | Mrs.J.M.James | 57 | Mr.M.Vijayatharshan |
| 24 | Mrs.S.Chandrakumar | 58 | Miss.K.Tharshini |
| 25 | Mrs.S.Jayakanthan | 59 | Mrs.D.Sasitharan |
| 26 | Mrs.V.Jeevaretnam | 60 | Mrs.J.Janagan |
| 27 | Mrs.Y.C.Jeyakumar | 61 | Mrs.T.Thivyan Dies |
| 28 | Mrs.R.Manoharan | 62 | Miss.P.Anojah |
| 29 | Mrs.K.Pradeepan | 63 | Miss.S.Neeraja |
| 30 | Mrs.K.Sothilingam | 64 | Mrs.M.Dirojini |
| 31 | Mrs.C.V.Nehru | 65 | Mr.N.Pathmanathan |
| 32 | Mrs.N.Pratheepan | 66 | Mrs.T.Thanarupan |
| 33 | Mr.V.Kathirkamathamby | 67 | Mrs.Y.Thavendrarajah |
| 34 | Mr.A.Jeyatheepan | 68 | Sr.R.Kavitha (A.C.) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 69 | Mrs.N.Chandrakumaran | 97 | Mrs.J.Thavarajah |
| 70 | Mrs.V.Senthil | 98 | Mrs.J.S.Jeyaseelan |
| 71 | Mrs.S.Vigneswaran | 99 | Mrs.S.Uthayakumar |
| 72 | Mrs.H.Riche Krishanth | 100 | Mrs.M.Jeyanath |
| 73 | Mrs.V.Partheepan | 101 | Mrs.S.Mayurapriyan |
| 74 | Mrs.S.Roopithan | 102 | Miss.P.Ruwani |
| 75 | Mrs.P.Uthayaruban | 103 | Miss.B.B.C.Anushalini |
| 76 | Mrs.T.Kanagarajah | 104 | Miss.D.Paviththran |
| 77 | Mr.A.Roy Ravinath | 105 | Sr.Gracelyn (A.C.) |
| 78 | Mrs.M.Prabakaran | 106 | Miss.S.Aswenee |
| 79 | Mrs.H.M.Nazar | 107 | Mrs.S.Kirupakaran |
| 80 | Mrs.R.Ravithiramoorthy | 108 | Mrs.A.Thanushan |
| 81 | Mrs.V.Pulendran | 109 | Mrs.A.L.S.Pravinth |
| 82 | Mrs.K.Kulenthiran | 110 | Miss.S.Mery Emalda |
| 83 | Mrs.Y.Thamothiram | 111 | Mrs.K.Thizanth |
| 84 | Mrs.S.Mathiyalagan | 112 | Mrs.A.Sajeevan |
| 85 | Mrs.M. Ithayaraj | 113 | Mrs.SFA.Hassan |
| 86 | Mr.B.Christo Poul | 114 | Mrs.MU.Thajudeen |
| 87 | Miss.T.Gayalilni | 115 | Mrs.R.C.Soundaralingam |
| 88 | Mrs.G.Rajikaran | 116 | Mr.V.Razik Fareed |
| 89 | Mrs.A.R Thineshkumar | 117 | Miss.P.Theiventhy |
| 90 | Miss.S.Revathy | 118 | Mr.K.Partheepan |
| 91 | Mr.M.Prashanthan | 119 | Mr.T.Kirubairajah |
| 92 | Mrs.J.Thineshraj | 120 | Mrs.P.G.Devananth |
| 93 | Miss.M.Sharuja | 121 | Mrs.R.Premakumar |
| 94 | Mr.S.Mohanraj | 122 | Mrs.T.Thiruchelvam |
| 95 | Mrs.V.Chinnaiyah | 123 | Miss.Fathima Zahra |
| 96 | Mr.K.Ariyanayakam | | |

## *Development Officers*

1. Mrs. M. Suventhiran
2. Mrs. L. Raveenthar
3. Mrs. S. Vijayakumar
4. Miss. S. Devahi
5. Mrs.W.A.Mallika

## *Non Academic Staff*

01. Mrs.K.Kamusthra
02. Mrs.I.Vasantharajah
03. Mrs.S.Niroshini
04. Mrs.B.Priyakala
05. Mr. T. Nilogan
06. Mr. A.A.Ismail
07. Mr. K.Velnayagam
08. Mr. A.Varatharasan
09. Mrs. I. Sivaganesan
10. Mr. M.Sethuram
11. Mrs. P. Lingeswaran
12. Mrs. G. Tharshini
13. Miss.S.Thanusiya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி



"கீர்த்தியும் பெருமையுங் கிடைப்பது கல்வி". இக்கல்வியில் சாதனை படைக்கக்கூடிய ஊற்று பாடசாலை. அத்தகைய பாடசாலைகளில் கிழக்கு மாகாணத்தில் உயர்நிலையில் நிற்கும் தேசிய பாடசாலைகளில் ஒன்றான எமது சிசிலியா பெண்கள் கல்லூரியின் வருடாந்தச் சஞ்சிகை யான **'சிசிலிய ராகத்தை'** இம்முறையும் வெளி யிடுவதற்கு தடைகளின்றி வழியமைத்த இறைவ னுக்கு முதற்கண் நன்றிகள்.

2017ம் ஆண்டில் எமது பாடசாலை பெற்ற சாத னைகள், செயற்பாடுகள், மாணவர்களால் வெளிக் கொணரப்பட்ட அறிவூற்றுக்கள், வாழ்க்கைக்குத் தேவையான விளக்கங்கள் இன்றைய கால கட்டத்தில் பாடசாலை வளர்ச்சிக்கும், அதனை முன்னெடுக்குமுகமாக தெரிவிக்கப்படும் ஆசிரிய ஆக்கங்களும் அடங்கிய சிசிலிய ராகத்தைப் படிக்கும் பாடசாலை மாணவர்களும், பாடசாலை சமூகமும், ஏனையோரும் திருப்தியடைவர் என்ற நம்பிக்கை எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இம்மலருக்கு பல ஆக்கங்களை வழங்கி மலரின் வாசனையையும் அழகையும் மிளிரச்செய்ததோடு, மலரினைச் சிறப்பாக வெளியிடுவதற்கு வழி அமைத்த அனைவருக்கும் இறையாசி பெற பிரார்த் தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கின்றேன்.

Arul Maria

அருட்சகோதரி **அருள் மரியா** AC
அதிபர்
புனித சிசிலியா பெண்கள் கல்லூரி,
தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



அகில இலங்கையிலே தலைசிறந்த பாடசாலையாக மிளிரும் மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை)யின் "சிசிலிய ராகங்கள்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய நவீன யுகத்தில் மாணவர்களின் எழுத்துத்திறன், வாசிப்புத்திறன் என்பன அருகிக்கொண்டு செல்கின்றது. இதனை வளப்படுத்த கல்வியமைச்சும் பல முயற்சிகளை மேற்கொள்கின்றது. நூலக அபிவிருத்தி, வாசிப்பு மாதம் என்பன போன்ற செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்ய முயலுவதைக் காண்கின்றோம். இதற்கு மேலதிகமாக இப்பாடசாலை எடுத்துள்ள சஞ்சிகை வெளியீடு மாணவர்கள் மொழித்திறனை மேம்படுத்த உதவும் என்பதில் ஐயமில்லை.

மேலும் பாடசாலையின் சாதனைகளை வெளிப்படுத்தும் ஒரு நூலாகவும் ஆசிரியர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு சான்றாகவும் இது அமைகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக "புனித" என்ற சொல்லை தாங்கி நிற்கும் இப்பாடசாலையின் பெயர் மேலோங்க அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் உழைக்க வேண்டும். இதற்கு இறைவன் அருள் கிடைக்க வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

- நன்றி -

**க.பாஸ்கரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் இதயத்திலிருந்து...



மாணவர்களின் எழுத்தாக்க திறனையும், அறிவு நுட்பத்தினையும், ஆளுமையையும் விருத்தி செய்யும் நோக்கோடு வருடா வருடம் 'சிசிலிய ராகம்' சஞ்சிகை வெளியிடப்படுகிறது. அந்தவகையில் மனிதாபிமானத்தையும், மனிதநேயத்தையும் மறைத்து நவீன ஊடகங்களின் தாக்கமும் போதைப் பொருட்பாவனையும், மதுபான வாணிபமும் மேலோங்கி வருகின்ற இந்தக் காலகட்டத்தில், மாணவர்களின் சாதனைகளையும், போதனைகளையும், ஆசிரியர்களின் ஆக்கங்களையும் தன்னகத்தே கொண்டு பல்வேறு சொல்லாடல்களுக்கு வீறுநடைபோட்டு எம் பாடசாலை அதிபர் அருட்சகோதரி அருள்மரியா அவர்களின் நெறிப்படுத்தலினால் இச் 'சிசிலியராகம்' பிரசவமாகிறது.

இதனை நோக்கும் போது "முன்னைப்பிறப்பின் முயன்ற தவத்தினால் பின்னைப் பெறும் உணர்வு" எனும் ஔவைக்குறள் கூறுவதைப் போல் அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும். இந்த சஞ்சிகையானது மாணவர் சமூகத்தை நெறிப்படுத்தும் நற்கருத்துக்களை வழங்குகிறது என்பதில் ஐயமில்லை மேலும் எம் மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் இச்சஞ்சிகை அமைகின்றது என்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். பல சிரமங்களின் மத்தியில் இச்சஞ்சிகையினை உருவாக்கியதில் நூலாசிரியர் என்ற வகையில் பெருமிதமடைவதோடு எதிர்வரும் காலங்களில் இச் 'சிசிலியராகம்' சஞ்சிகையானது புதுப்பொலிவு பெற்று தொடர்ந்தும் சிறப்புடன் வெளிவர மனமார வாழ்த்துகிறேன்.

**திரு. க. அரியநாயகம் - SLTS**
(இதழாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சிசிலியாவின் சிட்டுக்குருவிகள் (கவிதை) | 01 |
| அட்டைப்பட விளக்கம் | 01 |
| மனிதரை நேசிப்போம் | 02 |
| *Water Our life Blood* | 03 |
| எறும்பிடம் கற்றுக்கொள்வோம் | 04 |
| பொலித்தீன் பாவனை இனி வேண்டாம் | 04 |
| பொது அறிவு வினா | 05 |
| விடுகதைகள் | 05 |
| நில் - கவனி - முன்னேறு | 06 |
| திருக்குறளின் அதிசயங்கள் | 06 |
| தன்னம்பிக்கை (சிறுகதை) | 07 |
| நிலைத்திருக்கும் நினைவுகள் (கவிதை) | 08 |
| புளோரன்ஸ் நைட்டிங்கேள் / *Reading for a better life* | 09 |
| *Women's Rights in Islam* | 10 |
| *7 Secrets of success* | 10 |
| ஆரோக்கியமான உணவு | 11 |
| பெற்றோரைப் பேணும் பாடல் | 12 |
| மூலிகை மகத்துவம் | 13 |
| ஆரம்பக்கல்வியில் பெற்றோர் பங்களிப்பு | 14 |
| பாடசாலை மாணவ. மாணவியர் ஏற்கவேண்டிய உறுதிமொழிகள் | 16 |
| இயற்கை வைத்தியம் / வாழ்க்கைத் தத்துவம் | 17 |
| ஏ.வி.ஜே.அப்துல் கலாம் | 18 |
| பழிக்குப் பழி / நம்பிக்கை (கவிதை) | 20 |
| நீங்கள் அறிந்ததுண்டா? | 21 |
| உயிரும் நீ உண்மையும் நீ (கவிதை) | 22 |
| மனித உடல் பற்றிய தகவல்கள் | 22 |
| விடுகதைகள் | 23 |
| சிந்திக்க சில சிந்தனைத் துளிகள் | 24 |
| *Tourism in Srilanka* | 25 |
| அன்னையே (கவிதை) | 26 |
| உலகில் முதலாவதாக சாதனை புரிந்த பெண்கள்/ விலங்கின் விநோதம்... | 27 |
| வெற்றியின் இரகசியம் / தெரிந்து கொள்ளுங்கள் | 28 |
| மரதன் ஓட்டம் | 29 |
| *Model Letter* | 30 |
| *Importance of Protecting Nature* | 30 |
| ஏன் சிரிக்க வேண்டும்? / சிரிப்பு சிறந்த மருந்து | 31 |
| *My Favorite Mathematician* | 32 |
| *Caracara* | 33 |
| வினைத்திறனான செயலாற்றுகைக் கற்றலுக்கான சில ஆலோசனைகள் | 34 |
| தெரிந்துகொள்வோம் | 37 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The Influence of Social Network on Student's Education* ........ 38
நல்ல நூல்கள் / தந்தை (கவிதை) ........ 41
உலகின் மிகப்பெரிய வாழும் உயிரினம் ........ 42
உங்களுக்குத் தெரியுமா? ........ 42
பொது அறிவு ........ 43
வாழ்க்கையில் வெற்றி பெற ........ 43
உலகம் ........ 44
நம்பிக்கை (கவிதை) ........ 44
பேசும் முறைகள் / மனிதன் மனிதனாக வாழ 18 விஷயங்கள் ........ 45
*7 Biggest brain damaging habits* ........ 45
நற்சிந்தனை ........ 46
வெற்றியின் முக்கிய கூறுகள் ........ 47
சிந்தனைத் துளிகள் ........ 47
வீணாகும் பொருள்கொண்டு விந்தைகள் செய்திடுவோம் ........ 48
*Moon and its mystery* ........ 49
நற்சிந்தனைக் கவிதைகள் ........ 51
புனித அகுஸ்தீன் ........ 52
திருச்சபையின் திருவிழாக்கள் ........ 53
சுவாமி விபுலானந்தரும் அவரது பணிகளும் ........ 54
கரைகடந்த நதிகளாய் (கவிதை) ........ 57
*Attitude of teachers influences the teaching performances* ........ 58
*G.C.E.(O/L) Best Results - 2016 / 2017* ........ 60
*G.C.E.(A/L) Best Results - 2016 / 2017* ........ 61
*Maths & Science Quiz Competitions - 2017* ........ 62
மனை வளங்கள் (கவிதை) ........ 63
புலவர்களைக் காப்பாற்றிய ஔவையாரின் கதை ........ 64
பேராசையால் வந்த வினை (சிறுகதை) ........ 65
தந்தையைப் போல் ஒரு தெய்வமுண்டோ (கவிதை) ........ 66
சுதந்திரம் (கவிதை) ........ 67
சிறுவர் நாங்கள் பூவைப் போன்றவர்கள் (கவிதை) ........ 68
பொது அறிவு வினாக்கள் ........ 68
உலகில் புகழ்பெற்ற நூல்களும் அவற்றை இயற்றியோரும் ........ 69
படித்ததில் பிடித்தது ........ 69
உங்களுக்குத் தெரியுமா / ஈமு ........ 70
துளிமுத்துள் கங்கை (கவிதை) ........ 71
முதன்மையானவர்கள் ........ 71
*The Prefect system in the school* / பொது அறிவு ........ 72
*Blue Moon* ........ 73
பாடசாலை வளர்ச்சியில் பங்களிப்போர் ........ 74
நோன்பின் சிறப்புக்கள் ........ 75
நற்சிந்தனை ........ 77
டாக்டர் அப்துல்கலாமின் அமுதவாக்குகள் ........ 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிர்கள் , ஜோக்ஸ் ........ 79
அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் புகைத்தல் ........ 80
சாயங்காலத்தின் சந்தோசங்கள் (கவிதை) ........ 81
சிந்திக்க வைக்கும் விவேகானந்தர் நற்சிந்தனைகள் / நல்ல விதைகள்.... 82
யானைக்கு வந்த திருமண ஆசை (சிறுகதை) ........ 83
புதிர்கள் ........ 84
சிந்திப்போம் செயல்படுவோம் ........ 85
*Impact of world war - I* ........ 87
*Let's Product Publilc Property* ........ 88
*The Greenhouse Effect* ........ 89
*The Living Earth* ........ 89
சோழர் காலத்தில் வழக்கிலிருந்த கூத்துக்களும், ஆடற்கலைகளும்.... 90
*Success Life* ........ 91
*Virus* - வைரஸ் ........ 92
இருளறை -(கவிதை) ........ 93
இடமாற்றம் வேண்டி (கவிதை) ........ 93
போதையை ஒழிப்போம் புதுயுகம் படைப்போம் ........ 94
கல்லூரி காலத்தை நினைத்தாலே இனிக்கும் (கவிதை) ........ 95
எனது அம்மா ........ 95
*Is Medicine the Root cause of over population* ........ 96
உலக மனிதநேய தினம் ........ 97
பசி (கவிதை) ........ 101
பேண்தகு அபிவருத்தி / நிலைத்துநிற்கும் அபிவிருத்தி ........ 102
எமது பாடசாலையில் பேண்தகு அபிவிருத்தித் திட்டம் ........ 106
பாடசாலையின் அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திக்குழுவின் ....... 107
தரம் 13 வரை உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் ........ 112
மீண்டும் (கவிதை) ........ 116
மனிதனாக வாழ வழிகள் ........ 116
வெற்றிபெற படிப்பது எப்படி? ........ 117
*Autumn (Peom)* ........ 117
உளவியல் தொடர்பாக அறியவேண்டியது ........ 118
மனதை அடக்க........ 118
நீங்கள் இந்த ஜாதிக்காரரா? ........ 118
ෙයා ආදර මගේ අම්මා (கவிதை) ........ 119
*Words to use instead for 'Very'* ........ 119
දුටු ගැමුණු රජතුමා ........ 120
"உ" இல் தொடங்கும் பொன்மொழிகள் ........ 120
සිය දිවිනසා ගැනීම ........ 121
போட்டி முடிவுகள் ........ 122
எமது பாடசாலை முடிவுகள் ........ 133
நன்றியுரை ........ 137



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசிலியாவின் சிட்டுக் குருவிகள்

வண்ண வண்ண சின்னச் சின்ன
சித்திரக் கனவுகளோடு
சிசிலியாவின் சிட்டுக் குருவிகளாய்
சிசிலியா அன்னையின் சின்னஞ் சிறுசுகளாய்
கல்லூரி மண்ணில் காலடி பதித்தோம்...

இறை ஆசீரோடும், பெற்றோரின் துணையோடும்
ஆசிரியச் செல்வங்களின் அன்போடும், அக்கறையோடும்
எம் கல்லூரியின் நற்பெயரை
ஊரறிய, நாடறிய, உலகறிய
கல்விச் செல்வத்தை கண்களாய்க் கொண்டு
அறிவினால் கற்றிடுவோமே...

நிகழ்கால நினைவுகளும், எதிர்கால இலட்சியங்களும்
சிசிலியாவின் சாதனைச் சிகரங்களாய் சிறந்தோங்கட்டும்.
சமூகத்தின் நற் பிரஜைகளாய்
பணிவு எனும் நற்பண்பு கொண்டு
பணிகின்றோம் அன்னையே...

உமது ஆசீரைத் தந்து
என்றும் எம்மைக் காத்து
சிசிலியாவின் சிட்டுக்குருவிகளை
அன்பினால் அரவணைத்திடும்



சு.எடா அம்றினா
தரம் - 4C

## அட்டைப்பட விளக்கம்

இலங்கை வாழ் மக்களுக்கு ஏற்படுகின்ற தொற்றாத நோய்களை குறைப்பதற்காக மேதகு ஜனாதிபதி அவர்களினால் கடந்த ஆண்டிலிருந்து பாடசாலை மட்டத்தில் நிலைபேறான பேண்தகு வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களான. **"விவசாயமும் உணவும், சிறுவர் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, போதைப் பொருள் தடுப்பு, சிறுநீரக நோய்த்தடுப்பு"** போன்றவற்றின் விளக்கப் படங்களை அட்டையில் தாங்கி நிற்பதனை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரை நேசிப்போம்



"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனினும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்றார் ஔவைப் பிராட்டியார். அரிய பிறப்பான மனிதப் பிறவியை எடுத்துள்ளோர் மனிதநேயம் மிக்க வர்களாக வாழ வேண்டும். தன்னைப் போல் பிற மனிதரையும் நேசிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

"உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" என்றார் இயேசு பெருமான். இதன் மூலம் மனிதரை நேசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எக்காலத்திலும், எவ்வேளையிலும் மக்கள் மனிதநேயம் மிக்கவர்களாக வாழ வேண்டும் என்றே எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன. மனிதராகப் பிறந்த நாம் மற்றவர்களை நேசிக்க வேண்டும், அன்பு காட்ட வேண்டும், ஆதரவாக வாழ வேண்டும். மக்களுக் குச் செய்யும் சேவை அந்தக் கடவுளுக்கு செய்யும் சேவை என உணர வேண்டும்.

இன்றைய நிலை என்ன? மனிதரை மனிதர் நேசிக்கிறார்களா? பொறாமையும், வஞ்சகமும் தலை விரித்தாடுகிறது. மற்றவர்களை எப்படி வீழ்த்தலாம்? யாரை வீழ்த்தினால் நம் வாழ்வு வளம் பெறும் என்ற சிந்தனையுடனே அலைகிறார்கள். மலர்களை நேசிக்கிறார்கள், பிராணிகளை நேசிக்கிறார்கள், பணத்தை நேசிக்கிறார்கள் ஆனால் அடுத்த மனிதரை நேசிக்கத் தவறி விடுகிறார்கள். இதுவே இன்றைய நிலை ஆகும். மனிதனாகப் பிறந்தவனிடம் மனிதநேயம் இருக்க வேண்டும். மனித நேயம் அற்றவர்கள் மனிதர்களே அல்லர்.

மனிதர்களிடையே எழும் சாதி, மதப் பூசல்களால் மனித உரிமைகள் மறுக்கப் படுவதைக் காண்கிறோம். "உயிர்களிடத்து அன்பு வேண்டும்" என்றார் பாரதியார். இந்த அன்பு இன்மையாலேயே நாம் பிறரை மதிக்கத் தவறுகிறோம். நம்மைப் போல சக மனிதரையும் கருதிக்கொண்டால் மனிதநேயம் தானே பிறக்கும். உள்ளத்தில் அன்பும், கருணையும் உண்டானால் பிறரை நாம் வஞ்சிக்கமாட்டோம். துன்பம் செய்ய மாட்டோம்.

நாம் உண்டு நம் குடும்பம் உண்டு என்ற எண்ணத்துடன் செயற்படாது நமது அயலவர்களும், நாட்டு மக்களும் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் நாம் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு அணி அல்ல மற்றுப் பிற"** என்றார் வள்ளுவர்.

எனவே மனிதராகப் பிறந்த நாம் மற்றவர்களிடம் பகைமை பாராட்டாது அன்பு காட்ட வேண்டும். அதன்மூலம் மனித நேயம் தழைக்கும். நாடும் நலம் பெறும். இந்த உண்மையை உணர்ந்து ஒவ்வொருவரும் மனித நேயம் மிக்கவர்களாக வாழ முற்பட வேண்டும். மனித நேயம் மலர்ந்தால் சமுதாய ஒற்றுமையும் அமைதியும் மலரும். வீடும் நாடும் நலம் பெறும்.



**"என்னிடம் அன்பு இல்லையேல் என்னிடம் ஒன்றுமில்லையே"** - திருவிவிலியம் -

**டேனிஷாலினி ஆன்**
தரம் - 8S

# Water our life BLOOD



**W**ater is a very useful natural resource. You can drink it pure. It's next to blood. Seventy percent of earth's surface is covered with water. It is vital for all life and helps us to survive. We use it to drink, wash, bath, cook, for transportation and to generate electricity.

We have to face many problems, like floods and drought when there's no rain for a long period. We are unable to get pure water, because all the impurities like waste, pesticides, insecticides, factory waste water, all washed by rain water falls into the river and polluts it. People too never care to keep the spring or river clean. In some places when they go on pilgrimage they litter wastes everywhere. These too would be washed into flowing water.

During rainy season low lyring areas would be flooded and the residents are forced to evacuate those places and seek shelter in close by schools. They are forced to live on relief fund with dry rations or a cooked food for some time till floods subside. Then another season comes when there's no rain for months. That will be another problem to supply them with all what they need even drinking water.

To avoid all these we must not waste water. In other countries they recycle waste water and use it for bathing and gardening. Sea water is used after purification for the drainage system. Spring water is used only for drinking purpose.



Water plays an important part in our life. We ought to use it carefully.

**Deani Shali Ann**
Grade - 8S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பிடம் கற்றுக் கொள்வோம்



ஒரு எறும்பு ஓரிடத்தில் இனிப்பு இருப்பதைக் உணர்ந்தால் சுயநலமாக அப்படியே சாப்பிட்டு விடுவதில்லை. (சீனி / இனிப்பு) இருக்கும் இடத்திற்கு மேலே பத்து பதினைந்து எறும்புகளை சேர்த்துக் கொண்டு வந்து உண்ண ஆரம்பிக்கும். எறும்பு போன்ற மிகச் சிறிய உயிர்களும் கூடத் தாராளமான மனதுடன் இருப்பதைப் பாருங்கள்.

நாம் எறும்பைவிட "உயர்ந்த பிறவி" என்று எண்ணினால் மட்டும் போதாது. அதற்கான உயர்ந்த குணமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

**எறும்புகள் ஏன் வரிசையாகச் செல்கின்றன?**

எறும்புகள் ஒரு வகையான வேதிப்பொருளை சுரக்கின்றன. இந்த வேதிப் பொருளைகொண்டு தேய்த்து வரைந்த கோட்டில் மட்டும் எறும்புகள் செல்வதனால் தான் அவை வரிசையாகச் செல்கின்றன. இவை வாசனையை அறிந்துகொள்ளும் திறமை வாய்ந்தவை. இந்த அறிவு அவற்றிற்கு உணவு தேடுவதற்கு பெரிதும் உதவுகிறது. இது சுரக்கும் வேதிப்பொருளின் பெயர் "பெரோமோன்". இது தான் மற்றைய எறும்புகளுக்கு வழிகாட்டுகிறது. இதனைக்கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்கின்றது. நாமும் பிறர் கல்வி கற்கவும், வாழவும் எமது உணர்வுகளை தாராள மனதுடன் கொடுத்திடுவோம்.

நன்றி!



**அனட் யுனிட்டா**
தரம் - $4^{C}$

## பொலித்தீன் பாவனை இனி வேண்டாம்



பொலிவுடனே பூமி செழிக்க
பொலித்தீன் பாவனை இனி வேண்டாம்!

பாழடைந்து வரும் பூமியை பாதுகாக்க
பொலித்தீன் பாவனை இனி வேண்டாம்!

வளமிக்க இப்பூமிதனிலே வளமுடன் வாழ
பொலித்தீன் பாவனை இனி வேண்டாம்!

நோய்களற்ற மானிடரை உருவாக்கும் நோக்கத்தினால்
பொலித்தீன் பாவனை இனி வேண்டாம்!

அழியாத அகம்பாவம் கொண்ட,
பொலித்தீன் பாவனை இனி வேண்டாம்!!!



**இ.நிருஷினி**
தரம் - $4^{T}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினா



(1) ஆதர் சி கிளாக் பிறந்த நாடு
**- இங்கிலாந்து**

(2) வாசனைத் திரவியங்களின் அரசன் யார்?
**- மிளகு**

(3) அண்மையில் "கட்டாய ஒரு பிள்ளை கொள்கையைத்" தளர்த்திய நாடு எது?
**- சீனா**

(4) உலகில் இராணுவம் இல்லாத நாடு எது?
**- ஐஸ்லாந்து**

(5) போரும் சமாதானமும் என்ற நூலை எழுதியவர்?
**- லியோ டோல்ட்வோய்**

(6) உலகிலேயே நீண்ட கடற்கரையைக் கொண்ட நாடு எது?
**- சிலி (தென் அமெரிக்கா)**

(7) புனித பூமி என அழைக்கப்படும் நாடு எது? **- பாலஸ்தீனம்**

(8) ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்திய மறு மலர்ச்சி மனிதன் என அழைக்கப்படுபவர் யார்? **- லியனாடோ டாவின்சி**

(9) இரு கண்டங்களுக்கிடையில் அமைந்துள்ள முக்கிய நகரம் எது? **- இஸ்தான்புல்**

(10) இரசாயனங்களின் அரசன் என அழைக்கப் படுபவன் யார்? **- சல்பூரிக்கமிலம்**



**ர.கிஷோபிக்கா**
தரம் - 6T

# விடுகதைகள்

(1) சீருடை இல்லாத காவலாளி, சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
**- நாய்**

(2) நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப் பிடிக்க ஆளில்லை. அவன் யார்?
**- கடிகாரம்**

(3) தீக்குளித்துச் சாகிறவன் காற்றுக் குளித்தும் சாவான் அவன் யார்?
**- கற்பூரம்**

(4) முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தைப் பளிச்சென்று காட்டுவான் அவன் யார்?
**- கண்ணாடி**

(5) வில்லாய் வளைபவன் ஒருபோதும் உடைந்து போகமாட்டான். அவன் யார்? **- நாணல்**

(6) அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமி ஆகும். அது என்ன?
**- தலைமுடி**

(7) மின்சாரம் இல்லாத வேளையிலும் எரிவான். அவன் யார்?
**- சூரியன்**

(8) இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக் கொள்ள வேண்டும் அவன் யார்? **- ஏணி**

(9) வளமாய் வளர்ந்த மரம் வாசற்காலுக்கு உதவாத மரம் அது என்ன?
**- வாழை மரம்**

(10) மழைக் காலம் வந்து விட்டால் மகராசி பாட்டுப் பாடுவான். அவன் யார்? **- தவளை**



**ம.பிரணயா**
தரம் - 4E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில் - கவனி - முன்னேறு

✱ ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல் வார்த்தை நல்லது.

**-புத்தர்-**

✱ மன ஆரோக்கியத்திற்கு சிறந்த மருந்து மௌனத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

**-கதா-**

✱ தேவையில்லாத போது வாயை மூடிக் கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்வதை தீப்பொறி எழச் சொல்லுங்கள்.

**-பெஞ்சமின் பிராங்கிளின்-**

✱ ஒருவரிடமிருந்து வரும் பதில்களை விட, அவனிடம் எழும் கேள்விகளே அவனது புத்திசாலித்தனத்தைக் காட்டும்.

**-வால்டேர்-**

✱ எண்ணங்களை ஓவியமாகத் தீட்டிக் காட்டுவதே பேச்சு.


**-காண்டேகர்-**

✱ ஒழுக்கமும் தன்னம்பிக்கையுடன் கூடிய ஆற்றலுமே மதிப்புள்ள முதலீடுகள்.

**- போல்ட் விட்மன்-**

✱ தோல்வியிலும் மனம் தளர்ந்து வீழ்ந்துவிடாமல் எழுந்து நிற்கும் தன்மையைப் பெறுபவனே உலகின் வெற்றியாளனாகத் திகழ்வான்.

**-இளங்கர் சால்-**



**நி.கிறிஸ்டலின் கியூறிக்கா**
தரம் - 5E



# திருக்குறளின் அதிசயங்கள்

✦ திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

✦ திருக்குறளிலுள்ள மொத்த எழுத்துக்கள் **42,194.**

✦ திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 இல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை.

✦ திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் – **அனிச்சம், குவளை**

✦ திருக்குறளில் இடம்பெறும் இரு மரங்கள் – **பனை, மூங்கில்.**

✦ திருக்குறளில் இடம்பெறும் ஒரேயொரு பழம் – **நெருஞ்சிப்பழம்.**

✦ திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை – **குன்றிமணி**


✦ திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் – **ஒன்பது (9)**

✦ திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து – **னி (1705 தடவைகள்)**

✦ திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் **- ளீ, ஙு**

✦ திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.

✦ திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.



**ச.அபிஷன்யா**
தரம் - 4S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுகதை

# தன்னம்பிக்கை

மிகப் பெரிய சக்கரவர்த்தி அவன். அவனுக்குக்கீழ் பல சிற்றரசுகள் உள்ளனர். ஒருமுறை அந்த அரசனின் அவைக்கு வருகை தந்த சீன தேசத்தைச் சேர்ந்த அறிஞர் ஒருவர் தாயை இழந்த இரண்டு பஞ்சவர்ணக் கிளிகளைப் பரிசளித்து விட்டு சென்றார். பஞ்சவர்ணக்கிளியை அதிர்ஷ்டத்தின் சின்னமாகக் கருதுவர் என்பதால் அரசன் மிகவும் அகமகிழ்ந்து தனது நாட்டின் பறவைகள் பயிற்சியா ளரை அழைத்து "இவற்றை நல்ல முறையில் பராமரித்து பழக்கப்படுத்தி பறப்பதற்குப் பயிற்சியளியுங்கள்!" என்று கட்டளையிட் டான். மாதங்கள் உருண்டோடின. பறவை கள் எப்படி வளர்கின்றன? நன்றாகப் பறக் கின்றனவா? என்று தெரிந்துகொள்ள பயிற்சியாளரை அழைத்தான் மன்னன்.

"அரசே... இரண்டு பறவைகளில் ஒன்று நன்றாகப் பறக்கக் கற்றுக்கொண்டுவிட்டது. மற்றொன்று எவ்வளவோ முயற்சித்தும் அது அமர்ந்திருக்கும் கிளையை விட்டு நகர மறுக் கிறது" என்றான். உடனே மன்னன் தனது நாட்டில் பிரசித்திபெற்ற கால்நடை மருத்துவர் களையும், பறவையியல் நிபுணர்களையும் அழைத்து, "பறவைக்கு என்ன ஆயிற்று? அது ஏன் பறக்க மறுக்கிறது?" என்று ஆராயு மாறு கட்டளையிட்டான். அவர்களும் அதை முற்றிலும் பரிசோதித்துவிட்டு, "இந்தப் பறவையிடம் எந்தக் குறையுமில்லை, உடலில் ஊனமும் இல்லை. ஆனால் அது ஏன் பறக்க மறுக்கிறது என்று புரியவில்லை அரசே" என்றனர்.

உடனே தனது அமைச்சரை அழைத்து, "என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ தெரியாது. இந்தக் கிளி இன்னும் இரண்டு நாளில் பறக்க வேண்டும்" என்றான் கண்டிப் புடன். சில நாட்கள் கழித்து ஒருநாள் தனது மாளிகையின் உப்பரிகையில் இருந்து பார்க்கிறான். கிளி அதே இடத்தில் தான் உட்கார்ந்திருந்தது. நகரவேயில்லை. மன்னனுக்கு என்னவோ போலிருந்தது. "இதற்கு என்ன ஆயிற்று? ஏன் பறக்க மறுக்கிறது என்று தெரியவில்லையே? நாட்டுப் புறத்திலுள்ள வயலில் வேலை செய்யும் விவசாயிகள் அல்லது மூத்த குடிமக்கள் எவரையேனும் அணுகி இதுபற்றிக் கேட்க வேண்டும். அவர்களுக்கு ஒருவேளை இது பறக்க மறுப்பதன் காரணம் தெரிந்திருக்கலாம்" என்று கருதி, உடனே காவலர்களை அழைத்து "நாட்டுப்புறத்திற்குப் போய் யாரேனும் ஒரு மூத்த விவசாயி ஒருவரை அழைத்து வா" என்று கட்டளையிட்டான். அடுத்தநாள் காலை கண்விழிக்கும் போது அந்தப் பஞ்சவர்ணக் கிளி மரத்தைச் சுற்றி அங்குமிங்கும் பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அவனுக்கு ஒரே சந்தோஷம். "இந்த அற்புதத்தைச் செய்த வரை உடனே அழைத்து வாருங்கள்!" என்றான். அந்த விவசாயி மன்னன் முன்பு வந்து பணிந்து நின்றார். "எல்லோரும் முயற்சி செய்து தோற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட நிலையில், நீ மட்டும் கிளியை எப்படிப் பறக்கச் செய்தாய்?" மன்னன் முன் தலை வணங்கியபடி விவசாயி சொன்னார்... "அது சுலபமான காரியம் அரசே! மரத்தில் ஏறி அந்தப் பறவை உட்காந்திருந்த கிளையை நான் வெட்டிவிட்டேன் வேறொன்றுமில்லை!" என்றார்.

இறைவனும் சில சமயம் அந்த விவசாயி போல, நம்மை நமது சக்தியை உணரச் செய்யவேண்டி, நாம் அமர்ந்திருக்கும் கிளையை வெட்டி விடுவான். அது நமது நன்மைக்கே. நம் சக்தியையும், ஆற்றலையும் நாம் உணர வேண்டும் என்று கருதி நம்மை உயர்த்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். நாம் அனைவரும் உயரப் பறப்பதற்குப் படைக்கப்பட்டவர்கள். ஆனால் பல சமயங்களில் நாம் நமது சக்தியை உணராமல் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு பழக்கப்பட்ட வேலைகளை மட்டும் செய்கின்றோம். நாம் சாதிக்கக்கூடியவை எண்ணற்றவை. முடிவற்றவை. ஆனால் நம்மில் பலருக்கு அது கண்டுபிடிக்கப்படாமலே போய்விடுகிறது.

**"முயலும் முன்னுக்கு வரலாம், ஆமையும் முன்னுக்கு வரலாம். ஆனால் முயற்சி செய்யாமல் முன்னுக்கு வர முடியாது"**



**ஜதுஷினி கசியன் பிறின்ஸ்டன்**
தரம் - 6T

## நிலைத்திருக்கும் நினைவுகள்....



தோள்களில் கனமான சுமைகள்
மனங்களில் வீட்டு நினைவுகள்
கனப்பொழுதில் மறைந்து விடுகின்றன
பள்ளியில் காலடி வைக்கும் போது.....
பட்டப் பெயர் சொல்லி
பகிடிகள் செய்தும்
பட்டத்தைப் பெறுவதும் ஒரேயிடம்
பள்ளிக்கூடமே.....
ஒரு உணவுப் பொதியினுள்
ஒன்பது கைகள்
ஒன்றாய் உண்ட
உன்னத நினைவுகள்
மறையாது மனதிலிருந்து.....
வீட்டு வேலை செய்யாது
வகுப்புக்கு வெளியே
வரிசையாக நின்ற அனுபவம்
வார்த்தைகளால் விவரிக்க முடியாதது.....
ஆட்டம் பாட்ட மென
ஆயிரம் கலைகள் தந்த
அந்த வகுப்பு
அழியாத பல அனுபவங்களையும் தந்தது.....
நாளையொரு நாள் பிரியப் போகிறோம் - ஆனாலும்
பிரிவுக்காய் வருந்தவில்லை - ஏனெனில்
இன்று ஒன்றாய் இருக்கின்றோம்.....
காலங்கள் கடந்தாலும் இந்த
கடந்து வந்த நாட்கள்
நீங்கா நினைவுகளாய்
நிலைத்திருக்கும் எம் மனதில்



**D.T.சோபியாஞ்சலி**
தரம் - 10L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புளோரன்ஸ் நைட்டிங்கேள்

புளோரன்ஸ் நைட்டிங்கேள் என்பவர் மே 12 1820ம் ஆண்டு பிறந்தார். இவர் இங்கிலாந்தில் ஏற்பட்ட போரில் காயப்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டார். தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் அவரே முதலில் ஆரம்பித்தார். இவர் 'விளக்கேந்திய சீமாட்டி, கைவிளக் கேந்திய தாரகை' என்று அழைக்கப்பட்டார். இவரது தாய்நாடு இங்கிலாந்து ஆகும். இவர் பராமரிப்புச் செயலில் கவனம் மற்றும் மருத்துவமனை மேலாண்மை என்பவற்றை கடைப்பிடிப்பதன் மூலம் அனைத்துத் தாதியருக்கும் முன்மா திரியாகத் திகழ்ந்தார். தாதிய பயன்பாட்டில் இவர் தனது காலத்தினைவிட முற்போக்கான சிந்தனை மற்றும் செயற் பாட்டிற்குடையவராக நைட்டிங்கேல் தாதியர் செயற்பாட்டிற்கான பயிற்சிக்கூடம் ஒன்றில் இன்றும் சேவை தொடங்குகின்றது.

புளோரன்ஸ் நைட்டிங் கேலில் அருங்காட்சியகம் ஒன்று லண்டனிலும் உள்ளது. இவரது வீடான கிளெய்ன்டன் ஹவுசிலும் உள்ளன. உலகத்தாதியர் தினம் அன்றே புளொரன்ஸ் நைட்டிங் கேலின் பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. KLM விமான நிலையம் தங்கள் எம்.டி.வம்.டி (MT-11) விமானமொன்று புளோரன்சின் பெயரில் உள்ளது. இஸ்தான்புள்ளிலுள்ள அகஸ்டினா ஜெமலி மருத்துவ நிலையம் (இத்தாலியில் முதல் பல்கலைக்கழக சார் மூலம்) உள்ளது. புளோரன்ஸ் நைட்டிங்கேல் 08.1910 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார்.

# Reading for a better life



*"Reading makes the full man" said Sir Bacon. Reading books gives us knowledge. Reading develops our minds. You need a healthy mind for reading.*

*We can read not only books but also newspapers, magazines and notices. We must select good books for reading. Then our future will be fruitful. Like a swan that seperates milk from water we should select good books to read.*



*To improve the reading skills, we must gradually increase our speed. Speed readers can learn a lot within a short time Reading helps us to manage the time. Therefore reading is very essential, for a fruitful life.* ***Thank you.***

M.Dorika Sulari
Grad 7T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Women's Rights in Islam



**(A) Mother's rights**

(1) Showing devotion to her, Allah says and your Lord has decreed that you should not worship any expect him (Only) and showing fairest companionship to Parents (Al- Isra) (17.23 Alquran)

(2) Showing her a good company, Allah says but accompany them I (this) world with approptiate kindness (Luqman) (31.15 Alquran)

(3) Obeying her, spending on her and endeavoring to satisfy her.

**(B) Girl's rights**

(1) Treating both girls and boys fairly regarding affection and presents.

(2) To regard girls as good women.

(3) Showing them kindness and being patient with them.

**(C) Wife's rights**

(1) Dowry

(2) Spending on her with beneficence.

(3) Housing and clothing her.

(4) Showing concern for her.

(5) Inspiring her with religious teaching

(6) Forgiving her slight faults and not intentionally looking for them.



**M.M. Zeenath Shuufana Marzook**
Grade - $7^{L}$

# 7 secrets of success

**I found the answers in my room**

Roof said – Aim high
Fan said – Be Cool
Clock said – Every minute is precious
Mirror said – Reflect before you act
Window said – See the world
Calender said – Be Up - to - date
Door said – Push hard to achieve your goals.

## Before You Speak Think

| | | |
|---|---|---|
| **T** | - | Is it true? |
| **H** | - | Is it helpful? |
| **I** | - | Is it inspiring? |
| **N** | - | Is it necessary? |
| **K** | - | Is it kind? |



**P.Nisharika Senuri**
Grade $7^{S}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான உணவு



உயிர் வாழும் அனைவருக்கும் உணவு அத்தியாவசியமாகும். உடலிற்கு தேவையான அளவை மாத்திரமே உண்ண வேண்டும். உடலிற்கு அவசியமான உணவுகள் பிரமிட்டின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய உணவுப் பிரமிட்டிற்கமைய சக்தியைத் தரும் உணவு, மரக்கறிகள், பழங்கள், புரதம், பட்டர், சீஸ் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வுணவுகளில் எந்த விகிதத்தில் உண்ண வேண்டும் என புதிய உணவு பிரமிட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த புதிய உணவுப் பிரமிட்டில் உடற்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளது இன்னொரு முக்கிய அம்சமாகும். அதாவது ஆரோக்கியமான வாழ்விற்கு உணவைப் போன்றே உடற்பயிற்சியும் அவசியமானதாகும் என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக மாறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட விகிதத்தில் உணவைப் பெற்றுக்கொள்ள முடியுமாயின் ஆரோக்கிய மாக வாழ முடியும். ஆனால் எமது பலவீன மான உணவுப் பழக்கவழக்கத்தினால் நோய்களை விருந்திற்கு அழைப்போர் அதிக மாக உள்ளனர். சரியான போசனைகள் கிடைக்காத போது அது மந்த போசனையில் அல்லது தீராத பிணியில் போய் முடிந்து விடும். போசணைகள் குறைந்த அளவில் கிடைக்கும் போது உடல் வளர்ச்சி குறைதல், உயரத்திற்கேற்ற நிறையின்மை, போசனை பற்றாக்குறை, தொற்று நோய்களினால் இலகுவாகப் பாதிக்கப்படல், வெளிறல், சோம் பறித்தனம் போன்றவற்றை நாம் அவதானிக்க முடியும். இவர்களினால் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பங்களிப்பு மிகக் குறைவாகக் காணப்படும். இவர்களைச் சுகப்படுத்த மருந்துகளிற்கு அதிகளவில் செலவிட வேண்டியுள்ளது.

மறுபுறம் பார்க்கும் போது அதி போசனையாகக் கருதப்படும் தேவைக்கதிகமாக உண்ணும் போது அதிகரித்த உடற்பருமன், நீரிழிவு, அதிகளவான குருதி அமுக்கம், சிறு நீரக நோய்கள் போன்றவற்றினால் மானிட வாழ்வு விடை பெற்றுவிடவும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவேதான் போசணைத் தேவைக்கமைய உணவைப் பெறல் வேண்டும். புதிய பிரமிட்டில் குறிப்பிட்டவாறு அதிகளவில் உடற்பயிற்சி யில் ஈடுபடும்போது உடலிலுள்ள மேலதிக மான சக்தி எரிக்கப்பட்டு, அங்கங்களின் செயற்பாடும் கட்டுப்படுத்தப்படும்.

அரிசியும், அரிசியிலிருந்து தயாரிக் கப்படும் உணவையும் உட்கொள்வது பாணை உண்பதைவிடச் சிறப்பானதாகும். பாண் விரைவாக சமிபாடடைவதால் குருதியில் சீனியின் அளவு விரைவாக அதிகரிக்கும். தொடர்ச்சியாக இவ்வாறு சீனியின் அளவு





அதிகரிக்கும் போது அதனைக் கட்டுப்படுத்து வது கடினமானதாகும். இது நீரிழிவுக்கு வழி கோலும். குருதியில் தொடர்ச்சியாக சீனியின் மட்டம் அதிகளவிற் காணப்படும் போது இருதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். பின்னர் இது சிறுநீரகத் தையும் ஆக்கிரமிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே தான் எமது உணவை முறையாகக் கட்டுப்படுத்த முடியாத போது நாம் என்றுமே நோயாளியாக மாற வேண்டிய நிலை ஏற்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். மேற்குறிப்பிட்ட நோய்கள் ஏற்படுவதற்கு மரபணுக்களும் காரணமாக அமைந்தாலும் கூட உணவுப் பழக்கவழக்கங்களும் இவற்றில் அதிகளவான செல்வாக்கினைச் செலுத்துகின்றன.




நாம் உண்ணும் போது போசணைகள் கிடைத்தாலும், எம்மை அறியாமலே நச்சு இரசாயனங்கள் உடலிற் சேருவதாக பலர் அச்சம் கொள்ளுகின்றனர். அதிகளவில் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது எம்மை அறியாமலே நச்சுப் பொருட்கள் எமது உடலிற் சேரலாம். இதனால் பல்வேறு வகையான தொற்றா நோய்கள் ஏற்படலாம். எனவே இதனையிட்டும் கவனஞ் செலுத்த வேண்டும். பீடைநாசினிகளை விசிறும் போது மிகவும் கவனமாயிருக்க வேண்டும்.எப்போதும் சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளையே இடல் வேண்டும். பீடைநாசினிகளை விசிறி குறிப்பிட்ட காலத்தின் பின்னரே அறுவடை செய்தல் வேண்டும்.

நன்றாகக் கழுவிய பின்னர் சமைத்தால் பெரும்பாலான நச்சுப் பொருட்களை அகற்றிக்கொள்ள முடியும். ஆரோக்கியமான உணவை உறுதி செய்வதற்கு, எமது போசணைத் தேவைக்கமைய உணவுகளை உட்கொள்ள வேண்டும். உணவுப் பொருட்களில் நச்சுக்கள் கலந்திருக்கவில்லை என்பதையும் உறுதிசெய்து கொள்ள வேண்டும். இதன்மூலம் எமது உணவு ஆரோக்கியமானது என்பதை நாமே உறுதி செய்து கொள்ள முடியும்.



**ர.ஹர்னியா**
தரம் - 8T

## பெற்றோரைப் பேணும் பாடல்



தாயின் மறு பெயர் அன்பு
தந்தையின் ஓர் வடிவம் பொறுப்பு
இவ்விரு உறவுகளின் இலட்சணம் பாசம் என்றால்
இவர்களில்லாமல் நாம் இல்லை!

அன்பின் உறைவிடம் தாய்
அறிவின் புகலிடம் தந்தை
பொறுமையின் புகழாரம் பெற்றோர் என்றால்
பெற்றவரை மதிப்பதே எம் கடமை!

புத்தி புகட்டுபவன் ஆசான்
பொருளைக் கொடுப்பவன் தந்தை
நம்பிக்கையை வளர்ப்பவர் இறைவன் என்றால்
நம்மைப் பெற்றவர்களும் தெய்வங்களே!

கேட்டதைக் கொடுப்பவள் தாய்
கெட்டழியாமல் பார்ப்பவர் தந்தை
நல்லவன் ஆக்குபவர்கள் இவர்களே என்றால்
நாம் என்று வணங்குவோம் எம் பெற்றோரை!



**விட்டாலின் ஹெட்லின் அவுஸ்கோன்**
தரம் - 3T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை மகத்துவம்



மூலிகையின் பெயர் - **எள்ளுச் செடி**

பயன் தரும் பாகங்கள் - **விதை, பூ, இலை**

**வளரும் இயல்பு :-** எள்ளுச் செடி எல்லா விதமான மண்ணிலும் வளரக்கூடியது. வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தன்மையும், மண்ணிலுள்ள தேவையற்ற களைகளையும் அழித்து வளரக்கூடிய தன்மையும் இவ் எள்ளுச்செடிக்கு உண்டு.

**செடியின் தோற்றம் :-** எள்ளுச் செடி கிட்டத்தட்ட 50 தொடக்கம் 100 செ.மீ உயரம் வரை வளரும். இச்செடியானது வெண்மையான பூக்களைக் கொண்டது. மற்றும் அதன் பூக்கள் காய்களாக மாறும்.

ஒரு காயில் சுமார் 100 விதைகள் காணப் படும். இதன் விதைகள் கறுப்பு நிறமாக இருக்கும்.

**மருத்துவப் பயன்கள் :-**

- ஒரு கோப்பைப் பாலிலுள்ள கல்சியச் சத்து ஒரு கையளவு எள்ளில் உள்ளது. பால் விருப்பமில்லாத குழந்தைக ளுக்கு ஒரு எள்ளுருண்டை கொடுத் தால் கல்சியச் சத்து கிடைத்து விடும்.
- இரத்தக்காயம் ஏற்பட்டால் அவ்விடத் தில் எள்ளை மாவாக்கித் தேனுடன் கலந்து தடவினால் காயம் விரைவில் குணமடையும்.
- எள் இரத்தத்தில் கொலஸ்ரோல் அளவைக் குறைக்கின்றது.நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கின்றது.
- எள்ளிற்குப் புற்று நோய் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றலும் உள்ளது.
- மூட்டுவலி உள்ளவர்கள் எள்ளைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மூட்டுக் களிலுள்ள வலியும், வீக்கமும் குறையும்.
- எள்ளிலுள்ள கல்சியச் சத்து மூட்டுக் களுக்குப்பலத்தைக் கொடுக்கின்றது.
- சைவ உணவை உண்பவர்கள் தங்களது உணவில் எள் சேர்த்து உண்டு வந்தால் அசைவ உணவில் கிடைப்பதைவிட அதிகளவு இரும்புச் சத்தைப் பெறலாம்.
- எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண் ணையைத் தொடர்ந்து உணவில் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் மெலிவான தோற்ற முள்ள குழந்தைகள் கொழுகொழுவென்று அழகான தோற்றத் துடன் வளர்வர்.



அ. ஆத்மிகா
தரம் - 5T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பக் கல்வியில் பெற்றோர் பங்களிப்பு

ஒரு கட்டிடத்தின் உறுதிப்பாடு அதன் அடித்தளத்திலேயே கட்டியெழுப்பப் படுவது போன்று "பிள்ளையின் ஆற்றலும், ஆளுமையும் குழந்தைப் பருவத்திலேயே வளர்க்கப்பட வேண்டும்" இதைத் தீர்மானிப் பது சிறுவயது வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் வீட்டுப் பின்னணியும், ஆரம்பக் கல்வியும் என்பது பல கல்வியாளர்களால் ஆணித்தரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண் மையாகும். அலிஸ் ஸ்ரேரிங் ஹொனிக் (Alice Staring Honig) என்ற குழந்தை நல னுக்காக அமெரிக்கப் பேராசிரியர் "குடும்பம் என்ற பள்ளியிலே முன்மாதிரியான ஆசிரியர் பெற்றோர்களே" என்று கூறுவது பெற்றோர் பங்களிப்பு பிள்ளையின் கற்றலுக்கு எத்துணை அவசியமென்பதை விளக்குகிறது. மற்றுமொரு அமெரிக்க சமூகவியலாளரான ஹென்றி வேர்ட் வீச்சட் (Henry Word Beacher) "பெற்றோரின் அன்புக்கும், நட்புக்கும் இவ் வுலகில் இணையாக வேறெதுவும் இருக்க முடியாது, எனவே அவர்களே முதல் ஆசிரியர்களும் ஆவர்" என்பதைத் தெளிவு படுத்துகிறார். இவ்வாறாக இன்னும் பல ஆய்வுகளை நாம் பார்க்கும் போது ஆரம்பக் கல்விக்கு பெற்றோர் பங்களிப்பு மிக மிக அவசியமாகின்ற உண்மையைத் தெட்டத் தெளிவாக்குகின்றது.

கல்வியல் ஆராய்ச்சியாளரான முல்லர் தனது ஆராய்ச்சியின் பயனாக பல முக்கி யமான முடிவுகளை தன் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். "பெற்றோரின் பங்க ளிப்பு என்பது கல்வியல் போக்கில் புதிய பரிணாமத்தை உண்டுபண்ணியிருக்கிறது" என்பதை அண்மையில் நிரூபித்துள்ளார். அவரது கருத்துப்படி "பாடசாலை என்ற நான்கு சுவருக்குள் இருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கையானது குடும்பம் என்ற சமூகமயமாக்கலை உள்வாங்கி, கல்வியல் நடவடிக்கை அகல விரிந்து செல்கிறது" எனக் கூறுகிறார். இதன் மூலம் கல்வியில் பெற்றோர் பங்களிப்பானது பிள்ளையின் அடைவு மட்டத்தில் பாரிய முன்னேற்றத்தை உண்டுபண்ணக் கூடியது என ஆராய்ந்து நிரூபித்துக் காட்டியிருக் கிறார். ஆரம்பக் கல்வி, குழந்தைகளின் தவணைப் பரீட்சைத் தேர்ச்சி மட்டங்கள் இன்று அதிகரித்துக் காணப்பட்டிருப்பதற்கு பெற்றோரின் ஊக்கமான பங்களிப்பும் ஒரு காரணமாகிறது. இரண்டாவதாக முல்லர் நிரூபித்த விடயம் எமது பிராந்திய கல்விக்கு மிகப் பொருத்தமாகிறது. அவரது ஆராய்ச் சியில் கிராமப் பகுதிகளில் பாடசாலை இடைவிலகல் (Dropout) விகிதம் குறைந் துள்ளது. இதன் உண்மைத் தன்மையை கல்வியாராய்ச்சி புள்ளிவிபரவியல் காட்டி நிற்கின்றது.

பெற்றோர் சிறந்த எடுத்துக் காட்டாக பிள்ளைகளுக்கு இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையைலயித்தல், ஒன்றாகப் பிள்ளையுடன் பொழுதைக் கழித்தல், ஒன்று சேர்ந்து வாசித்தல், சமைத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுடன் பெற்றோர் ஒன்றித்திருக்க வேண்டும். மற்றும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்தலுடன் பெற்றோர் பொறுப்பு முடிந்துவிடப் போவதில்லை. அங்கு எமது பிள்ளை யாருடன் பழகுகின்றனர்? எவ்வாறான நண்பர்களை தேடிக் கொள்கின்றனர்? எவ்வாறு கல்வி கற்கின்றனர்? போன்ற விடயங்களை ஆராய்ந்து, அறிந்து வழிப் படுத்த வேண்டும். ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களுடன் சுமுகமான தொடர்பை வைத்திருப்பதுடன், வீட்டிலும் கற்றலுக் கான நேர இடங்களை ஒழுங்குபடுத்தி ஆரம்பப் பாடசாலை, கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை பெற்றோர் இலகுபடுத்துப வராக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக கற்றல் பொறி முறைகளையும் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். சில குழந்தைகள் மாதிரிகளையும், உதாரணங்களையும் அதிகம் அவதானித்து கற்றல் நடவடிக்கையில் ஈடுபட, வேறு சில குழந்தைகள் கட்புல காட்சிப் படிமங்கள் சார் கற்கையில் அதிக நாட்டம் காட்டுப வர்களாக இருப்பர். மேலும் ஒரு குடும்பத் தைச் சேர்ந்த குழந்தைகள் ஒரே வகையான கற்றல் பொறிமுறையில் ஈடுபடமாட்டார் கள். இவ்வாறான கற்றல் பொறிமுறை வேறுபாட்டை அறிந்து, அதற்கு ஏற்ற முறையில் கற்றல் நடவடிக்கைகளை நெறிப்படுத்தல் பெற்றோரின் தலையாய கடமையாகும்.

பாடசாலையில் பிள்ளை கற்று வருவதை மீளாய்வு செய்து, திட்ப நுட்பமாக, கற்றுவந்ததை *(Acuracy)* திறமை சார் சிறப்புத் தேர்ச்சி முறையில் அடைவுமட்டத்தை அடைய *(Fluency)* வீடு ஒரு களமாக அமைய வேண்டும். ஆசிரியரால் வழங்கப்படும் மேலதிக பயிற்சிகளை வீட்டிலே செய்யத் தகுந்த சூழலை ஏற்படுத்தி, மேலதிக கற்றலுக்கான பிரத்தியோக வசதிகளை ஒழுங்குபடுத்து வதும் பெற்றோரது பங்காகும்.

மொழித் திறன்களில் ஒன்றாக வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்த, அறிவு ஆற்றல் சார் நல்ல விடயங்களை வீட்டில் வாசிக்க, கேட்கத் தூண்டும் காரண கர்த்தாக்களாக பெற்றோர்கள் இருக்க வேண்டும். உரத்து வாசிக்க விடல், அதைப் பற்றி வினவுதல், வாசித்த விடயம் பற்றி கலந்துரையாடல், அதில் இடம்பெற்ற அருஞ்சொற்பதங்களை அறியவும் தூண்டுகோலாக பெற்றோர்கள் இருக்க வேண்டும். பிள்ளைகள் பாடசாலையில் கற்றதை அவர்களது வாழ்க்கையோடு தொடர்புபடுத்தக் கூடியதாக அமையுமிடத்து கற்றல் சூழல் வீட்டில் வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு வாய்ப்பாகிறது.

பிள்ளையின் மனவெழுச்சியை சமநிலை செய்து, காத்திரமான ஒரு கற்றல் நடவடிக்கைக்கு நகர்த்தும் காரண கர்த்தாக்களாக பெற்றோர் இருக்க வேண்டும். மாறாக மன அழுத்தத்தை உண்டு பண்ணும் கற்றல் முறையைத் திணிக்காது தமது குழந்தையின் அறிவையும், ஆற்ற லையும், திறமையையும் கருத்திற்கொண்டு ஏனைய குழந்தைகளோடு ஒப்பிட்டு எடை போடுவதைத் தவிர்ப்பதுடன், பிள்ளையின் ஆற்றலையும், திறமையையும் இனங்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மேலும் வளர்க்க, சிறப்புத் தேர்ச்சி பெற பெற்றோர்கள் உதவிபுரிய வேண்டும்.

**எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே – அது**
**நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே...''**

என்பதற்கிணங்க கல்விப் போக்கில் புதிய பரிணாமத்தை உண்டு பண்ணவும், பிள்ளையின் கல்விக்கு சிறந்த எடுத்துக்காட்டாக பெற்றோர்கள் இருப்பதும், பிள்ளையின் கற்றல் பொறிமுறையை அறிந்து அவர்களை நெறிப்படுத்துவதும், பாடசாலையில் கற்று வருவதை மீளாய்வு செய்து அவர்களது அறிவை மென்மேலும் வளப்படுத்துவதும், பிள்ளையின் மன வெழுச்சியை சமநிலை செய்து அவர்களை காத்திரமான கற்றலுக்கு இட்டுச் செல்லும் பெற்றோர் ஆரம்பக் கல்விக்கு அச்சாணியாக இருப்பதற்கு சிறந்த உதாரணமாகும். எனவே ஆரம்பக் கல்வியில் குழந்தைகள் ஆர்வம் காட்டவும், அதில் முழுமையாக ஈடுபட்டு சிறந்த தேர்ச்சியைப் பெறவும், ஆசிரியர்களது கற்பித்தலோடு பெற்றோர் பங்களிப்பும் அவசியமாகிறது. இதனை உணர்ந்து செயற்படும் பெற்றோர் குழந்தைச் செல்வத்தின் பிரகாசமான வாழ்விற்கு பாத்திரவான்களாவார்கள் என்பதில் ஐயமில்லை.



**திருமதி. ம. இதயராஜ்**
**B.A (EUSL), PGDE (OUSL)**

## பாடசாலை மாணவ மாணவியர் ஏற்க வேண்டிய உறுதி மொழிகள்




- நான் வாழ்வில் நல்லதொரு இலட்சியத்தை மேற்கொள்வேன்.
- நன்றாக உழைத்துப் படித்து வாழ்க்கை இலட்சியத்தை அடைய முயல்வேன்.
- எனது விடுமுறை நாட்களில் எழுதப் படிக்க முடியாமல் கல்வியில் பின்தங்கிய 5 பேருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பேன்.
- எனது வீட்டில் அல்லது பாடசாலையில் குறைந்தது 5 செடிகளை நட்டு வைத்து பாதுகாத்து மரமாக்குவேன்.
- மது, சூதாடுதல், போதைப் பழக்கவழக்கங்களுக்கு ஆளாகி துன்புறும் 5 பேரையாவது அப் பழக்கத்தில் இருந்து மீட்டு நல்வழிப் படுத்துவேன்.
- துன்பத்திலிருக்கும் 5 பேரையாவது சந்தித்து அவருக்கு ஆறுதல் கூறி துயர் துடைப்பேன்.
- சாதி, மத, இன, மொழி பாகுபாடின்றி அனைவரையும் சமமாகப் பாவிப்பேன்.
- வாழ்வில் நேர்மையாக நடந்து கொண்டு, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க முயல்வேன்.
- என் தாய் மற்றும் தாய் நாட்டை நேசித்துப் பெண் குலத்திற்குரிய மரியாதையை கொடுப்பேன்.
- நாட்டில் அறிவுத் தீபம் ஏற்றி அதை அணையாமல் ஒளிரச் செய்வேன்.
- இவையாவும் இந்தியத் திரு நாட்டின் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் பாடசாலை மாணவ மாணவியருக்கு வலியுறுத்திய உறுதி மொழிகளாகும்.



**ஜெ. திலுக்ஷிகா**
தரம் - 9$^{C}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை வைத்தியம்

## கை மருந்துகள்

**குப்பை மேனி :-**

குருதிப் பெருக்குடைய காயத்திற்கு குப்பைமேனி இலை சிறிதளவு எடுத்து அதனுடன் உப்பைச் சேர்த்து அரைத்துக் கட்டினால் குருதிப் பெருக்கு நிற்கும்.

**கற்பூரவள்ளி இலை :-**

கற்பூரவள்ளி இலைச் சாற்றுடன் சிறிதளவு உப்பு சேர்த்துக் குடித்தால் சளி போகும். உணவு சமிபாடடையாது இருந்தால் சமிபாட்டு உறுப்பு நன்கு இயங்கும். வயிற்றிலுள்ள கிருமிகள் நீங்கும்.

**குண்டு மல்லிகை (கொடி மல்லிகை)**

இதன் பூவை எடுத்து அரைத்து பால் கொடுக்கும் தாய்மார்களின் பால் சுரக்கும் மார்பு வீக்கமாக இருந்தால் அதன்மேல் அரைத்ததை வைத்துக் கட்டினால் வீக்கம் நீங்கும்.

**ஆமணக்கு :-**

மூட்டுக்களில் ஏற்படும் வீக்கத்திற்கும் வலிக்கும் ஆமணக்கு இலை, பூ, பட்டை, விதை, வேர் ஆகியவற்றை இடித்துக் கட்ட சுகம் வரும்.

**வெந்தயம் :-**

ஒரு தேக்கரண்டி அளவு வெந்தயத்தை பவுடராக்கி மோருடன் உப்பும் கொஞ்சம் சேர்த்து கலந்து சாப்பிட்டு வந்தால் குடற்புண், ஈரல் வீக்கம், சர்க்கரை வியாதி போன்றவை குணமாகும்.

V. நிதக்ஷா
தரம் - 9^C



## வாழ்க்கைத் தத்துவம்

| | | | |
|---|---|---|---|
| (1) | அழிவைத் தருவது | - | ஆணவம் |
| (2) | ஆபத்தைத் தருவது | - | கோபம் |
| (3) | இருக்க வேண்டியது | - | பணிவு |
| (4) | இருக்கக் கூடாதது | - | பொறாமை |
| (5) | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| (6) | கண்கண்ட தெய்வம் | - | பெற்றோர் |
| (7) | செய்ய வேண்டியது | - | உதவி |
| (8) | செய்யக் கூடாதது | - | துரோகம் |
| (9) | நம்பக் கூடாதது | - | வதந்தி |
| (10) | நழுவக் கூடாதது | - | வாய்ப்பு |
| (11) | பிரியக் கூடாதது | - | நட்பு |
| (12) | மறக்கக் கூடாதது | - | நன்றி |
| (13) | மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| (14) | மிகப் பெரிய தேவை | - | அன்பு |
| (15) | மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| (16) | மிகச் சுலபமானது | - | குற்றங் காணல் |
| (17) | மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| (18) | விலக்க வேண்டியது | - | விவாதம் |
| (19) | வந்தால் போகாதது | - | பழி |
| (20) | போனால் வராதது | - | மானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

**த**லைசிறந்த விஞ்ஞானி, தொழில் நுட்ப வல்லுநர், மிகப் பெரிய பொருளாளர், இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர். வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாகக் கருதப்படும் நம் எல்லோருக்கும் தெரிந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றை தெரிந்துகொள்வோம்.

**பிறப்பு :**

1931ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் நாள் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம் மாவுக்கும் மகனாக இந்தியாவில் தமிழ் நாடு மாநிலத்தில் பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

**இளமைப் பருவம் :**

அப்துல்கலாம் இராமேஸ்வரத்தில் உள்ள தொடக்கப் பள்ளியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால் இளம் வயதிலே அவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப் பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே இருந்தார்.

**கல்லூரி வாழ்க்கை :**

தன்னுடைய பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, திருச்சிராப்பள்ளியிலுள்ள "செயின்ட் ஜோசப் கல்லூரியில்" இயற்பியல் பயின்றார். 1954ஆம் ஆண்டு இயற்பியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். ஆனால் இயற்பியல் துறையில் ஆர்வமில்லை என உணர்ந்த இவர், 1955ஆம் ஆண்டு தன்னுடைய "விண்வெளி பொறியியல்" படிப்பை சென்னையிலுள்ள **எம்.ஐ.டி**.யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

**விஞ்ஞானியாக ஏ.பி.ஜே. அப்துல் கலாம் :**

1960ம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய இராணுவத்திற்காக வடிவமைத்துக் கொடுத்தார். பின்னர் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த இவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைகோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980ம் ஆண்டு SLV-III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பத்மபூஷன்" விருது வழங்கி கௌரவித்து, 1963ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை இந்திய விண்வெளி ஆராய்ச்சிகூடத்தில் பல பணிகளை சிறப்பாகச் செய்த இவர் 1999ம் ஆண்டு "பொக்ரான்" அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துல் கலாம் இதுவரை ஐந்து ஏவுகணைத் திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர் அனைவராலும் இந்திய இராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகின்றார்.

**குடியரசுத் தலைவராக ஏ.பி.ஜே. அப்துல் கலாம் :**

2002ம் ஆண்டு நடந்த குடியரசு தலைவர் தேர்வில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவராக ஜுலை 25ம் நாள் 2002ல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன் இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். 2007ம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007ம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்தத் தேர்தலில் போட்டியிடப்



போவதில்லை என முடிவு செய்து விலகினார்.

**மரணம் :**

அப்துல் கலாம் அவர்கள் ஜுலை 27ம் நாள் 2015 ஷில்லாங்கில் உள்ள இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆ·ப் மெனேஜ்மென்டில் மேடையில் பேசிக்கொண்டிருந்த போதே மயங்கி விழுந்து மரித்தார்.

இறுதி வரைக்கும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது என்றால் வியப்பில்லை. "எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்" என்ற அவர் "கனவு காணுங்கள், அந்தக் கனவை நனவாக்க பாடுபடுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்றச் செய்தவர்.

உலகம் போற்றும் விஞ்ஞானியாக கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளார்.



தி.தனுஜிகா
தரம் - 5E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழிக்குப் பழி...

**யா**னை கஜலிங்கம் பழவூரில் உள்ள கோவில் ஒன்றில் வசித்து வந்தது. தினமும் பாகனுடன் அந்த ஊரில் உள்ள ஆற்றிற்கு குளிக்கச் செல்லும். வழியில் இருப்பவர்கள் தினமும் அதற்குச் சாப்பிட ஏதாவது கொடுப்பர். யானை கஜலிங்கம் என்றாலே அனைவருக்கும் பிரியம் அதிகம். அந்த ஊரில் தையல்காரன் சிங்காரன் என்பவன் தையல் கடை நடத்தி வந்தான். சரியான பொறாமைக்காரன். குறும்புக்காரனும் கூட. மக்களைத் தூண்டி விட்டு சீண்டி முடிப்பதில் மிகவும் பயங்கரமானவன். இவனுக்கு கஜலிங்கத்தின் மீது பயங்கரப் பொறாமை. "எதற்காக எல்லாரும் யானைக்கு ஓசியிலேயே பழம் கொடுக்கணும்". "பாகன் எதற்கு இருக்கிறான்? அவன் வாங்கித் தரவேண்டியது தானே" "ஓசியிலேயே ஒவ்வொரு கடையிலும் நிறுத்திநிறுத்திப் பழங்கள் கொடுக்கும் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கணும்" என்று நினைத்தான். அன்று தையல்காரன் ஒரு வாழைப்பழத்தில் ஊசியைச் சொருகி யானைக்கு சாப்பிடக் கொடுத்தான். யானையும் அதை வாங்கிச் சாப்பிட்டது. ஊசி அதன் வாயில் குத்தியது. யானைக்கு மிகவும் வலித்தது. இதைப் பார்த்த தையற்காரன் வயிறு குலுங்கச் சிரித்தான். யானை ஏதும் செய்யாமல் பாகனுடன் போய்விட்டது. யானை குளித்துவிட்டு வரும் போது தனது துதிக்கையில் சேற்றை வாரிக் கொண்டு வந்தது. அந்த தையல் கடை வந்ததும், சேற்றை தையற்காரன் முகத்தில் பாய்ச்சியது. கடையிலிருந்த புதுத் துணிகள் எல்லாம் அழுக்காகி விட்டன. யானைக்கு ஊசியை சாப்பிடத் தந்த தையற்காரனுக்கு நல்ல பாடத்தைப் புகட்டி விட்டது யானை. இந்தப் பொல்லாத தையற்காரனுக்கு இது வேண்டியது தான் என்று எண்ணி மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.



J.டனோஜிகா
தரம் - 6E

# நம்பிக்கை

உனக்குள் நீதான்
ஒரு தீர்மானத்தின்
தீபத்தை
நம்பிக்கையோடு
ஏற்ற வேண்டும்
அது
உனக்கும் பிறருக்கும்
இருளை விலக்கும்
ஒளித்தூணாக
பிரகாசிக்க வேண்டும்

நல்ல நம்பிக்கையை,
நாளையும்
ஏற்படுத்தலாம் என்று
நினைத்தால்,
இன்றைய இருள்
உன்னையே
விழுங்கி விடும்
நரகத்தின் வாசலுக்குள்

நுழைந்தவன்
மனிதனாக
திரும்புவதில்லை

பிரகாசமான
நீண்ட
அகன்ற பாதையை
ஆரம்பித்துவைக்கும்
ஒளிச்சுடர்தான்
நம்பிக்கை
ஒரு துளி ஒளியினை
நீதான் முதலில்
ஏற்ற வேண்டும்.

எந்தப் பார்வையும்
உனது
விழிகளுக்குள் இருந்துதான்
வெளிவர வேண்டும்.



J.டனிஷிக்கா
தரம் - 7T




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் அறிந்ததுண்டா?

## துத்தி :

இது ஒரு தாவர வகையைச் சேர்ந்தது. இதனை துத்திக் கீரை, கக்கடி என வேறு பெயர்கள் கொண்டு அழைப்பர். இதன் தாவரப் பெயர் "ABUTILON INDICUM" என்பதாகும். இதன் வகைகள் பல உள்ளன. அவற்றள் பசும்துத்தி, கருந்துத்தி, சிறுதுத்தி, பெருந்துத்தி, நிலத்துத்தி, கொடித்துத்தி, காட்டுத்துத்தி என்பன சிலவாகும். இதனுடைய இலை, பூ, வேர், பட்டை என்பன பயன் மிக்கவையாகும்.



சமையலுக்காகவும் இதனைப் பயன்படுத்துவதுண்டு. இருதய இலையமைப்பையும் ஓரங்களில் அரிவாள் போன்றும் இருக்கும். மஞ்சள் நிற சிறு பூக்களையும், தோடு வடிவ காய்களையும் உடையது. எல்லா மாவட்டங்களிலும் மருத்தவப் பயன்மிக்க இத் தாவரத்தைக் காணலாம். 4–5 அடி வளரும். விதை மூலம் இனப்பெருக்கும்.

## மருத்துவப் பயன்கள் :

- துத்தி உடல்களிலுள்ள புண்களை ஆற்றும்.
- துத்தியினது இலை, வேர் என்பவற்றை குடிநீரில் இட்டு வாய் கொப்பளித்தால் பல் ஈறுகளில் இரத்தம் வடிவது நிற்கும்.
- உடல் வலிகளுக்கு துத்தியை கொதி நீரில் வேக வைத்து அந்நீரை ஒற்றடமிட்டால் வலி குறையும்.
- எளிதில் பழுக்காத கட்டிகள் மீது துத்தியை இடித்துப் பிழிந்து வரும் சாற்றை அரிசி மாவுடன் கலந்து அக்கட்டிகள் மீது பூசினால் சுகம் தரும்.
- இரத்த வாந்தியால் துன்பப் படுகிறவர்கள் துத்திப் பூவை நன்கு உலர வைத்து பொடி செய்து பால், கற்கண்டு சேர்த்து அருந்தினால் இரத்த வாந்தி நிற்கும்.
- துத்திப் பூவை அரைத்துப் பொடியாக்கி சீனி, பசும் பால் கலந்து உண்டு வந்தால் சரும நோய்கள், உடல் சூடு, இருமல், காச நோய் தீரும்.
- எலும்பு முறிவு ஏற்பட்டால் முதலில் எலும்பை ஒழுங்குபடுத்தி கட்டிக் கொண்டு இந்த இலையை நன்கு அரைத்து மேலே கனமாகப் பூசி அதன் மேல் துணியைச் சுற்றி அசையாமல் வைத்திருந்தால் வெகு விரைவில் முறிந்த எலும்பு சரியாகிக் குணமடையும்.
- துத்தி இலையை நன்றாகக் அரைத்துக் கசக்கி சாறு எடுத்துக் கொண்டு, அந்தச் சாற்றுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து நீர் சுண்டும் அளவு நன்றாகக் காய்ச்சி வடிகட்டி கரும்பான் கண்ட குழந்தைகளுக்கு தடவினால் நோய் குணமாகும்.



கு.மோனிஷா
தரம் - 13B Arts






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயிரும் நீ உண்மையும் நீ...

நான் பார்த்த முதல் முகம் !
நான் பேசிய முதல் வார்த்தை !
நான் மறக்க முடியாத முதல் ஓவியம்
என் அம்மா...!

புரண்டு படுத்தால் – நாம்
இறந்து விடுவோமோ
என்று கருவில் இருந்த நமக்காகத்
தூக்கத்தைக் கூடத் தொலைத்து விட்டு
இரவில் விழித்திருந்த சூரியன்
என் அம்மா...!

மனதில் கஷ்டம் இருந்தாலும்
அன்பை வெளிக்காட்டும் தெய்வம்
பூமிக்கு இன்னொரு உயிரைக் கொண்டு வர
தன் உயிரைக் கூடப் பணயம் வைக்கும்
பெண்மையின் அடையாளம் என் அம்மா...!

அடி முடி தேடினாலும்
அகராதியைப் புரட்டினாலும்
முழுமையான அர்த்தத்தினை
அறிந்து கொள்ள முடியாத
உயிர்ச் சித்திரம் என் அம்மா...



அ.காருண்யா
தரம் - 9S

## மனித உடல் பற்றிய தகவல்கள்

- மனித உடலின் சாதாரண வெப்பநிலை - 36.8°C - 98.4°F
- மனிதர்களின் சராசரி நாடித்துடிப்பு நிமிடத்திற்கு - 72 தடவைகள்.
- மனித உடலின் மிகப் பெரிய அங்கம் - தோல்.
- மனித உடலின் மிகப் பெரிய உறுப்பு - கல்லீரல்.
- மனித உடலில் உள்ள எலும்புகள் - 207 (இருநூற்று ஏழு)
- மனித உடலில் உள்ள உயிர்த் திரவம் - இரத்தம்
- மனித உடலின் மிகவும் வன்மையான பகுதி - பல் மிளிரி
- மனித உடலில் காணப்படும் குருதியின் வகைகள் - A, B.AB.O
- மனித உடலில் முதலில் இறக்கும் பகுதி - மூளையின் கலங்கள்



அ.ஸஜானிக்கா
தரம் - 5E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

(1) நித்திரையின் தூதுவன் நினையாமல் எட்டிப் பார்ப்பவன் அவன் யார்?
**- கொட்டாவி**

(2) துளித் துளியாய் கண்ணீர் விட்டு இருளைத் தூர விரட்டும். அது என்ன?
**- மெழுகுதிரி**

(3) கண்ணில் கண்டதைச் சுருட்டிக் கொள் வான், வண்ண வண்ண நிறங்களில் வெளியேற்றுவான். அவன் யார்?
**- கமரா**

(4) கண்ணுக்குத் தெரியாதவன் உயி ருக்கு உகந்தவன் அவன் யார்?
**- காற்று**

(5) தலையைச் சீவினால் தாளிலே மேய் வான் அவன் யார்? **- பென்சில்**

(6) சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான். அவன் யார்?
**- பூமி**

(7) வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன? **- முட்டை**

(8) கழற்றிய சட்டையை திரும்பிப் போட மாட்டான். அவன் யார்? **- பாம்பு**

(9) நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட நாள் ஆயுள். அவன் யார்?
**- இரும்பு**

(10) தாவுவதும் அவனே, தாக்குவதும் அவனே அவன் யார்? **- காற்று**

(11) தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்? **- இளநீர்**

(12) வாய் இல்லை வார்த்தைகள் சொல் வான், உயிர் இல்லை ஊருக்குப் பறப்பான், கால் இல்லை வீட்டுக்கு வருவான். அவன் யார்? **- கடிதம்**

(13) மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும். வாசனை தந்து நெஞ் சிலே நிறையும் அது என்ன?
**- சாம்பிராணி**

(14) உரசினாலே உயிரை விடுவான். அவன் யார்? **- தீக்குச்சி**

(15) பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன? **- கிளி**

(16) அடித்தால் விலகாது, அணைத் தால் நிற்காது அது என்ன?
**- நீர்**

(17) பழகினால் மறக்காதவன், பயந் தோரை விடாதவன் அவன் யார்?
**- நாய்**

(18) ஆடி ஆடி நடப்பான். அரங்கத்தில் நடப்பான் அவன் யார்? **- யானை**

(19) ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும் அது என்ன? **- கரும்பு**

(20) ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் தூசி கிளம்பாது அது என்ன?
**- எறும்பு**

(21) இவன் அழுதால் உலகம் சிரிக்கும் அவன் யார்? **- வானம்**

(22) ஊசி போல் இருப்பான். ஊரையே எரிப்பான் அவன் யார்?
**- தீக்குச்சி**



**றியானா சுதர்சன்**
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில சிந்தனைத் துளிகள்

- ✳ சொற்கள் தேனீக்களைப் போன்றவை. அவைகளில் தேனும் உண்டு, கொடுக்கும் உண்டு.
- ✳ அவமானங்களைச் சேகரித்து வை. அவை வெற்றியின் உரமாக மாறக் கூடியவை.
- ✳ அறிவு ஒன்று தான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.
- ✳ நல்ல யோசனை தோன்றும் போது உடனே செய்துவிடுங்கள். ஏனென்றால் காலம் உங்களுக்காகக் காத்திருக்காது.
- ✳ உள்ளத்தை ஊனமாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். அதுவே பெரிய செல்வம்.
- ✳ சிறந்த சிந்தனை மற்றும் உயர்ந்த எண்ணங்கள் நம்மை எப்போதும் நிலையாக வைத்திருக்க உதவும்.
- ✳ என்ன நடந்துவிடுமோ என்று யோசித்து இருப்பதை விட, முயன்று பார் எழுந்தால் வெற்றி, வீழ்ந்தால் அனுபவம்.
- ✳ நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருள் கூட உங்கள் குணத்தைக் காட்டும்.
- ✳ மற்றவர் தோள் மீது ஏறி நின்று தன்னை உயரமாகக் காட்டிக் கொள்வதை விட, தனித்து நின்று உண்மையான உயரத்தை உலகிற்குக் காட்டுவதே சிறந்தது.
- ✳ உன் நல்லதில் உன்னோடு நிற்கும் நானூறு உறவுகளைவிட உன் கெட்டதில் உன் னோடு நிற்கும் உறவுகளே உண்மையானவை. உறவுகளுக்கு உண்மையாய் இருந்திடு.
- ✳ பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி கவலையின்றிதனக்குப் பிடித்ததை செய்பவனே நிறைவான வாழ்க்கை வாழ்கின்றான்.
- ✳ அவமானத்தை அனுபவமாக்கிக் கொள். தன்மானத்தை தகுதியாக்கிக் கொள் இதுவே இலக்கினைக் காட்டும் விளக்காகும்.
- ✳ நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.
- ✳ கடவுள் வரங்களைத் தருவதில்லை வாய்ப்புக்களை மட்டுமே தருவார். அதை வரமாக்குவதும், சாபமாக்குவதும் நம் கையில் தான் உள்ளது.
- ✳ பிறருக்குக் கொடுத்து மகிழ்வது மேலானது. பிறர் கொடுப்பதைத் தடுக்க முயல்வது இழிவானது.
- ✳ அடுத்தவரை அழிக்க நினைத்தால் முதலில் அழிந்து போவது நீயாகத் தான் இருப்பாய்.



**யவானி ரவீந்திரநாதன்**

தரம் - 12B **Arts** (2019 Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.C.E (O/L) DECEMBER 2016 BEST SCHOLAR AWARDED




G.C.E (O/L) DECEMBER 2016 BEST SCHOLAR AWARDED




## ZONAL LEVEL TOP 10 AWARD 2017




## NATIONAL LEVEL PHYSICAL TRAINING COMPETITION - 2017 - 10TH PLACE





## VISITED THE VALVOSAI DEAF AND DUMB SCHOOL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPORTS ACHIEVEMENT - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tourism in Sri Lanka

Sri Lanka is one of the most popular tourist destinations because it contains a mixture of unique wild life, golden beaches, a rich cultural heritage and amazing land scopes. Thousands of tourists visit Sri Lanka.

There are many wild life parks such as Yala, Wilpattu and Kumana. Tourists like to watch wild animals wandering in their natural surroundings. The sandy beach is also another attraction. Srilanka has many tourists who spend their holidays, swimming, diving and sailing here. Srilanka has a heritage of over 2,500 years. Ancient ruins can be seen in Anuradhapura, Polannaruwa, Sigiriya, Yapahauwa. Tourists stop over to see wonderful creations, paintings and ruins of great buildings and monuments.

There are attractive waterfalls in Sri Lanka such as Dunhindha, Dhiyallulama and Bambarakanda. Dunhindha is the most beautiful, while Bambarakanda is the tallest waterfall. Tourists never faill to see the places. The Botanical gardens at Peradeniya and Haggala attract



many tourists. Many tourists come to Sri Lanka to visit these attractive places.

Further, the hot water wells in Kinniya, the world's end in Nuwara Eliya and the natural harbour in Trincomalee are some of the attractive places tourist visit. So we can be proud of the beauty of our country.



**Fathima Asny Nizam**
Grade - 6L



மற்றவர்களின் எல்லாத்
தேவைகளையும் பூர்த்தி
செய்தால்தான் உனக்கு
நல்லவன் என்ற பெயர்
கிடைக்குமானால் அந்தப்
பெயர் உனக்கு வேண்டாம்.

- டாக்டர் அம்பேத்கார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே



அன்னையே நீ என்னை
அள்ளி அணைத்து என் கன்னத்தில்

ஆசை முத்தம் தந்த போது
என் உள்ளம் எல்லாம்

இன்பம் பெருகியதே
இன்று வரை அளவின்றி அளிப்பவள் நீதானே அம்மா

ஈர் முறை ஓர் முறை தவறுகள் இழைத்த போதும்
தவறெனத் தெரிந்தும் அதை எல்லாம்

உள்ளத்தில் வைக்காது
கவலைகள் எதுவுமே இன்றி

ஊதித் தள்ளி விட்டு
புன்னகையுடன் நிலாவைக்காட்டி

என்றும் போல் எனக்கு சோறூட்டுவாய் – என்
வாழ்நாள் எல்லாம்

ஏக்கத்தில் நான் இருக்கும் போது
அவள் மடியில் என்னை துயிலுறங்கச் செய்து

ஐயோ என்று சொல்லி
ஆசையாய் தூளிகட்டி அன்பாய்

ஒரு முறை என் நெஞ்சைத் தடவி
என் கண்களில் இருந்து வடியும் கண்ணீரை துடைத்து
ஒரு முறை என்னைப் பார்த்து

ஓ என்று சொல்லுவாய்
அப்போது நான் உயிரை விட்டாலும் மரணம் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்

ஔவையாரே வந்தாலும் என் அம்மாவுக்கு ஈடாகுமா?
ஆயிரம் உறவுகள் அவனிலேயே இருந்தாலும்
அன்னையின் உறவுக்கு ஈடாகுமா?



**J.B.மைதிலி**
தரம் - 12B Arts
2019 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் பல்வேறு துறைகளிலும் முதலாவதாக சாதனை புரிந்த பெண்கள்

| நிலை | பெயர் | நாடு | ஆண்டு |
|---|---|---|---|
| மருத்துவம் | எலிசபெத் பிளக்வெல் | அமெரிக்கா | 1847 |
| பல் வைத்தியர் | லூஸிஹொப்ஸ் | அமெரிக்கா | 1866 |
| வழக்கறிஞர் | அரபெல்லா மேன்ஸ்பீல்ட் | அமெரிக்கா | 1869 |
| நீதிபதி | எஸ்தர் மோரிஸ் | அமெரிக்கா | 1876 |
| விமானி | எலிஸி அலிஸ் | பிரான்ஸ் | 1909 |
| பொலிஸ் | ஸ்ரெப்பின்ஸ் வெல்ஸ் | அமெரிக்கா | 1910 |
| ஜனாதிபதி | மரியா ஸ்ரெலா பெஜரான் | ஆஜென்ரீனா | 1974 |
| பிரதமர் | ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | இலங்கை | 1960 |
| புகையிரத ஓட்டுநர் | அன்னே வின்டர் | ஐக்கிய இராச்சியம் | 1983 |
| விண்வெளி | வலென்ரீனா ரெரஸ்கோவ் | ரஷ்யா | 1963 |
| நோபல் பரிசு | மேரி கியூரி அம்மையார் | பிரான்ஸ் | 1903 |

## விலங்கின் விநோதம்

(1) மூன்று இரப்பை உள்ள விலங்கு - **ஒட்டகம்**

(2) மிக வேகமாகச் செல்லும் பாம்பினம் - **பிளாக்மாம்பா**

(3) வெள்ளைநிற இரத்தமுடைய உயிரினம் - **கரப்பான்பூச்சி**

(4) 27,000 சுவை நரம்புகளைக் கொண்ட மீன் இனம் - ***Cat Fish***

(5) குதிக்கத் தெரியாத, துள்ளித் தாவாத விலங்கினம் - **யானை**

(6) அணுக்கதிர் வீச்சிலும் பாதிப்படை யாத உயிரினம் - **பரப்பான்பூச்சி**

(7) ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் வாழும் உயிரினம் - **ஈரிதழ்ச்சிப்பி *(OYSTER)***

(8) 640 நாட்கள் கருவில் குட்டியைச் சுமந்து பிரசவிக்கும் உயிரினம் - **ஆபிரிக்க யானை**

(9) எல்லா கண்டங்களிலும், எல்லா தட்ப வெப்ப வலயங்களிலும் வாழும் ஒரே உயிரினம் - **நாய்**



(10) எருமைக்கும் பசுவிற்கும் இடையே பிறக்கும் கலப்பின விலங்கு - **திமிதுன்**

(11) முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் - **மீன்**

(12) பதினொரு வாரங்கள் கழித்து கண் திறக்கும் விலங்கு - **பிளாட்டிபஸ்**

**ஜெ.விதுர்ஷிகா**
தரம் - $12^{B}$ (2019 Batch)
**கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியம்

- எவ்வித நீண்ட பிரயாணமும் முதல் அடி வைத்தலில் இருந்தே துலங்குகிறது.
- உன் வெற்றி தன்னம்பிக்கையிலும், முயற்சியிலும் என்பதை உணர்ந்து கொள்.
- எத்தனை முறை வேண்டுமானாலும் யோசித்துக் கொள். ஆனால் தீர்மானித்து விட்டால் அது இறுதி முறையாக இருக்கட்டும்.
- உன் வாழ்நாளை ஒரு சந்தர்ப்பம் என எண்ணி வளமாக்கிக் கொள்.
- தன் குறை எதுவெனக் கண்டறிதல் அறிவின் சிகரமாகும்.
- விருப்பு வெறுப்பின்றி எதையும் அணுகினால் வெற்றி நிச்சயம்.
- சுறுசுறுப்பான தேனீக்களுக்கும் சுறுசுறுப்பான மனிதர்களுக்கும் துக்கப் பட நேரமில்லை.
- அதிர்ஷ்டம் என்ற சொல் துணிச்சலானவர்களின் பக்கமே நிற்கும்.



ம.டோறிக்கா சுஸாரி
தரம் - 7T


## தெரிந்து கொள்ளுங்கள்

- நம்மைச் சுற்றிலும் காற்று இல்லாவிட்டால் எவ்வளவு உரத்த ஒலியானாலும் நம்மால் அதைக் கேட்க முடியாது.
- நொறுக்குத் தீன், அதிக அளவில் பிஸ்கட்டுக்கள் மற்றும் கேக்குகளை உட்கொள்ளும் பெண்களுக்கு கருப்பை புற்றுநோய் ஏற்படும்.
- வெங்காயத்திலும் வெள்ளைப் பூண்டிலும் உள்ள "செலீனியம்" எனும் உலோகம் புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது.
- இரத்தத்தின் நிறம் சிவப்பாக இருப்பதற்கு ஈமோகுளோபின் என்ற பொருளே காரணமாகும். இப்பொருள் தாய் உடலின் அனைத்து கலங்களுக்கும் ஒட்சிசனை எடுத்துச் செல்கின்றன. உடலில் ஈமோகுளோபின் குறைந்தால் இரத்தச்சோகை நோய் ஏற்படும். மற்றும் இரத்த இழப்பும் ஏற்படும்.
- அரலி எனும் ஒலியான்டர் *"Neriu Oleander"* என்னும் தாவரம் உலகத்திலேயே மிகக் கொடுமையான நஞ்சுத் தாவரமாகும்.
- கலிலியோகலிலி உலகில் முதன் முதலாக *1609* இல் உருவாக்கிய மிகப் பிரமாண்டமான பொருள் தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரதன் ஓட்டம்



மரதன் ஓட்டப் போட்டி முதன்முதலாக கிரேக்க நாட்டிலே ஆரம்பமானது. திறந்தவெளியில், நீண்ட தூரத்தில் நடத்தப்படும் ஓட்டப் பந்தயமே மரதன் ஓட்டம் எனப் படும். பொதுவாக இப்போட்டி 26 மைல் தூரத்தை இலக்காகக் கொண்டே நடத்தப்படுகின்றது. தற்காலத்தில் குறைந்த தூரமாகவும், கூடிய தூரமாகவும் அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடத்தப்படுகின்றது. கி.மு 1190ம் ஆண்டளவில் 'மரதன்' என்ற போரில் கிரேக்கர்கள் பெற்ற வெற்றியைத் தெரிவிப்பதற்காக மரதனில் இருந்து 26 மைல்கள் (சுமார் 40 கி.மீ) ஓடிச் சென்று வீழ்ந்து உயிரிழந்த கிரேக்க நாட்டு வீரரை நினைவுகூரும் வகையிலேயே மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது. இதுவே முதலாவது மரதன் ஓட்டப் போட்டியாகும்.

பின்னர் 1896 இல் மீண்டும் ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அந்த ஒலிம்பிக் போட்டியில் முதன்முதலாக மரதன் ஓட்டப் போட்டி சேர்த்துக் கொள்ளப் பட்டது. அன்று தொடக்கம் ஒவ்வொரு ஒலிம்பிக் போடடியிலும் மரதன் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அதுமட்டுமன்றி சர்வதேச விளையாட்டுப் போட்டி களிலும், உள்ளூர் விளையாட்டுப் போட்டிகளிலும், சாதாரணப் போட்டிகளிலும் மரதன் போட்டி நடத்தப்படுகின்றது. 1984ம் ஆண்டு நடத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டியிலேயே முதன் முதலில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமானது. இன்று சகல தரப்பின ருக்கும் மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்படுகின்றது.



சி.யக்சிகா
தரம் - 9T



வெற்றி குறித்த நமது பார்வை திண்ணமாய் இருந்தால் தோல்வி நம்மை பாதிக்கவே பாதிக்காது.

- Dr. A.P.J.அப்துல் கலாம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MODEL LETTER

## Letter to a Pen friend

..................................
..................................
..................................
(Your Address & Date)

My Dear ..........................

Greetings from Sri Lanka!

I am happy to write to you. I got your address from a friend here.

You may wish to know about our country. It was called 'Ceylon" But, it is now called "Sri Lanka". It is a small country in tha Indian Ocean. Earlier, it was a British colony. Now it is a Republic within the Common - Wealth.

The majority of the people here are called 'Sinhalese'. The 'Tamils' from the minority. Then come the 'Muslims' and others. Sinhala, Tamil and English are spoken in Sri Lanka.

English form the link - Language.
Most of the Muslims speak Tamil.
Some of them can speak Tamil and Sinhala.

Please write about your self and your country.

Your loving Pen - Pal,

..................................



**Miss. Sajeevini Jeevasundar**
Grade - 6T

# Importance of Protecting Nature

The earth is the only planet man can ever call home. Therefore, we must love and take care of it. Nature is one of the most important things in our lives. This is the place where plants and animals thrive. Its atmosphere and its terrain providing what man needs in order to live.

Nature not only helps us to survive but it also brings beauty to our surroundings. We can also utilize nature to make our lives easier. For example, we can use the sun to create solar energy and we can use coal to create fossil fuel.

Even though nature is important to us, people destroy It. People pollute water by releasing waste material into water bodies and by releasing toxic chemicals from factories into the atmosphere. As the world population increases, the usage of water resources for the future generation also increases

Destroying mountain land is also another way of destroying nature. This destroys not only the soil but trees too. Landslides are also caused by destroying mountains.



***Ann Larisa Gastohn Jeeva***
*Year - 8E*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சிரிக்க வேண்டும்?

**ம**னிதன் மகிழ்ச்சிக்காக ஏன் நேரத்தை செலவிட வேண்டும்?

ஏனென்றால், உயிர்வாழப் பணம் தேவைப் படும் ஒரே உயிரினம் மனிதன் மட்டும் தான்! வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பது வழக்கு மொழி மட்டுமல்ல... விஞ்ஞான உண்மையும் கூட. எபிநெப்ரின் (Epinephrine) நோர் நெப்ரின் (Nore Epinephrine) கார்ட்டிசால் (Cortisol) ஆகியவை மன அழுத்தத்தை உண்டாக்கும் ஹோர்மோன்கள். ஆனால், மனம்விட்டு சிரிப்பது அந்த ஹோர்மோன் களின் சுரப்பைக் குறைக்கிறதாம். அதனாலேயே இயல்பாகவே மன அழுத்தம் குறைகிறதாம். இயல்பிலேயே சிரிப்பை அடக்கி வைத்து, அதன் காரணமாக நம் ஊர்ப் பெண்களுக்கு ஏற்படுபவை தான் மன அழுத் தம், மாரடைப்பு, புற்றுநோய் ஆகியன.

- "சிரிப்பு மூளையில் என்டார்டின்களைச் சுரக்கச் செய்து, நம் மனநிலையை உற்சாகமாக வைத்திருக்கும். இரத்தக் குழாயின் உட் சுவரான "எண்டோதீலி யத்தின்" சுருக்கமும், அதில் கொழுப்பு படிவதும் தான் உயர் இரத்த அழுத்தம் என்ற பிரச்சினைக்குக் காரணங்கள். மனம் விட்டுச் சிரிப்பது அந்த எண்டோ தீலியத்தை விரிவடையச் செய்யும்.



- பெண்கள் குறித்துப் பயமுறுத்தும் புற்று நோய்களுக்கும், அடிக்கடி சளி, இருமல், தும்மல் வரும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவுக்கும், வாய் விட்டுச் சிரிக்காததும் முக்கிய காரணமே.
- சிரிப்பு, நோய் எதிர்ப்பாற்றலை உயர்த் தும்: இரத்த ஓட்டத்தை சீராக்கும், இதயத்தையும் நுரையீரலையும் நல் வழியில் தூண்டும், பிராண வாயு ஓட் டத்தை அதிகரிக்கச் செய்யும், தசை களைத் தளர்வாக்கும், வலி நீக்கும், உயர் அரத்த அழுத்தத்தைக் குறைக் கும், ஞாபகசக்தி, படைப்பாற்றல் துடிப் பாக இருத்தல்... போன்ற மூளை யின் செயற்பாடுகளை கூர்மையாக்கும் விலை யில்லா மருந்து. "வயிறு குலுங்க வைக்கும் சிரிப்பு"
- "தினமும் 3L தண்ணீர் குடித்தே ஆக வேண்டும்" என்பது போல, தினமும் 25 தடவைகள் சிரித்தே ஆக சேண்டும் என்பது நல் வாழ்வுக்குக் கட்டாயம்.



நசீர் சுல்(f)பா
தரம் - 9S

## சிரிப்பு சிறந்த மருந்து...!



**மொ**ழிக்கு முன்னதாக மனிதன் கண்டுபிடித்த முதல் தொடர்பு ஊடகம் சிரிப்பு! அகில உலகத் திற்கும் பொதுவான மொழி அது. பார்வையற்ற கேட்கும் திறன் இல்லாத குழந்தைகூட பிறந்த சில நாட்களில் சிரிக்கும் என்பது சிரிப்பின் தனிச் சிறப்பு. "கைக்குழந்தையாக இருந்தபோது ஒரு நாளைக்கு 200-300 முறை சிரித்துக் கொண்டி ருந்த நாம், வளர்ந்ததும் ஒரு நாளைக்கு 15 - 20 முறை தான் சிரிக்கின்றோம்". மகிழ்ச்சியை மட்டு மல்ல ஆரோக்கியத்தையும் இலவச இணைப் பாகத் தருவது "சிரிப்பு" திருக்குறள் முதல், வட்ஸ் அப் ஸ்மைலி வரை அனைத்தும் அழுத்தமாகச் சொல்வது இதைத்தான். இதில் பலருக்கும் பிரச்சினை என்னவென்றால், எழுத்தில் தர முடியாத இந்த மருந்தை எங்கே சென்று வாங்கு வது என்பது தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Favorite Mathematician

## Srinivasa Ramanujan (22 December 1887 - 26 April 1920)



**Born** 22 December 1887
Erode, Madras Presidency, British India (present-day Tamil Nadu, India)

**Died** 26 April 1920 (aged 32)
Kumbakonam, Madras Presidency, British India (present-day Tamil Nadu, India)

He was an Indian mathematician who lived during the British Rule in India. Though he had almost no formal training in pure mathematics, he made substantial contributions to mathematical analysis, number theory, infinite series, and continued fractions, including solutions to mathematical problems considered to be unsolvable. Ramanujan initially developed his own mathematical research in isolation; it was quickly recognized by Indian mathematicians. seeking mathematicians who could better understand his work. In 1913 he began a postal partnership with the English mathematician G.H.Hardy at the University of Cambridge, England. Recognizing the extraordinary work sent to him as samples, Hardy arranged travel for Ramanujan to Cambridge. In his notes, Ramanujan had produced groundbreaking new theorems, including some that Hardy stated had 'defeated [him and his colleagues] completely', in addition to rediscovering recently proven but highly advanced results.

During his short life, Ramanujan independently compiled nearly 3,900 results (mostly identities and equations). Many were completely novel; his original and highly unconventional results, such as the Ramanujan prime, the Ramanujan theat function, partition formulae, and mock theat functions, have opened entire new areas of work and inspired a vast amount of further research. Nearly all his claims have now been proven correct. The Ramanujan Journal, a peer-reviewed scientific journal, was established to publish work in all areas of mathematics influenced by Ramanujan, and his notebooks - containing summaries of his published and unpublished results - have been analyzed and studied for decades since his death as a source of new mathematical ideas

As late as 2011 and again in 2012, researchers continued to discover that mere comments in his writings about "simple properties" and "similar outputs" for certain findings were themselves profound and subtle number theory results that remained unsuspected until nearly a century after his death and which relied on work published in 2006.He became one of the youngest Fellows of the Royal Society and only the second Indian member, and the first



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indian to be elected a Fellow of Trinity College, Cambridge. Of his original letters, Hardy stated that a 'single look' was enough to show they could only have been written by a mathematician of the highest calibre, comparing Ramanujan to other mathematical geniuses such as Euler and Jacobi.

In 1919, ill health – now believed to have been hepatic amoebiasis (a complication from episodes of dysentery many years previously) – compelled Ramanujan's return to India, where he died in 1920 at the age of 32. His last letters to Hardy, written January 1920, show that he was still continuing to produce new mathematical ideas and theorems. His "lost notebook", containing discoveries from the last year of his life, caused great excitement among mathematicians when it was rediscovered in 1976.

A deeply religious Hindu Ramanujan credited his substantial mathematical capacities to divinity, and stated that the mathematical knowledge he displayed was revealed to him by his family goddess. '"An equation for me has no meaning," he once said, "unless it expresses a thought of God."

(Resource-History of Ramanujan)



**C.J.Mayrariniy**
12 Maths (2019 batch)

---

# Caracara

Caracaras are birds of prey in the family Falconidae. They are traditionally placed in subfamily polyborinae with the forest falcons, but are sometimes considered to constitute their own subfamily. Caracarinea, or as members of the true falcon subfamily, falconine. Caracaras are principally birds of south and Central America, just reaching the southern united states.



Unlike the Falco in the same family, the birds in the five relevant general are not fast flying aerial hunters, but are comparatively slow and are often scavengers (canotable exception being the red-throated caracara.)



**U.Regeshna**
Grade 6L

**முட்டாள்கள் தெரிந்துகொள்வார்கள்.**
**சிறந்தவர்கள் புரிந்துகொள்வார்கள்**

-ஆல்ப்ட் ஐன்ஸ்டைன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விணைத்திறனான செயலாற்றுகைக் கற்றலுக்கான சில ஆலோசனைகள்

**மாணவர்களின் கற்றலில் ஏற்படும் தேவையற்ற அச்சத்தினைப் போக்கக்கூடியதாக இக்கட்டுரை அமையும் என்ற எதிர்பார்ப்புடன் எழுதப்பட்டுள்ளது.**



**நா**ம் கற்க முனையும்போது பல்வேறு தேவைகளை மனதில் கொண்டு கல்வியைத் தொடர்கின்றோம். நமது கற்பனைகளை நிறைவேற்றும் நோக்குடன் கற்றலை மேற்கொள்கின்றோம். இவை தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்திவிடுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக, நாம் கல்வியைத் தொடர்வதற்கு கல்வி தொடர்பான கற்பனை (கனவு) சரியான வகையில் அமைதல் வேண்டும்.

முதலில் நாம் கல்வி மூலம் எதனை எதிர் பார்க்கின்றோம் என்ற வினாவை மனதில் கேட்டு, அதன் மூலம் கிடைக்கும் விடைகளை முன்னுரிமைப் படியும் அதன் மூலம் இலக்குகளை அடையக்கூடியதாகவும் ஒழுங்கு படுத்துதல் வேண்டும் அவ்வாறான சில விடையங்களாக.

- எம்மை சரியாக முகாமை செய்தல்
- உயர் சான்றிதழ்கள் பெறல்.
- புதிய ஆர்வங்கள் உருவாக்குதல்.
- பாடசாலை, அரச வசதிகளை எமது வளர்ச்சிக்கு பயன்படுத்துதல்.
- புதிய திறன்களை உருவாக்குதல்.
- சீரான சிந்தனைத் திறன் விருத்தி.
- உடல் நலம் பேணல்.
- எம்மை சரியாக வெளிக்காட்டல்.
- உயர் அறிவுள்ள நற்பிரஜையாவதுடன். புத்தி சாதுரியம் உள்ளவராக திகழல்.
- அழுத்தங்களிலிருந்து விடுபடல்.
- சகலதிலும் சமத்துவம் பேணும் ஆற்றல்.

முன்னுரிமைப்படி நாம் இயங்கும் போது எமது கல்வி பற்றிய கனவினை சிறப்பாக நனவாக்கிக் கொள்ள முடியும்.

கற்றல் என்பது தனிப்பட்ட அறிவினை கட்டுருவாக்கும் ஒரு பயிற்சியாகும். இதற்கு கற்பவர் உறுதியான செயலூக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்

உளரீதியான செயலூக்கமே கற்றலின் அடிப்படையாக அமையும். கற்போன் பல நிபந்தனைகளுக்கு அமைவாக தன்னை கற்க, தயார்படுத்துவதாயின் கற்றல் மிக இலகுவானதாக அமையும்.

கற்றலுக்கான உளரீதியான செயலூக்கம் விருத்தி அடைய கற்போன் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் தன்னை செயற்படுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

- புதிய அறிவைத் தேடல்
- அடிப்படைகள் விளங்கிக் கற்றல்
- கற்றலுக்கான ஒத்திகைகள் ஈடுபடல்
- புதிய தகவல்களை ஒழுங்கு படுத்தல்
- சுயமாக புதிய விளக்கங்கள் பெறல்
- கற்றலை செய்து காட்டல், பார்த்தல்

**புதிய அனுபவத் தேடல் :**

எம்மிடம் ஏற்கனவே உள்ள அனுபவங்களை மட்டும் கொண்டு திருப்தி கொண்டால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கற்றலுக்கான செயலூக்கம் எம்மிடம் ஏற்படாது. ஆகவே புதுமை தேடல், புதிய கருத்துக்கள் தேடல், புதிய தகவல்களை நாடல் புதிய சூழ்நிலைகளில் பணியாற்றல், புதிய சவால்களுக்கு முகம்கொடுத்தல் என்பன புதிய அனுபவங்களைத் தேடித் தரும் புதிய புதிய தரவுகளை புதிய புதிய தகவல்களையும் உருவாக்குவதற்கு, நாம் கற்றலில் உயர்வு பெற புதிய அனுபவங் களை நாடல் வேண்டும்.

**அடிப்படைகள் அறிந்து கற்றல் :**

உளரீதியான செயலூக்கம் பெற அடிப்படை விடயங்கள் கற்றிருக்க வேண் டும். ஏற்கனவே கற்றலுக்கான ஒரு கட்டமைப்பு எமது மூளையில் உள்ளது. அது பல விடயங் களை உள்ளடக்கக்கூடியதாக இருக்கும் போது கற்றல் எளிதாகின்றது. நாம் முன்பு கற்ற விடயங்கள் எமது தொடர் கற்றலில் செல்வாக்கினை / தாக்கத்தினை ஏற்பத்தும், சிலர் விரைவாகவும், எளிதாகவும் பல விடயங் களைக் கற்கின்றனர். (விடைபகர்கின்றனர்) அவர்களுக்கு முன்னரே இவ்விடயங்களின் அடிப்படைகள் மனதில் பதிந்துள்ளது என்பதே காரணம். ஏற்கனவே உள்ள தரவு கள் புதியப்பட்டிருப்பின் பிரச்சினைகளைத் தீர்க்க இலகுவாக அமையும்.

**சுய திறமைகள் கண்டறிதல் :**

நம் ஒவ்வொருவருள்ளும் ஏதோ சில திறமைகள் பொதிந்திருக்கும். அவ்வாறான திறன்களைக் கண்டறிதல் முதன்மையான செயற்பாடாகும். அவற்றை நாம் இனம் கண்டு கொண்டால் பயிற்சியின் மூலமும் ஆசிரி யரின் பின் ஊட்டல் மூலமும் இலகுவாக விருத்தி செய்து கொள்ள முடியும்.

எம்முள் இருக்கும் திறன்களை முடுக்கி விடவும், அடையாளம் காணவும் பின்வரும் பண்புகள் எம்மிடம் காணப்படல் வேண்டும்.

- விழிப்புணர்வு
- அர்ப்பணிப்பு
- சுயதூண்டல்
- நேரமுகாமை
- உறுதிப்பாடு
- நேர்சிந்தனை
- விடாமுயற்சி
- தன்னம்பிக்கை என்பனவாகும்.

**சுய விழிப்புணர்வும் சுய மதீப்பீடும் :**

சுய விழிப்புணர்வு, சுய மதீப்பீடு எமது பலம், பலவீனங்களைக் கண்டறிய முக்கிய மான நுட்பம்மாகும். ஒரு விடயத்தை எங்கே, எப்படி, எப்போது ஆரம்பிப்பது, முடித்தல் போன்ற திறன்களை எப்படி விருத்தியாக்கு வது யாரிடம் உதவி கோருவது என்பவற்றை சரியாகத் திட்டமிட விழிப்புணர்வு அவசி யம் எமது விழிப்புணர்வைத் தூண்டக்கூடிய தான சில விடயங்கள் பின்வருமாறு,

- சுயமதீப்பிடு
- பின்னூட்டல்
- பரீசிலனைகள்
- நண்பர்களின் (சகபாடிகள்) கருத்துக்கள்
- கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்

**எதனையடைய வேண்டும் என்ற விழிப் புணர்வு :**

- ➢ எமது இலக்குகள் எவை? அதனை எவ் வாறு அடைய முடியும்? எமது இலக்கு களின் எல்லை எது? என்ற விழிப்புணர்வு கல்வியில் அவசியமாகின்றது.
- ➢ எமது இலக்கு பொருத்தமானவையா? எதிர்பார்ப்பும், இலக்கும் செயற்பாடுக ளும் ஒத்துப்போகின்றதா? என்பதை மதிப்பிடல் வேண்டும்.

**கற்றலுக்கான அலகுமுறைகள் :**

கற்றலுக்காக பின்வரும் அணுகு முறைகளை நாமாகவே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றல் என்பது ஒரு தேடலாகும்.
- பல்வேறு புலனுறுப்புக்களையும் நாம் பயன்படுத்த வேண்டிய செயற்பாட்டுட னான கற்றல்.
- கற்றலுக்கான பொறுப்பைக் கற்போனே ஏற்றுக்கொள்ளல்.
- கற்போன் தனது கற்றலில் நம்பிக்கை கொள்ளல் (நுண்மதி).
- பொருத்தமான கற்றல்வகையை இனம் காணல்.
- பொருத்தமான கற்றல் சூழல் அமைத்தல்

**கற்றல் ஒரு தேடலாகும்**

கற்றல் ஒரு தேடலாகவும், சுவாரஸ்சியம் மிக்கதாகவும் மகிழ்சிக்குரிய ஒரு செயற்பாடாகவும் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும். இதனை மகிழ்ச்சியுடன் அறிவிப்பதற்கான ஒரு செயல் முறையை கற்போன் ஒழுங்காக அமைத்துக் கொள்ளல் வேண்டும் கற்றலில் ஏற்படும் சலிப்புத் தன்மையை சுயமாகவே தவிர்த்துக்கொள்ள முடியும்.

- கற்றலில் நிறைய விடயங்களை இலகுவாக கற்க முனைதல்
- கற்றலில் சுமை இருப்பதாக நினைக்காதிருத்தல்.
- இடைக்கிடை ஓய்வு பெற்றுக் கற்றல்.
- மற்றவரின் விமர்சனத்திற்கு தம் செயற் பாட்டை நிறுத்தாது தொடரல்.
- புதிய புதிய விடயங்களை தேடலும் அது பற்றி அறிவதில் ஆர்வம் காட்டலும்.
- தமது சிந்தனையின் கீழ் இயங்குதல்.
- விடாமுயற்சி, சலிப்பற்றதும் மகிழ்ச்சியான கற்றலுக்கும் வழிவகுக்கும்.
- செயற்பாட்டில் தடைகள் ஏற்படின் அதிலி ருந்து விரைவாக விடுபடல்.

**பலபுலன் உறுப்புக்களை கற்றலுக்காக பயன்படுத்துதல் :**

புலன் உறுப்புக்களை ஒரே நேரத்தில் பயன்படுத்தும் போது மூளைக்கு அதிகளவு இணைப்புக்களும், தூண்டுதல்களும் ஏற்படுவதால் தகவல்களை மூளை இலகுவாக செயற்படுத்தும்.

நாம் கற்கும் போது எழுதுதல், கதைத்தல், தட்டச்சு செய்தல்,பார்த்தல், வரைதல் எனப் பல செயற்பாடுகள் மூலம் அதிக புலன் உணர்வுகள் உருவாக்கும் இதனால் மூளை சுறுசுறுப்பாக, தகவல்களை உள்வாங்கவும் வெளிவிடவும் தயாராகின்றது.

**செயற்பாட்டுடன் கற்றல் :**

ஆழமான விளக்கத்துடன் நாம் கற்கும் போது கற்ற விடயத்தை நாம் இலகுவாக செயற்படுத்த முடியும். அத்துடன் இலகுவாக ஒன்றித்துவிடவும் முடியும். இவ்வாறு ஒன்றிக்கும் போது நாம் செயற்பாட்டுடன் கற்கும் திறன் விருத்தியாகும்.

- நாம் கற்ற விடயத்தை மற்றவர் மகிழும் வண்ணம் வெளிப்படுத்துதல்
- தகவல்களை ஏனையோர் விரும்பும் வண்ணம் விளக்குதல்
- ஒரு விடயத்தை பல்வேறு கோணங்களில் முன் வைத்தல்

**கற்றலுக்கான பொறுப்பை கற்போனே ஏற்றல் :**

கற்றலுக்கான பொறுப்பை ஒரு மாணவன்/மாணவி சுயமாக ஏற்கும்போதே அவர் கற்க ஆரம்பித்துவிட்டார் என்று பொருள், கற்றலுக்கான ஆயத்த நிலையில் தான் கற்றலில் அழுத்தங்களை தவிர்த்துக் கொள்ளவும் இடைவிலகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் பொறுப்பினை ஏற்றல் என்பது உதவுகின்றது.

**சுயகற்றலில் சுய அறிவில், நுண்மதியில் நம்பிக்கை :**

தமது சுயகற்றலில் சுய அறிவில் முழுமையாவும் நம்பிக்கை வைத்து கற்றலில் ஈடுபடல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அறிவில், ஆற்றலில் குறைவான நம்பிக்கை கொள்வதால் தேர்வுகளில் தவறுவதற்கு வாய்ப்பளிக்கும். அவை தாம் கற்றல் துறைகள் மாற்றுதல் (தொழிநுட்பம், கலை, விஞ்ஞானம், பாடங்களை மாற்றுதல் ஆசிரியர்களை மாற்றுதல் என்பன தமது நம்பிக்கையினை குறைக்கும் செயற்பாடுகள் ஆகும்.

**பொருத்தமான கற்றல் வழியினை விருத்திசெய்தல் :**

ஒவ்வொரு கற்போனுக்கும் வேறுபட்ட கற்றல் வழிகள் காணப்படும். தனக்கு நன்றாக விளங்குகின்ற, தன்னால் இலகுவாக பின் பற்றிக்கூடிய கற்றல் வழி முறையைக் கற்போர் இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.

சில உளவியல் கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி கற்போர் மூன்று வகைப் படுத்தப்பட்டுள்ளார். அவையாவன பார்த்துக் கற்பவர், கேட்டுக் கற்பவர், தொட்டுணர்ந்து கற்பவர் போன்றவையாகும். இவை எவ்வாறு காணப்படிலும் கற்போர் தான் எவ்வகையானவர் என தன்னை இனம் கண்டு கொள்வது சில வேளைகளில் கற்றலில் தடைகளை ஏற்படுத்தும் ஆகவே எவ்வகையான அடிப்படைக் காரணங்கள் தமது கற்றலுக்கு பங்களிப்புச் செய்யும் என்பதை இனங்கண்டு கொள்வது நன்று இவையே கற்றலினை சிறப்பாக ஒழுங்கமைத்து கொள்ளவும் உதவும். மனித மூளையானது கற்பதன் மூலம் உயர்திறன் கொண்ட சக்தியை கொண்டுள்ளது. கற்றலை இலகுவாகவும் விரைவாகவும் ஏற்கின்ற அமைப்பு மனித மூளையில் காணப்படுகின்றது. ஆனால் கற்றலுக்காக மூளையை எவ்வாறு பயன் படுத்துகின்றார் என்பதிலேயே கற்றலின் வெற்றி தங்கியுள்ளது.

கற்போர் கல்வியில் பல்வேறுபட்ட அணுகு முறைகள் நுட்பங்கள் என்பவற்றை கற்றலின் இலகுக்கேற்ப மாற்றியமைப்பதன் மூலம் கற்றலின் வினைத்திறன் மிக்க வெளியீடுகளை உருவாக்க முடியும்.

கற்போர் தனக்குரிய கற்றல் முறையை தானாகவே உருவாக்கிக் கொள்ள வேண்டும் இதுவே பாடசாலை கல்வியை சிறப்பாக்கவும் வினைத்திறனுடைய தாக்கவும் உதவுகின்றது என்பதில் ஐயமில்லை.



**எம். மகேந்திரன்**
கல்வி முதுமாணிப்பட்டதாரி
மட்/ புனித சிசிலியா பெண்கள் கல்லூரி, (தேசிய பாடசாலை)

## தெரிந்து கொள்வோம்

(1) உலகிற்கு அடிப்படை மனித உரிமைகளை அறிமுகப்படுத்திய நாடு?
**ஐக்கிய அமெரிக்கா**

(2) விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்?
**கலிலியோ கலிலி**

(3) சர்வதேச வங்கியில் இலங்கையில் எப்போது இணைந்து கொண்டது?
**1950.08.24 இல்**

(4) தேசிய சின்னம் எப்போது முதல் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றது?
**1972 முதல்**

(5) ஐக்கிய இராச்சியத்தின் தேசிய கீதத்தின் முதல் வரிகள் என்ன?
**God save the queen**

(6) இலங்கை நாடளுமன்றத்தில் முதலாவது எதிர்க்கட்சித்தலைவர் யார்?
**கலாநிதி. என். எம். பெரேரா**



**J. றெரிஷா**
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Influence of Social Network on Students' Education

**Abstract**

Free education is a gift to the Sri Lankan students. Students must be accountable for the responsibilities taken by the state. Social networking nowadays increasingly penetrates into the academic activities of students. General views about social networking side more towards the darker side. The purpose of this study is to reveal the good and bad in social networking and to make students aware of the results, which they might get if they don't handle social networks in a proper way.

**Key words:** *Social networking, education, students.*

**INTRODUCTION :**

Education is an extremely important factor for every student in a country. During school days students must give most prominence to education than other activities. Sri Lanka spends a considerable amount of money for education for more than 60 years .The Sri Lankan government has increased its responsibility by allocating more funds in the budget to educate her children for a better future. But, whether the same responsibility is acknowledged by the student community for their better life is a question, due to the extensive influence of social network, which has penetrated in their academic activities. Therefore it is immense importance to study the impacts of social networking in Sri Lankan educational status. The advent of social networks like two sides of a coin bring with it both positive and negative.

**SOCIAL NETWORKING SITES (SNS) :**

Social networking sites (SNS) are online communities of internet users who want to communicate with other users about areas of mutual interest, whether from a personal, business or academic perspective (William, Boyd, Dunstan, Chin, Diamond & Mergenthaler 2009). Social networking sites include : Facebook, Twitter, Viber, Whatsapp, Vimeo, Flickr, Google+, yahoo messenger, Blackberry messenger, Skype, Google messenger, Instagram , IMO, LinkedIn and Pintrest. These networking sites are used by most people to find new friends and to keep in touch with old friends (Asemah & Edegoh 2012).

**BENEFITS OF SOCIAL NETWORKING :**

It is always preferable to start with the benefits. Recently some schools in Sri Lanka have started to use these sites to promote education, keep students up to date with assignments and offer help to those in need. Social networking sites provide an outlet for teens to express themselves in their own unique ways. In addition, they serve both as a meeting



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

place for teen interaction and showplaces for teens' artistic and musical abilities (Boyd 2007). Virtually these sites also help students to find academic related friends. For example; you are doing a survey on soil science and you have to state a graph representing the diverse views of about 100 people on a certain subject. It will be a cock and bull story if you are going to survey 100 persons directly. But if you blog into social networking sites, you'll have the views and comments of more than a 100 persons on seconds.

**DRAWBACKS OF SOCIAL NETWORKING :**

Now let's focus on the drawbacks of these sites. Since the coming of these sites it is assumed that the academic status of students is facing a great challenge. Achievement or academic performance is the outcome of education; the extent to which a student, teacher or an institution has achieved their goals. Nowadays students' academic progress suffer setback as a result of the addiction to the online rave of the moment-Social networks. Students, instead of reading books, spend their time chatting and making friend though SNS .This definitely causes adverse effects on their education level.

Researcher Raquel concluded that, it seems, when students are connected via social networks, they lose their mind entirely. Today it is a common sight to see teens chatting via SNS in highly sensitive and organized places like Churches, Kovils, mosques seminar halls etc. Some are so carried away that even as they are walking along the highway, they keep chatting.

E. Dharshan Eugene Mithra
156 Marks



Arankanthan Sapthaki
156 Marks



Thevarajah Devina
155 Marks



Ithayakumar Rishalini
155 Marks



Thayanantharavi Uvarnika
154 Marks



Niranjanakumar Mathurakshana
154 Marks

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Selvachandran
Subeeksha
154 Marks



Jeyakulendren
Jenushika
154 Marks

## KUDOS TO ALL THE ACHIEVERS OF THE G.C.E O/L - 2016 ST.CECILIA'S GIRL'S COLLEGE




## KUDOS TO ALL THE ACHIEVERS OF THE G.C.E O/L - 2017 ST.CECILIA'S GIRL'S COLLEGE




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L BEST RESULTS - 2016
### (BIO & MATHS)



## A/L BEST RESULTS - 2016
### SCIENCE, MATHS, COMMERCE & ARTS



## A/L BEST RESULTS - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனை வளங்கள்

மனையின் பயனை நீ அறிவாயா?
உன்னை மகிழ்ச்சிப்படுத்தும் - மனை
வளங்கள் நீ அறிவாயா?

குடும்ப சுகிதம் மனையை நாட
வசதிகள் தந்து மகிழ்ச்சியைப் பொழிந்து
குடும்ப தேவைகளை நிறைவேற்றும்
தலை வணங்கும் தலமாம் மனை
எதிர்பார்க்கும் திருப்தியை அளித்து
மன நிம்மதியை அளிக்கும்
உன்னத இடமாம் மனை

விண்மீன் போல குடும்பம் வாழ
செழிப்பைத் தரும் வீட்டு வளங்கள்
ஆகிடுமே மனித, மனிதனல்லாத வளங்களாக
மனித வளமாம் திறன், அறிவு, மனப்பாங்கு
மனிதனை மதித்திடச் செய்யும்
உழைப்பாமே உயர உன்னத வழி
உழைப்பு ஆகிடுமே மனித வளமாய்

மனிதன் அல்லாத வளத்தைப்
பிரித்தான் அறிஞன் இரண்டாக
பௌதிக, பௌதிகமல்லாத வளம் என
பணம், சொத்து ஆகிடுமே பௌதிக வளமாய்
மனிதன் பொருளாதாரத்தில் உயர்ந்திட
நீரும், இடவசதியும், சமூகவசதியும் ஆனதே
நம் உயிராக
இவற்றின் பொதுப்பெயராய் ஆனதே பௌதிக வளம் என

நேரம் பொன்னானது என மொழிந்தான் - புலவன்
சங்ககாலத்திலே
மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்து என மொழிந்தான் - விஞ்ஞானி
விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் காலத்திலே
நேரமும் மின்சாரமும் ஒன்றாகியதே - இன்று
பௌதிகமல்லாத வளம் என்ற வகைக்குள்

விண்ணுலகில் நாம் வாழ
மனையை திட்டமிட்டு அமைந்திடுவோம்
மனையில் மகிழ்ச்சியைக் காண
மனை வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவோம்
உன்னத பிரஜையாம் நம் வாழ்வு - ஆகிடுமே
மனை வளத்தைப் பாதுகாப்பதால்.



P.நிலுஷியா
$12^B$ கலைப்பிரிவு
(2018 Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்களை காப்பாற்றிய ஔவையாரின் கதை

ஒரு சமயம் சோழ மன்னனுக்கு வினோத மான ஒரு சிந்தனை தோன்றி, உடனே தன் அரண்மனைப் புலவர் கள் அனைவரையும் அழைத்து, நாளை காலைக்குள் நான்கு கோடிப் பாடல்கள் எழுதி வர வேண்டும் என ஆணையிட்டார்.

நான்கு பாடல்கள் எழுதவே நான்கு வார மாகிவிடுகிறது. இதில் எங்கே நான்கு கோடிப் பாடல்கள் எழுதுவது என்று புலவர்கள் எல் லாம் சிந்தை கலங்கி நின்ற போது, அங்கே வந்த ஔவையார் "என்ன வருத்தம்?" என்று கேட்க, அவர்கள் அரசனின் உத் தரவைச் சொல்ல, ஔ வையார் இள முறுவலு டன் "இவ்வளவுதானா, நான் எழுதித் தருகின் றேன் நான்கு கோடி பாடல்கள். கொண்டு போய் உங்கள் மன்ன னிடம் கொடுங்கள்" என்று கூறி, நான்கு பாடல்கள் மட்டும் எழுதி அவர்களிடம் கொடுக்க,



புலவர்கள் தயங்கி நிற்க, ஔவை யார் "ஒவ்வொரு பாடலும் ஒரு கோடி பொன் மதிப்புடையது சென்று கொடுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். புலவர் கள் அவையில் இந்த கோடிப் பாடல்கள் வாசிக்க, மன்னன் வியந்து, இவற்றை நிச்சயம் ஔவையார் தான் இயற்றியிருக்க முடியும் எனப் புவர்களைப் பார்க்க, புலவர்கள் அனைவரும் "ஆமாம்... ஔவையார் இயற்றியதுதான்" எனக் கூற, மன்னன் மன மகிழ்ந்து, ஔ வையை அழைத்து பெரும் பரிசு அளித்து, பெரு மரியாதை செய்து போற்றினான் என்பது வரலாறு.

அந்த நான்கு கோடிப் பாடல்கள் வருமாறு,

❋ **மதியாதார் முற்றம் மதித்தொரு கால் சென்று மிதி யாமை கோடி பெறும்**

நல்ல பண்புகளை கைகொள்ளாமல் வாழ்பவர் வீட்டிற்கு செல்லாதிருப்பது கோடி பொன்னுக்கு சமம் அல்லது மதிக்காதவர் வீட்டுக்கு செல்லாமல் இருப்பது எனவும் பொருள் கொள்ளலாம்.

❋ **உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில் உண்ணாமை கோடி பெறும்.**

உணவை அருந்த அன்புடன் அழைக்காமல் வெறும் வாய்ச் சொல்லில் அழைப்போர் வீடுகளில் சாப்பிடாமல் இருப்பது கோடி பொன்னுக்கு சமம்.

❋ **கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்**

கோடி பொன்னைக் கொடுத்தாவது, நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களிடம் சேர்ந்து வாழ்வது கோடி பொன்னுக்கு ஒப்பாகும்.

❋ **கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக் கோடாமை கோடி பெறும்.**

கோடி பொன் கொடுப்பதாகச் சொன்னாலும் சொன்ன சொல் மாறாமல் வாழ்பவன் கோடி பொன்னுக்குச் சமம்.



லீசா
தரம் - 6L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசையால் வந்த வினை



ஓர் ஊரில் பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த பேராசை கொண்டவன். அத்துடன் உலோபியாகவும் இருந்தான். பேராசைக் குணமுடைய அவன் தன்னிடம் உள்ள பணம் இன்னும் பெருக வேண்டும் என விரும்பினான்.

பணத்தைப் பெருக்குவது எவ்வாறு? அதற்கான வழி யாது? என அவன் சிந்திக்கத் தொடங்கினான். இறுதியில் கடவுளை நோக்கித் தவம் இருந்து வரம் பெறுவதே சிறந்த வழி என்று தீர்மானித்தான்.

அவன் உணவு உண்ணாமலும் நீரை அருந்தாமலும் இருந்து கடுமையான தவத்தை மேற்கொண்டான். அவனது தவத்தைக் கண்ட கடவுள் மகிழ்ச்சி கொண்டு, அவன் முன் தோன்றினார். கடவுளைக் கண்ட பேராசைக்காரன் அவரை வணங்கினான். கடவுள் அவனைப் பார்த்து "அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும்" எனக் கேட்டார்

அவன் கடவுளைப் பார்த்து, "சுவாமி நான் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும்" எனக் கூறினான். கடவுளும் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

கடவுளிடமிருந்து வரத்தைப் பெற்ற பேராசைக்காரன் மகிழ்ச்சி அடைந்தான். தன் வீட்டில் உள்ள பொருட்களையெல்லாம் ஒவ்வொன்றாகத் தொட்டான். அவை யாவும் பொன்னாக மாறிப் பளபளத்தன. அதைக் கண்ட அவனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இந்த உலகிலே நானே பெரிய பணக்காரன் என அவன் கர்வமடைந்தான்.

பட்டினி கிடந்து தவத்தை மேற்கொண்ட அவனுக்குப் பெரும் தாகமும் பசியும் உண்டாகின. தண்ணீரைக் குடிக்க நினைத்து தண்ணீர்க் குவளையைத் தொட்டான். குவளையும் நீரும் பொன்னாக மாறின. உணவைத் தொட்டான் உணவும் உணவிலிருந்த தட்டும் பொண்ணாக மாறின. இவ்வாறு அவன் தொட்டதெல்லாம் பொன்னாக மாறியதால், உணவு, நீர் முதலியன இல்லாமல் பட்டினி கிடந்தான். சில நாட்களில் நோயாளியாகி அவன் இறந்து போனான்.



சி. அக்ஷரா
தரம் - 3C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையைப் போலொரு தெய்வம் உண்டோ?

தந்தையைப் போல் உலகிலே
தெய்வமுண்டோ? ஒரு மகளுக்கு
சர்வமும் அவர் என்றால்
விந்தை உண்டோ?
கண்ணிமை போலே
என்னைக் காத்தார்
கடமையை - யான்
மறவேனோ?
தன் உயிர் போலே
என் உயிர் காத்த,
செம்மலை - யான்
மறவேனோ?
அன்னையை இழந்து
ஆறாத் துயரில்
தனியான போது,
சிந்தையில் வைத்து
சீருடன் காத்த
தந்தையை யான்
மறவேனோ?
பதினாறு வயதை
யான் கடந்த போதும்,
உணவூட்டி
உள்ளம் மகிழ்ந்த
அண்ணலை யான்
மறவேனோ?
பாரினிலே - என்னை
படித்தோங்க வைத்த
பரமனை யான்
மறவேனோ?
சேவகனாய் நின்று
சேவைகள் ஈந்த
வள்ளலை யான்
மறவேனோ?
காவலனாய் நின்று
கண்ணியத்துடனே
கடமையை வென்ற
கருணைக் கடலை
என்றென்றும் யான்
மறவேனோ?
வான் மழை போலே
வற்றாத அன்பால்
வளர்த் தெடுத்தாய்
என்னை நீயே
கண் காணாத
தூரம் நீ சென்ற
போதும்.
என்னுள் அன்புக்
கடலாய் நீயே....
தந்தையைப்போல்
ஒரு தெய்வம் உண்டோ?
சர்வமும் அவன் என்றால்
விந்தை உண்டோ?
காரிருள் போக்கி
கனிவுடன் காத்த
தந்தை யான்
மறவேனோ
அன்புத் தந்தையை
யான் மறவேனோ?



வா. டிலக்ஷனா
தரம் - 7E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்

விடியாத இரவுகள் போல் தினந்தோறும் எம் வாழ்வு
வாயாரப் புகழ்பாடு சுதந்திரந்தான் வந்திடுமோ?
புலம்பியழும் குழந்தை போல்
நம் எண்ணங்கள் பரவிடவே!
வஞ்சனைகள் தீர்ந்திடுமோ வையமதில் வாழ்ந்திடவே !!!

மொழிபேதம் இல்லையென்றால் இறுமாப்பு வாத்தியாரு?
மதபோதம் போதிக்க நாதியற்ற தலைவர்கள்!
சாதிமத பேதமற்ற துல்லிய சிந்தனைக்கு
உரமூட்டி உழைத்திடுவோம்! சுதந்திரமாய் வாழ்வதற்கே!!!

அடக்குமுறைச் சக்கரத்தின் அச்சாணி எதுவென்று
புரியாமல் புலம்புகின்ற புதுமைகள் பலவுண்டு!
மொழியுரிமை பெறுவதற்காய் முன்னின்று உழைத்த பலர்
மூட்டை முடிச்சுடனே அகதியான கதையுமுண்டு!!

சீரும் சிறப்புடனே வாழந்து வந்த காலங்கள் – தமிழ்
வரலாற்றை மீட்கையிலே கண்கள் பனிந்து நிற்கும்
இழந்தவைகள் உரமாகி நம்மண்ணைத் திடங்கொள்ள
வைப்பதற்கு “சுதந்திரம்” தேவையென்றே வாதிடுவோம்!!

நம்பிக்கை சிறகடிக்க நல்லிணக்கம் கோலோச்சும்
நாவறண்டு சத்தமிடும் ஆன்மாவின் ஓலங்கள்
புதுமைகள் படைத்திடவோ நம்மண்ணை உரசிநிற்கும்
“சுதந்திரந்தான்” என்று வரும்
உயிராக அழைப்பதற்கு!!



ம. ரேஜித்தா
தரம் - 9E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நாங்கள் பூவைப் போன்றவர்கள்

சிவப்பு வெள்ளை
சீருடை அணிந்து
பாடசாலை சென்றிட....

பாடம் பல படித்து
மயில் போல் ஆடி
குயில் போல் பாடி

பெற்றோரை வணங்கி
ஆசிரியரை மதித்து
வெற்றிகள் பல பெற்றிட

வண்ணத்துப்பூச்சிகள் போல்
பாடசாலையில் சிறகடித்துப் பறக்க
எழும்புவோம் சந்தோஷமாக ...





**J. செரீன்**
தரம் - 3C

## பொது அறிவு வினாக்கள்

(1) அமெரிக்கக் கொடியில் எத்தனை கோடுகள் உள்ளன?
**13 கோடுகள்**

(2) மனித உடலில் முதலில் உருவாகும் உறுப்பு எது?
**இதயம்**

(3) மண்டையோட்டில் அசையும் பகுதி எது?
**கீழ்த்தாடை**

(4) கோணல் கோபுரம் என வர்ணிக்கப் படுவது எது? அதன் உயரம் என்ன?
**பீசா கோபுரம் (உயரம் 56cm)**

(5) உலகிலுள்ள முதல் கலை களஞ்சியத்தை (Encylopal) அச்சிட்டு வெளியிட்ட சிறுவனின் பெயர் என்ன? சிறுவனின் வயது எத்தனை?
**கிரேக்ஷியாப் - வயது 15**

(6) இலங்கையில் புகழ் பூத்த சுவர் ஓவியம் எது?
**சிகிரியா ஓவியம்**

(7) உலகில் மிகப் பெரிய நகரம் எது?
**லண்டன்**

(8) இரத்த அமுக்கத்தின் இயல்பான அளவு
**120-80mm பாதரச மட்டம்**

(9) மனித உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பி எது?
**கல்லீரல்**



**ரா. விதுஷாயினி**
தரம் - 7T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகில் புகழ் பெற்ற நூல்களும் அவற்றை இயற்றியோரும்.



| | | |
|---|---|---|
| திருக்குறள் | – | **திருவள்ளுவர்** |
| சிலப்பதிகாரம் | – | **இளங்கோ அடிகள்** |
| திருவிளையாடற் புராணம் | – | **புலியூர் நம்பிபவநந்தி முனிவர்** |
| மகாபாரதம் | – | **வேதவியாசர்** |
| கீதாஞ்சலி | – | **இரவிந்திரநாத் தாகூர்** |
| சாகுந்தலம் | – | **காளி தாசன்** |
| பகவத் கீதை | – | **வேதவியாசர்** |
| இராமாயணம் | – | **வால்மீகி** |
| இயேசு காவியம் | – | **கண்ணதாசன்** |
| அரிச்சந்திர புராணம் | – | **வீரகவிராயர்** |



**பீ. ரோஸினி**
தரம் - 6ட

# படித்ததில் பிடித்தது



(1) உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதை விட உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்ல வை

**அன்னை தெரேசா**

(2) அளவுக்கதிகமாகப் பேசுவது எவ்வளவு தீமையோ அதே போல் குறைவாகப் பேசுவதும் தீமையே

**காமராஜர்**



(3) கடவுள் நம் பக்கம் இருக்கிறார் என்பதில் நான் அக்கறை கொள்ள வில்லை, என்னுடைய அக்கறையில் பெரும் பகுதி கடவுள் எப்பொழுதும் சரியானவர்

**ஆபிரகாம் லிங்கன்**



(4) பிரார்த்தனை செய்யுங்கள் கடவுளுக்கு அருகே செல்லலாம் ஆனால் சேவை செய்யுங்கள் கடவுள் உங்கள் அருகில் வருவார்.

**அன்னை தெரேசா**

(5) உண்மையாகவே என்னால் முடிந்ததை செய்தபோதிலும் எல்லாவற்றையும் செய்ய என்னால் முடியாது.

**ஜான் ஸ்காடர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

(1) புராதன இலங்கையின் கிராம சபைகள் எவ்வாறு அழைக்கப்பட்டடன? - **கம்சபா**

(2) G.ST என்றால் என்ன?
**Good Service Tax**

(3) இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு? - **10650**

(4) வருடத்தின் ஒரே நாளில் 2 மணி நேரத்தில் பகலும், இரவும் சரியாக 12 மணி நேரம் மட்டும் வருவது எந்த நாளில்? - **மார்ச் 21**

(5) மனிதத் தலையிலுள்ள மொத்த எலும்புகள் எத்தனை? - **22**

(6) அன்னை தெரேசா பிறந்த நாடு எது?
**- அல்போனியா**

(7) பரப்பளவில் பெரிதான இந்திய மாநிலம் எது?
**- ராஜஸ்தான்**

(8) ஓர் அடிக்கு எத்தனை சென்ரி மீற்றர்?
**- 30**

(9) சூரியன் உதிக்கும் நாடு என எந்த நாட்டினைக் குறிப்பிடுகின்றனர்? - **ஜப்பான்**

(10) ஷாரிப் பாட்டர் நாவலின் ஆசிரியர்
**- ஜே.கே.ரௌலிங்**

(11) சமூகவியல் என்ற சொல்லை தோற்றுவித்தவர்
**- காம்டே**


(12) உலகத்திலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு - **ஸ்பெயின்**

(13) அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு?
**ஐக்கிய இராச்சியம்**

## ஈமு



ஈமு ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பறவை ஆகும். உயிர் வாழும் பறவை இனங்களின் தீக்கோழிக்கு அதிகமாகவும், அடுத்ததாகவும் பெரிய பறக்காத பறவை இதுவாகும். இது ஏறத்தாழ இரண்டு மீற்றர் உயரமும், சுமார் 45 கிலோ எடையும் கொண்ட பறவையாக வளரக்கூடியது. உடல் சாம்பல் நிறமானது. இது ஆஸ்திரேலியாவில் பரவலாகக் காணப்படுகிறது. வேகமாகச் செல்லக்கூடியது. மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் இதனால் ஓட முடியும். இது பல்வகையான தாவரங்களையும், பூச்சிகளையும் உண்ணும். ஈமு, உணவிற்காக நீண்ட தூரம் செல்லக்கூடிய பறவை ஆகும்.



**உ. ரெகேஷ்னா**
தரம் - 6ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிமுகத்துள் கங்கை

உலகம் இன்று வறுமையுற்றுள்ளது
அன்பிலே வறிய
வன்பாலை உலகு செய்தோம்
அன்பகத்தீர்
தயவு செய்து ஒரு பிடி அன்பு செய்வீரா?

பாளையில் இருந்தால் தான்
அகப்பையில் வரும்
உனது பாத்திரத்தின் உள்ளே
ஒட்டிக் கொண்டிருக்கும்
அன்பின் அவிழ்பதம் கண்டாயா?
ஆயின் நீ பாக்கியசாலி.

அன்பின் வறிய அயலான் ஒருவனுக்கு
அதை வழங்கு
ஒரு துளி நேசிப்பில் தொடங்குகிறது
அன்பின் இதழவிழல்!

அன்பின் அவிழ்பதம் அளித்தாயா?
அதன் எதிர்வரவு காத்திருக்காதே
வரவை எதிர்வு காத்திருப்போன்
வாழ்க்கையோ ஓர் தன்மலர்வின் வெளியகம்!

காவிய மேகலையாள்
தன் மலர்ந்த வாழ்வின் பாத்திரமாகிய போது
அன்பின் குழைவை அள்ளி அள்ளி
வழங்கிக் கொண்டேயிருந்தாள்
வற்றாத அன்பின் வாழ்வுடைமையில்
இது ஒன்றும் அதிசயமில்லை!
ஆதலால் அன்பின் ஊற்று முகத்தை
திறந்து வை மானுடனே!
தன் மலர்ந்த வாழ்வு உனதாகும்!

துன்புறுவோரின் காந்தாசியையும்
கழுவி விடும் அன்பின் ஊற்று
இன்பெருக்காய் எங்கும் அவிழ
அங்கழியும்
தான், தனதென்ற சிறு வட்டம்!
சிறு வட்டம் தாண்டி எழுகின்ற பேரன்பு
ஆகாய கங்கையையும் பூமிக்கு இறக்கிவரும்.
தூயன்பின் துளி போதும் தொடங்கு...!

**அ. ஏஞ்சல் றுக்ஷலா**
தரம் - 7T



## முதன்மையானவர்கள்



**அமராவதி** - காதல் வாசித்த இரங்கற் பா
**அகலிகை** - கல்லானாலும் கணவன் எனக் கிடந்தவள்
**சீதை** - ஆணாதிக்கத்தால் அக்கினியில்தீக்குளித்தெழுந்த அனிச்சம்.
**சூர்ப்பனகை** - மூக்கறுக்கப் பட்ட முதல் காதல்
**மாதவி** - கன்னிகை குலத்தில் பிறந்த கண்ணகி
**திரௌபதை** - ஐவர் பகிர்ந்து கொண்ட ஒற்றை இதயம்
**கண்ணகி** - மதுரை ஓவியத்தை அழித்த கற்புத் தூரிகை
**குந்திதேவி** - கர்ணனை அநாதையாக்கி கன்னியம் காத்தவள்
**மணிமேகலை** - கன்னிகை குலமும் வணிக குலமும் சேர்ந்து செய்த கடவுள் குலம்
**காந்தாரி** - இவளவன் கண்கள் இருண்டதால் இவளும் கண்கள் இருண்டாள்

**க.சர்மிக்கா**
தரம் -5L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Prefect system in the school



Every school in Sri Lanka has the prefect system. This is found all over the world. It has been an asset in maintaining discipline. Usually the prefects in the school are the best students in the field of education, sports and discipline. These carefully selected students are just a hand ful when compared with the students strength of the school, yet they are able to help in making the school work smoothly.

They are entrusted with different kinds of work, such as keeping the school clean, maintaining discipline in the class room and at school gatherings. They heip to keep the rules and traditions of the school. In fact they guide the other students in the right way of life in school.

"They are a great asset to the school. They help the principal, staff and the school at large to function smoothy so the prefect system in the school is very essential.



# பொது அறிவு

(1) சமையலுக்கு முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட காய் எது?
**அவரைக்காய்**

(2) ஈழத்தில் தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல் எது?
**மோகனாங்கி**

(3) எரிமலை இல்லாத கண்டம் எது?
**அவுஸ்திரேலியா**

(4) மிகவும் வெப்பமான கோள் எது?
**வெள்ளி**

(5) கண்கலிருந்தும் பார்வையில் லாத பிராணி எது?
**வௌவால்**

(6) நாய்களே இல்லாத நாடு எது?
**சிங்கப்பூர்**

(7) இந்தியாவின் முதல் விண்வெளி வீராங்கணை யார்?
**கல்பனா சாவ்லா**

(8) குங்குமப் பூ விளையும் ஒரே இந்திய மாநிலம் எது?
**காஷ்மீர்**

(9) மிக வேகமாக ஓடும் பறவை -யினம் எது?
**தீக்கோழி**

(10) தமிழின் முதல் காப்பியம் எது?
**சிலப்பதிகாரம்**

ர. பிரஜன்னியா
தரம் - 8S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Blue Moon



*This article is about an extra full moon that arises in a subdivision of a year during the lunar eclipse. Either the third of four full moons in season or second full moon in a month of the common calendar is called "Blue Moon"*

*The phrase has nothing to do with the actual color of the moon. Although a factual "Blue Moon" (likely tingle blue in color) may occur in certain atmospheric conditions.*

***Eg:*** *If volcanic explosions of fires leave particles in the atmosphere of just the right size to preferentially sprinkle red light.*

*The term has usually referred to an additional full moon where a year which normally 12 full moons has 13 instead. The blue moon reference is applied to the third full moon season with four full moons, thus correcting the timing of the beginning of a season too. This happens every two or three years. Scientists say that a full blue moon may appear for every 75 – 85 years.*

*According to the rarity of the blue moon, the term is used colloquially to mean a rare event as in the phrase "Once in a blue moon"*

| | |
|---|---|
| *Once lunation* | *= 29.53 days* |
| *(An average lunar cycle)* | |
| *A tropical year* | *= 365.24 days.* |
| *So total lunation* | *= 365.24 days* |
| | *29.53 days* |
| | *= 12.37 lunation* |

*This 0.37(x3=1.21) becomes after 3 years as one extra lunation and it is blue moon.*

*In the widely used Gregorian calendar which was introduced by pope Gregory xiii (This calendar was a refinement to the Julian calendar involving approximately 0.002% correction). There are 12 months in a year and normally there is one full moon each month. Each calendar year contains roughly 11 days more than the number of days in 12 lunar cycles, the extra days accumulate. So, every two or three years there is one extra full moon which appears in the sky called blue moon.*

*These blue moons necessarily fall in one of the four seasons giving that season with four full moons, instead of the usual three and hence a Blue Moon.*

**M.L. Fathima Shamah**
**Grade - 11^E^**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வளர்ச்சியில் பங்களிப்போர்

**அதிபர், ஆசிரியர்கள் :**

நாட்டின் தலைவன் குடிமக்கள் மீது எவ்வளவு கவனம் செலுத்தினால் நாடு செழிப்படையுமோ அதேபோன்றே அதிபர் பாடசாலையிலும், ஆசிரியர் வகுப்பறையிலும் மாணவர் ஒவ்வொருவர் மீதும் கவனம் செலுத்தும் போது அவர்களுடைய தனித் திறமைகள், இலைமறைகாய்களாக இருந்தாலும் அவை வெளிக் கொணரப்படும். "இன்றைய இளம் தலைமுறையினர் நாளைய தலைவர்கள்" அவர்களை ஒளிமயமாக்குவதில் அதிபருக்கும், ஆசிரியருக்கும் பெரும் பங்குண்டு.

**மாணவர்கள் :**

மாணவப் பருவம் நிலையானதல்ல. அப்பருவத்தே நாம் கல்விப் பயிரை நிலைநாட்ட வேண்டும். இக்காலத்தே வீணான எண்ணங்கள் எங்கள் கல்விப் பெருங்கடலை அழித்துவிடும். இதனாலேயே மூதாதையர் 'இளமையில் கல்', 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து', 'காலத்தே பயிர் செய்', 'நிறைகுடம் தளம்பாது', 'பாடை புகினும் ஏடை கைவிடேல்' என பல அரிய பெரிய வார்த்தைகளைக் கூறிச் சென்றுள்ளனர். இவ்வாறு வார்த்தைகளைக் கண்ணெனக் கொண்டு ஒழுக்க சீலர்களாகவும், கல்விமான்களாகவும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

**பெற்றோர் : -**

பெற்றோர்களுக்கு தம் பிள்ளைகளை வழிநடத்துவதில் பெரும் பங்குண்டு. பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பு, நன்மை, தீமைகளை கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் ஒரு குறிக்கோள் இல்லாத வாழ்க்கையாகவே அமைந்துவிடும். மேய்ப்பான் இல்லாத கன்றுக் குட்டிகளாக அங்கும், இங்கும் அலைந்து திரிய வைக்காமல் அவர்களுக்குப் பிடித்தமான துறையில் ஒளிர வைப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.



**சமூகம் :**

நாம் எவ்வளவு தான் கல்வி கற்றாலும் சமூகத்தோடு ஒட்டப் பழகாதவனுக்கு கற்ற கல்வியால் எவ்வித பயனில்லையென்றே கூற முடிகிறது. இதனாலேயே முக்காலத்திற்கு பொருத்தமான கருத்துக்களை விதைத்துத் தந்த பொய்யாமொழிப் புலவர் "உலகத்தோடு ஒட்ட ஒழுகாதவன் பல கற்றும் அறிவில்லாதவன்" எனக் கூறுகின்றார். எனவே படித்தால் மட்டும் போதாது பண்பாகவும், மக்களோடு சேர்ந்துவாழக் கூடியவனாகவும் இருக்க வேண்டும்.



**சி. ஜயப்பிரணாகினி**
13 வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பின் சிறப்புக்கள்



இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் நோன்பு ஓர் தனித்துவமான ஓர் வணக்கமாகும். இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கும் மனிதர்களை உருவாக்குவதற்கான ஒரு பயிற்சி பாசறையாகத் திகழ்கின்றது.

அறபு மொழி வழக்கில் நோன்பைக் குறிக்க **"ஸவம்"** என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. தவிர்ந்து கொள்ளல், விலகியிருத்தல் என்பதே. இதன் மொழிக் கருத்தாகும். இஸ்லாமிய வழக்கில் ஒரு முஸ்ஸிம் அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்தோடு உண்ணல், பருகல், உடல் உறவு கொள்ளல் முதலான அனுமதிக்கப்பட்ட காரியங்களிலிருந்து அதிகாலை முதல் சூரியன் மறையும் வரையும் விலகியிருத்தலைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

நோன்பானது புறக்கணிக்க முடியாத ஓர் கட்டளைக் கடமையாகும். நியாயமான காரணமின்றி ஒருவர் ரம ழானில் நோன்பை விட்டுவிடுவது பெரும் பாவம் என்பதை இமாம்கள் கூறியுள்ளனர். அல்குர்ஆன் நோன்பு கடமையென இவ்வாறு கூறுகின்றது.

"ஈமான் கொண்டோர்களே! **உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் அது விதிக்கப்பட்டுள் ளது. அதன் மூலம் நீங்கள் இறையச்சம் உடையோர் ஆகலாம்"** ( அல்பகரா :- 183)

ரமழான் மாதம் எத்தகையது என்றால் முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் நன்மை தீமைகளைப் பிரித்தறிவிப்பதாகவும் அல்குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே உங்களில் எவர் அம் மாதத்தை அடைகின்றாரே **(அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பை)** வேறு நாட்களில் நோற்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே நாடுகின்றானே தவிர உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. குறிப்பிட்ட நாட்கள் **நோன்பில் விடுபட்டுப் போனதைப்)** பூர்த்தி செய்யவும் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகின்றான்) **அல்பகரா : 185)**

இத்தகைய நோன்பானது அடியார்களுக்காக மறுமையில் மன்றாடும். என் இரட்சகனே! **பகலில் இவனை உணவை விட்டும் ஆசைகளை விட்டும் தடுத்தேன். இவனது விடயத்தில் எனது பரிந்துரையை ஏற்றுக்கொள்!** என நோன்பு கூறும். **இரவில் இவனைத் தூக்கத்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விட்டும் தடுத்தேன். இவனது விடயத் தில் எனது பரிந்துரையை ஏற்றுக்கொள்!** என அல்குர்ஆன் கூறும் அவ்விரண்டி னதும் பரிந்துரைகள் ஏற்கப்படும். **(அஹ் மத்)** மற்றும் பாவங்களுக்கு மன்னிப் பையும் பரிகாரத்தையும் பெற்றுத்தரக் கூடியதே "யார் ரமழானின் ஈமானுடனும் அல்லாஹ்விடத்தில் கூலியை எதிர்பார்த்த நிலையிலும் நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னய பாவங்கள் மன்னிக்கப் படும். (புகாரி, முஸ்லிம்)

நோன்பானது கணக்கற்ற கூலி யைப் பெற்றுத்தரக் கூடியதாகும். "மனித னின் செயல்கள் அனைத்துக்கும் பன் மடங்கு கூலி வழங்கப்படும். ஒரு நன் மைக்குப் 10 முதல் 700 மடங்கு வரை கூலி வழங்கப்படும். நோன்பைத் தவிர அது எனக்குரியது. அதற்குரிய கூலியை தானே வழங்குகிறேன். அவன் தனது ஆசையையும், உணவையும் எனக்காக விட்டு விடுகிறான்" என அல்லாஹ் கூறு வதாக நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள் ளார். **(புகாரீ, முஸ்லிம்)**

அதேபோல் நோன்பு ஈருலக சுபிட்சத்துக்கும் வழிவகுக்கக் கூடியதா கும்" **நோன்பாளிக்கு இரு சந்தோஷங் கள் உள்ளன. ஒன்று நோன்பு திறக்கும் போது அடையும் சந்தோஷம், மற்றை யது தன் இரட்சகனைத் சிந்திக்கும் போது அடையும் சந்தோஷம் (புகார் முஸ்லிம்)** மற்றும் சுவனத்தில் விஷேட வாயிலைப் பெற்றுத்தரக் கூடியதாகும்.

"சுவனத்தில் ரய்யான் என அழைக் கப்படும். ஒரு வாயில் உண்டு. மறுமை யில் நோன்பாளிகள் அவ் வாயிலினூ டாக சுவனம் நுழைவர் அவர்களைத் தவிர வேறு யாராலும் அவ்வாயிலினால் சுவனம் நுழைய முடியாது" **- (புகாரீ முஸ்லிம்)**

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட நோன்பினை நோற்று அதன் பேற்றை பெற நாங்களனைவரும் உரிய முறையில் இக்கடமையை நிறைவேற்று வதன் மூலம் பல பயன்களையும் பெற் றுக்கொள்ள முடியும். அந்த வகையில் நோன்பின் பயன்களாக அதில் ஒன்று ஆன்மீக விருத்தியைப் பெற முடிகின்றது.

அந்த வகையில் சுவன வாயில் கள் திறக்கப்படுகின்றன. ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான். மலக்குகள் நோன்பாளிகளுக்காக பாவமன்னிப்புக் கோருகின்றனர். அதேபோல் 1000 மாதங் களை விட சிறந்த இரவு ரமழானில் இருக்கின்றது. நரக விடுதலை கிட்டு கின்றது. இவற்றை அடையும் முகமாக அதிகமான திகர் செய்கின்றனர். கொடை கொடுக்கின்றனர். தவ்பா செய்கின்றனர். இதன் மூலம் இம்மாதம் நன்மை எனும் நறுமலர்கள் பூத்துக்குலுங்கும் மாதமாக அமைகின்றன.

நோன்பு காலத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு முஸ்லிம் ஏறத்தாழ 14 மணித் தியாலங்கள் உண்ணாதிருக்கின்றான். பருகாதிருக்கின்றான். ஆசைகளை விட் டும் விலகியிருக்கின்றான். இப்பயிற்சி தொடர்ந்தும் கிடைக்கின்றது. பொறுமைக் கான நீண்டதொரு பயிற்சியாக அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. "பொறுமையின் மாதத்தில் நோன்பு நோற்பது உள்ளத்திலுள்ள அக்கி னியை அழித்துவிடும். **(இப்னு மாஜா)**

அதேபோல் அல்லாஹ்வின் அருட் கொடைகளை உணர்தல், ஏழைகளின் துயரத்தை விளங்குதல், உடல் ஆரோக்கியம் கிட்டல், "நீங்கள் நோன்பு பிடியுங்கள் ஆரோக்கியம் பெறுவீர்கள். (ஹதீஸ்) இறை வனுக்கு முழுமையாக அடிபணியப் பயிற்சி யும் கிட்டுகின்றது.

ஆவே இத்தகைய மகத்துவம்மிக்க நோன்பை நோற்று அதன் அருளைப் பெற்று பயன் பெறுவதோடு ஈருலகிலும் சுபீட்சம் பெறுவோமாக ஆமின்!

நன்றி.



**திருமதி. ஹாசியா முகம்மது நசார்**
(ஆசிரியை -இஸ்லாம்)

# நற்சிந்தனை

- ❊ சினத்தை விட்டு விட்டு கனிவாகவும் அமைதியாகவும் இருத்தல் அவசியம்.
- ❊ நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். கெட்ட மரம் நச்சிக் கனிகளைக் கொடுக்கும்.
- ❊ நாவைக் காப்போர் எதிலும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள்.
- ❊ குழந்தாய் நீ செய்வதனைத்தையும் பணிவோடு செய்.
- ❊ எண்ணிப்பாராமல் செய்யும் செயல் தோல்வியடையும்.
- ❊ ஆண்டவனுக்குப் பணிந்து நடப்போர் தங்கள் அன்னையருக்கு மதிப்பளிப்பர்.
- ❊ அன்பில் அச்சத்திற்கு இடமில்லை மாறாக நிலையில்லா அன்பு அச்சத்தை அகற்றிவிடும்.
- ❊ தம் விருப்பம்போல் நடக்கவிடப்பட்ட பிள்ளைகள் தாய்க்கு வெட்கக் கேட்டை வருவிப்பர்.
- ❊ பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்.
- ❊ ஆண்டவர் முன் அமைதியுடன் காத்திரு தம் வழியில் வெற்றி காண்போரையும் சூழ்ச்சிகள் செய்வோரையும் பார்த்து எரிச்சல் கொள்ளாதே.



**நிலாஞ்சனா ஹரியதாஸ்**
*தரம்* - 3 T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் அப்துல் கலாமின் அமுதவாக்குகள்



❖ வாழ்க்கை என்பது

ஒரு சந்தர்ப்பம் – நழுவ விடாதீர்கள்

ஒரு கடமை – நிறைவேற்றுங்கள்

ஒரு இலட்சியம் – சாதியுங்கள்

ஒரு சோகம் – தாங்கிக் கொள்ளுங்கள்

ஒரு போராட்டம் – வென்று காட்டுங்கள்

ஒரு பயணம் நடத்தி முடியுங்கள்

❖ நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புக்கள் உள்ளன.

❖ அழகைப்பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையை பாழாக்கி விடும். கடமைப்பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

❖ கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல உன்னைத் தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ அதுவே (இலட்சிய) கனவு.

❖ கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே,
அது உன்னை கொன்று விடும்.
கண்ணைத் திறந்து பார்
நீ அதை வென்று விடலாம்.

❖ நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை
நீ எண்ணுவது விண் மீனாக இருந்தாலும் உன் உழைப்பால்
நீ எண்ணியது உன்னை வந்து சேரும்.
(நீ நீயாக இரு)

❖ நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

❖ இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒருபக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ ஆனால் அந்தப்பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.

❖ உலகம் உன்னை அறிவதை விட உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்.

❖ சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.

❖ "வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் நல்ல நண்பர்கள் தேவை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ "வாழ்நாள் முழுவதும் வெற்றி பெற வேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை"

❖ "வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பது தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.

❖ நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

❖ உங்கள் முதல் வெற்றிக்கு பிறகு ஓய்வெடுத்து விடாதீர்கள், ஒரு வேளை அடுத்த முறை தோற்று விட்டால் உங்களுடைய முதல் வெற்றி அதிஷ்டத்தால் கிடைத்தது என்று சொல்ல பல நாக்குகள் காத்திருக்கின்றன.

❖ ஒருமுறை வந்தால் அது கனவு
இரு முறை வந்தால் அது ஆசை
பல முறை வந்தால் அது இலட்சியம்



ச.டினிஷா
தரம் - 5T

---

## புதிர்கள்

போகும் போது ஆங்கிலத்தில் போகுமாம் வரும் போது தமிழில் வருமாம் அது யாது?

கோ வா

ஒரு அம்மாவுக்கு 3 பிள்ளைகள் இருந்தனர் அதில் முதலாக பிறந்த பிள்ளை கேட்டது அம்மா நான் வெளியே செல்லவா என இரண்டாவது பிள்ளை கேட்டது அம்மா நான் உள்ளே வரவா என மூன்றாம் பிள்ளை கேட்டது அம்மா இன்று என்ன கறி என இம் மூன்று கேள்விகளுக்கும் அம்மா ஒரே விடையே சொன்னார் அவ் விடை யாது?

கோ வா

## ஜோக்ஸ்



* **விருந்தினர்** :- உங்கள் வீட்டு நாய் நான் சாப்பிடுவதை ஏன் முறைத்துப் பார்க்கிறது.

**வீட்டுக்காரன்** :- நீங்கள் அதன் தட்டில் சாப்பிடுகிறது எப்படியோ அதற்கு தெரிந்து விட்டது.

* **டாக்டர்** :- நீங்க நிறைய பழம் சாப்பிடனும் முக்கியமா அதிந தோல் சாப்பிடனும்

* **நோயாளி** :- ஆ டாக்டர்

**டாக்டர்** :- உங்களுக்கு பிடிச்ச பழத் தோலையே சாப்பிடுங்க
**நோயாளி** :- எப்படி டாக்டர்

**டாக்டர்** :- உங்களுக்கு பிடிச்ச பழம் எது?

**நோயாளி** :- தேங்காய்





க.ரிஷானி
தரம் - 3C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் புகைத்தல்


☞ புகையிலை சிகரெட்டை தொடர்ந்து புகைக்கும் போது அதிகளவு சுகவீனங்களும். உடல் இயலாமையும், நுரையீரல் புற்றுநோய், நுரையீரல் அழற்சி ஏற்படும். சிகரெட் புகைப்பதனால் சுவாசப்பாதையில் உள்ள கொப்பிக் கலங்கள் அதிகளவு சீதத்தைச் சுரக்கும்.

☞ இச்சீதமானது சுவாசச்சிறுகுழாயை அடைப்பதனால் சுவாசப்பாதையில் உள்ள பிசிர்களின் அடிப்பு தடைபடுவதால் நுரையீரல் அழற்சி ஏற்படும். இதன் போது சுவாசிப்பது சிரமமாகும்.

☞ புகையில் உள்ள *Co* ஓர் சுவாச நஞ்சாகும். Haemoglobin ற்கு $O_2$ ஐ விட CO மீளாத்தாக்க முறையில் இணைந்து கொள்ளும். இதனால் இழை யங்களிற்கும், கலங்களிற்கும் $O_2$ கிடைப்பது கடினமாவதால் அவை இறக்கின்றன.

☞ புகையிலுள்ள *Nicotin* தற்காலிகமாக இதய அடிப்பை கூட்டும். நீண்ட நாளாகத் தொடர்ச்சியாகப் புகைப்பதனால் சுவாசப்பைகுழாய் மேலணிகலங்கள் விரைவாகப் பெருக்கமடைந்து அசா தாரணக் கலங்களின் திணிவு உரு வாவதால் புற்றுநோய் ஏற்படும். இக்கலங்கள் உடைந்து குருதி மூலமாக பரப்புவதால் உடலின் ஏனைய அங்கங்களுக்கும் இதுபரவும்.

## புகையிலுள்ள கூறுகளால் ஏற்படும் பாதிப்பு



☞ $NH_3$ – சுவாசப்பாதையை உறுத்தும்

☞ AS – நச்சுத்தன்மையானது

☞ Carsinogen – புற்றுநோயை உண்டாக்கும்

☞ CO – சுவாசநஞ்சு

☞ HCN, $H_2S$` – நச்சுதன்மையான வாயுக்கள்

☞ Nicotin – இதயதுடிப்பு வீதத்தை கூட்டும்

## உங்களுக்கு தெரியுமா?

☞ ஒரு சிகரெட் புகைப்பதனால் ஒருவரது வாழ்க்கைக்காலம் 7 – 10 நிமிடங்களால் குறைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரிக்க, சிந்திக்க....**

- 1) சிகரெட் புகைப்பவர்களின் வயது முதிராது.
- 2) அவர்களது வீட்டிற்கு திருடன் வரமாட்டான்.
- 3) அவர்களை நாய் கடிக்காது

**ஏன் தெரியுமா?**

- 1) சிகரெட் புகைப்பவர்களுக்கு இளமையிலே இறப்பு நேரிடும் ஆகவே அவர்களுக்கு வயது முதிராது.
- 2) இவர்கள் எந்நேரமும் இருமிக்கொண்டிருப்பதனால் இரவில் கூட திருடன் வீட்டிற்கு வரமாட்டான்.
- 3) கையிலே ஊன்றுகோலை பயன்படுத்த நேரிடும். எனவே நாய்கூட பயத்தினால் கிட்ட வராது

**R.நிரோசா**
$12^{B}$ கலைப்பிரிவு



# சாயங்காலத்தின் சந்தோசங்கள்



**போய் வருகிறேன்**
**பொழுது விடை கேட்டது**

**ஆகட்டும் என**
**அழகாய் தலையசைத்தன**
**மரங்கள்**

**வேகம் வேண்டாம்**
**விளையாடிவிட்டுச் செல்லலாமே**
**மேகங்களிடம் வேண்டிக்**
**கொண்டது – வானம்**

**அதிகாலைக்கு அலாரம் வைக்க**
**வேண்டும் நான் அவசரமாய்**
**கூட்டை அடைந்தது – காகம்**

**செல்லமே என**
**செடிகள் மடிசாய்த்தன**
**மலர்களை !**

**தெரிந்த கதை சொல்லட்டுமா?**
**தென்றல் வந்தது**
**தெம்மாங்குடன்**

**சாயங்காலத்தின்**
**சாசுவத சங்கீதங்கள்**
**சந்தோசமாய்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க வைக்கும்

# விவேகானந்தர் நற்சிந்தனைகள்



★ நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல், நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகிவிடும்

★ இன்னொருவனுக்கு தீமை விளைவிக்கும் போது, உனக்கே நீ தீமை செய்து கொள்கிறாய், ஏனெனில் நீயும் அவனும் சகோதரர்கள்.

★ யாருடைய கை வாங்குவதற்கு நீழ்கிறதோ அவன் மிக தாழ்ந்தவன் யாருடைய கைகொடுப்பதற்கு நீழ்கிறதோ அவன் மிக உயர்ந்தவன்.

★ நாம் எதனாலும் திருப்தியடைய மாட்டோம். நாளையே இவ்வுலகம் சொர்க்கமாக மாறினாலும் திருப்தியடைய மாட்டோம். எல்லையற்ற ஆசை எல்லையற்ற அறிவால் தான் திருப்தியடையும்.

★ மக்கள் பொதுவாக வாழ்விலுள்ள குறைபாடுகளை எல்லாம் தங்களுடன் வாழ்பவர் மீதோ அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய், பிசாசு என்று கற்பித்துக்கொண்டு அது தலைவிதி என்று சொல்லுகின்றனர். விதி என்றால் என்ன? அது எங்கே உண்டு? எதை விதைத்தோமோ அதையே அறுவடை செய்வோம். எனவே பொருட்டுணர்வதற்கு ஒருவரும் இல்லை பாராட்டுவதற்கும் ஒருவரும் இல்லை.

பி.கிருத்திகா
தரம் - 3T



## நல்ல விதைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நட | - | அதிரவின்றி | சிந்தி | - | சுயமாக |
| பேசு | - | பணிவாக | நம்பு | - | சரியாக |
| உண்ணு | - | அளவாக | பழகு | - | நாகரிகமாக |
| சுவாசி | - | ஆழமாக | திட்டமிடு | - | முன்னதாக |
| தூங்கு | - | அமைதியாக | ஈட்டு | - | நேர்மையாக |
| உடுத்து | - | அழகாக | சேமி | - | சிறிதாவது |
| செயல்படு | - | அச்சமின்றி | நேசி | - | பேதம் கடந்து |
| உழை | - | உண்மையாக | படி | - | முடிவின்றி |
| செலவிடு | - | யோசித்து | மரணி | - | பயமின்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைக்கு வந்த திருமண ஆசை

மன்னரின் யானையொன்று அண்டை வயல் நகரங்களுக்கு சென்று பயிர்களை அழித்தும் மக்களில் பலரை நாசமாக்கிக் காயப்படுத்தியும் அடிக்கடி பெருந்தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது. இது பற்றி பாதிக்கப்பட்ட சிலர் மன்னரிடம் முறையிட்ட போது மன்னர் அதனைப் பெரிதாக பொருட் படுத்தவில்லை. தன்னுடைய யானை மீது வீணாக புகார்கள் கூறுவதாக சிலரைக் கடிந்து கொண்டார். அதனால் யானையின் அட்டகாசம் பற்றிய மன்னரிடம் முறையிட யாரும் துணிய வில்லை. அவர்கள் முல்லாவைச் சந்தித்து எல்லாவற்றையும் விளக்கிக் கூறினார்கள். முல்லா தம்மிடம் வந்தவர்களை எல்லாம் நோக்கி "நீங்கள் எல்லாம் ஒன்று திரண்டு யானையைப் பிடித்துக் கட்டுப் போட்டு விடுங்கள்" என்றார். 'ஐயோ மன்னரின் யானையைப் பிடித்துக் கட்டிக் போட்டால் மீள முடியுமா? மன்னர் கடுமையான தண்டனை விதிப்பார்" என்றார்கள். நீங்கள் நான் சொன்னவாறு செய்யுங்கள். மன்னரிடமிருந்து யாராவது வந்து கேட்டால் "முல்லா கட்டிப்போடச் சொன்னார்" என்று கூறுங்கள் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மிகவும் சிரமப்பட்டு யானையைப் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். இதை அறிந்த மன்னர் முல்லாவுக்கு ஆள் அனுப்பி தம்மை வந்து சந்திக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். முல்லா அரண்மனைக்கு சென்று அரசரை வணங்கி னார்."என்ன முல்லா என்னுடைய யானையைக் கட்டிப் போட்டீராமே? எங்கிருந்து இந்த துணிச்சல் வந்தது?" என்று மன்னர் கேட்டார். முல்லா பணிவுடன் "மன்னரே! தங்களது யானை எங்கள் ஊர்பக்கம் வந்து தனக்கு ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்டு அட்டகாசம் செய்ய ஆரம்பித்துவிட்டது. மன்னரின் யானையின் விருப்பத்தை நிறைவேற்றுவது குடிமக்களாகிய எமது கடமை அல்லவா! அதனால் தங்கள் யானைக்காக ஒரு பெண் யானையைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். பெண் யானை கிடைப்பதற்குள் யானை கோபித்துக் கொண்டு தாறுமாறான செயல்களில் ஈடுபட்டுவிடக் கூடாதே என்பதற்காகவே அதைக் கட்டி வைத்திருக்கின்றோம்" என்றார். என்ன? யானையாவது தனக்கு திருமணம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டும் என்று கேட்பதாவது!யாரிடம் விளையாடுகிறாய்? என்று மன்னர் கோபித்துக் கேட்டார்.

மன்னர் பெருமான் அவர்களே! தயவு செய்து சிரமம் கருதாது ஒரு தடவை எங்கள் ஊருக்கு வந்து விசாரித்து பாருங்கள். நாங்கள் ஏதாவது பொய் சொல்லியிருந்தால் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கின்றேன்" என்று முல்லா கூறினார். மன்னர் தமது பரிவாரங்களுடன் முல்லாவை அழைத்துக் கொண்டு முல்லா சொன்ன பகுதிக்குச் சென்றார். வழி நெடுக்கிலும் விளை நிலங்களுக்கும் பழ மரங்களுக்கும் ஏற்பட்டிருந்த கடுமையான சேதத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்தப் பேரழிவுக்கு தனது யானை தான் காரணம் என்பதை உணர்ந்தார். தன்னை அந்த பகுதிக்குவரச் செய்ய முல்லா கையாண்ட தந்திரத்தைப் புரிந்து கொண்டார் மன்னர் உடனே தனது அதிகாரிகளை அழைத்து யானையினால் துன்புற்றோருக்கு நஷ்ட ஈடு கொடுக்குமாறு பணிந்தார். ஊர் மக்கள் முல்லாவுக்கு நன்றி கூறி நஷ்ட ஈடு பெற்று தங்கள் வீடு திரும்பினர்.



ச.ஷெரோணி
தரம் - 6T

## புதிர்கள்



(01) சிலந்தி வலையில் - சிலந்தி
மீன் வலையில் - மீன்
கொசு (நுளம்பு ) வலையில்?

(02) எனது அருகில் இருப்பவர் என் அம்மா - ஆனால் நான் அவரின் மகள் அல்ல................ என்றால் நான் யார்?

(03) அண்ணன், தம்பி இரண்டு பேர் மூன்று பழங்களை வெட்டாமல் பகிர்ந்தனர். எப்படி?

(04) எந்தவொரு கிளியும் பாடாது. எனினும் சில கிளிகள் பேசும். அவ்வாறாயின்..?

(05) ஒரு முட்டை அவிப்பதற்கு 5 நிமிடங்கள் எனின், 10 முட்டைகளை அவிப்பதற்கு எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?

(06) ஒரு கிலோ பஞ்சு. ஒருகிலோ இரும்பு. இதில் நிறை கூடியது எது?

## விடைகள்

(1) மனிதன்
(2) மகள்
(3) அண்ணன், தம்பி-2 (3 பேர்)
(4) சில கிளிகள் பாடும். எல்லாக்கிளிகளும் பாடாது. சில கிளிகள் பேசும்
(5) ஐந்து நிமிடங்கள்
(6) இரண்டும் ஒரே நிறை



ஜெ.டெனிக்கா மினவா
தரம் - 8C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போம் செயல்படுவோம்

ஓட்டம் பிடிக்கும் இன்றைய உலகில் கடவுளையும் ஒரு கட்டத்தில் எதிரியாகத்தான் பார்க்கின்றோம். காரணம் இன்றைய உலகின் மாய வலைக்குள் மனிதர்களாகிய நாம் அனைவருமே மாட்டித்தவித்துக் கொண்டிருக் கின்றோம். இன்று உலகத்தில் நடக்கும் கொலை, கொள்ளை, இனச்சுத்திகரிப்பு, காமவெறித்தம்,போதைவஸ்து என ஒவ்வொன் றும் தலைவிரித்தாட அடிப்படைக் காரணம் குடும்பமே. ஏனெனில் குறிப்பிட்ட தவறுகளை செய்பவன் ஒவ்வொருவனும் குடும்பத்தில் இருந்து தான் உருவெடுக்கிறான். ஒவ்வொரு குடும்பத் திலும் இடப்படும் அடித்தளம் தான் உலகத்தின் அழிவுக்கும் அதன் மலர்வுக்கும் காரணமா கின்றது. பெற்றோரே, பிள்ளைகளே சற்று சிந்தியுங்கள்.

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

குடும்ப தலைவர்களாகிய எம் எல்லோரும் மனதிலும் எம்குடும்பத்தை எவ்வாறு முன்னேற்றுவது? என்ற பெரிய எதிர்பார்ப்பு நிச்சயம் இருக்கும். ஆனால் நாம் எதிர்பாக்கும் முன்னேற் றம் பொருளாதார ரீதியில் மட்டுமே உள்ளது. வெளிப் படையாக கூறப்போனால் எம் பிள்ளைக ளின் தற்போதைய மனநிலை என்ன? அவர் கள் இந்த வயதில் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள் என்ன? அவர்களுக்கு பிடிக்காத எதை நாம் செய்யச் சொல்கின்றோம்? அவர் கள் மனதில் "அம்மா, அப்பா" என்ற ஸ்தா னத்தில் என்ன இடம்பிடித்துள்ளோம் என்று எப்போதாவது எண்ணி இருக்கிறோமோ? பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் தான் உங்களுக்கு மிகப்பெரிய பொருளாதாரம்.

அவர்களே உங்களின் மிகப்பெரிய சொத்தும் கூட. அந்த சொத்தை கவனியாது விட்டு நாசமாக்குவதும் பராமரித்து பெருகி பல் மடங்காக்குவதும் நம் கைகளில் தான் உள்ளது. இன்றைய உலகில் அனேகமான பெற்றோர்களினால் உணரமுடியாத, ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் உண்மை என்ன வெனில், நம் பிள்ளைகளை நம் நண்பர் களாக ஏற்றுக்கொள்வதுதான்.

உலகில் கிடைக்கக்கூடிய விலைமதிப் பற்ற உறவுகளுள் ஒன்றுதான் நட்பு. உற வினர்கள் பலரிடம் பகிர முடியாத விடயங்க ளைக்கூட நண்பரிடம் தான் பகிர்ந்து கொள் வோம். ஆகவே நாம் எம் பிள்ளைகளை நண்பர்களாக ஏற்று பழகி இருந்தால் நாம் சந்தித்த பல பிரச்சினைகள் ஆரம்பத்தி லேயே தீர்க்கப்பட்டிருக்கும். முன்னைய காலங்களில் எம் முன்னோர்கள் குடும்பமாக தொலைகாட்சியோ, தொலைபேசியோ இன்றி வீட்டு முற்றத்தில் நிலா வெளிச்சத் தில் கதைத்து பேசி மகிழ்ந்து தங்கள் இன்ப, துன்பங்களை பரிமாறி வாழ்ந்து வந்தனர். இன்றைய கால கட்டத்திலும் பல பிள்ளைகள் தின மும் ஏங்கிக் கொண்டிருக்கும் நிறைவேற்ற முடியாமல் இருக்கும் கனவுகளில் இதுவும் ஒன்று.




ஆனால் இன்று எத்தனை பெற்றோர் கள் தொலைக்காட்சி நாடகங்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வேலைகளுக்கும் அதிக முக்கியத் துவம் கொடுத்து ஓய்வு என்பதே இல்லாமல் அலைகிறார்கள். தொலைக்காட்சிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை தங்கள் பிள்ளைகளின், குடும்பங்களின் வளர்ச்சிக் காக ஒரு மாதத்தில் ஒரு தினமேனும் ஒதுக் கிப் பாருங்கள். உங்கள் சமூகத்திலுள்ள ஒரு பிள்ளையாக என் கோரிக்கையும் இதுதான். இவ்வாறு பழகும் போது உங்கள் பிள்ளை யின் வளர்ச்சியாயினும், வீழ்சியாயினும், முய ற்சியாயினும் உங்கள் கண்களுக்கு தெரியும். இல்லையெனில் பிறர் சொல்லி உங்கள் காது களுக்குக் கேட்கும். அப்போது அது உங்கள் மனதுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பெரிய ஒரு கேள்விக்குரியான விடயம்.



**அன்பார்ந்த பிள்ளையே என் சக நண்பர்களே!**

சற்றே மனதில் கொள்ளுங்கள். நாம் எதிர்கொள்ளப்போகும் வாழ்க்கை போட்டி மிக்கது. தோல்விகள். சவால்கள் மத்தியிலும் நாம் எதிர்நீச்சல் போட்டு வாழ்வில் முன் னேற்ற வேண்டும். பிள்ளைகளே! தக்கண பிழைக்கும் எதிர்காலத்தில் எங்களை தக்க வைப்பதற்காக எம் பெற்றோர்கள் படும் பாடுகளை சற்று சிந்தித்து மரியாதை கொடுப்போம். நாம் படிப்பிற்கோ, விளையாட் டிற்கோ, உடைகளுக்கோ செலவு செய்யும் ஒவ்வொரு துளிப்பணத்தையும் உழைக்க எம் பெற்றோர்கள் படும் வேதனைகளை, நாம் வளர்ந்து வேலை தேடும்போது மாத இறுதியில் எடுக்கும் சம்பளத்தை செலவு செய்ய தொடங்கும் போதும் பணம் முடி யும் போதும்தான் அந்த வலியை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். பிள்ளைகளே உங்கள் தந்தை



வேலைத்தளத்தில் எத்தனையோ உயர் அதி காரிகளிடமும் முதலாளிமாரிடமும் பேச்சு வாங்கி அந்த வருத்தம், கவலைகளை எல் லாம் உங்களுக்கு காட்டாது இருக்கக் காரணம் உங்களை நல்ல முறையில் வளர்த் தெடுப்பதற்காகவும் மேலும் அவ்வாறான கஷ்டங்களையும் கவலைகளையும் நீங்கள் காணக்கூடாது என்பதற்காகவும் தான் பார்க் கும் வேலையைவிட உயர்ந்த இடத்தில் நீங்கள் வேலை செய்ய வேண்டும் என்பதற் காகவுமே தான். இதனாலேயே உங்கள் தந்தை உங்களை கண்டிக்கின்றார். அந்த கண்டிப்புக்கள் ஒவ்வொன்றும் எம்மை எதிர் காலத்தில் ஒரு சிறந்த மனிதனாக வாழ வைக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

ஒரு தாயானவள் தன் பிள்ளையை பெற்றெடுக்க அனுபவிக்கும் வலியினை எழுத்துக்கலால் உணரவைக்க முடியாது. ஆனால் நாம் எத்தனை பேர் எம் தாயை எதிர்த்துப்பேசி அவளை மனம்நோகச் செய்திருப்போம்? எம்மை பெற்றெடுக்க அவள் பட்ட வேதனையை என்றாவது நினைத்திருக் கின்றோமா? எம் பாடசாலை காலங்களில் மூன்று மாத விடுமுறை ஆண்களுக்கு ஒவ் வொரு ஞாயிறும் விடுமுறை. ஆனால் உங் கள் தாய் சமயலறையில் விடுமுறை எடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் நினைவிருக்கின்றதா? காய்ச்ச லிலும் எழுந்து சமைக்கும் அவள் மனதில் எண்ணுவது என்றோ ஒரு நாள் தன் பிள்ளை தன்னை உட்கார வைத்து உணவளிப்பான், உணவளிப்பாள் என்பது தான். ஆனால் ஏனோ தெரியவில்லை. அநேக தாய்மார்களின் கனவுகள்



சிதைந்து போகின்றது. குழந்தைகளாய் தாயின் பாலின் உதிரத்தை உறிஞ்சிய நாம் இன்றோ எம் செயல்களால் உறிஞ்சிக்கொண்டிருக்கின்றோம். இந்நிலை எப்போது மாறப்போகின்றது.

நண்பர்களே! இன்றைய சமுதாயம் நம் கைகளில் நாம் எமது அடுத்த சந்ததிக்கு எதனை விட்டுச்செல்லப் போகிறோம். அன்பு, ஒற்றுமை, தியாகம், பொறுமை, சமத்துவம் நிறைந்த ஒருவரை ஒருவர் ஏற்று வாழ்கின்ற நற்பண்புகள் நிறைந்த சமுதாயத்தையா? அல்லது கோபம், காம வெறி, குடிவெறி, பொறாமை போன்ற மாசுக்கும் கறைகளும் படிந்த தீய பண்புகள் நிறைந்த சமுதாயத்தையா?

**சிந்திப்போம் செயல்படுவோம்**





C.மொனிக்கா
12^A (கலைப் பிரிவு)

## Impact of World War 1

The war ruptured the economy of almost all nations and as the war was showing no signs of abating, represen tatives from the nations involved in the war tried to negotiate. for a peace proess. The war officially ended with the signing of the Treaty of versailles, which was signed on June 28th. 1919 and the propaganda, or the controlled use of mass communation, became a potent force for the spread of information.



Because of world war I, when men were away for the war, women worked in small industries. This established their place permanently.

During the great depression of 1929, people felt dissatisfied at the performance of president Hoover. This led to the victory of Franklin D.Roosevelt in 1933.

Europe was also affected by the great depression because most of the European countries depended on the Us for credit.

Germany had 06 million unemployed. In 1935, 200 men marched from Jarrow to London with a petition to draw attention to the growing unemployment.

Poppies blossomed in many of the French battlefields in world war (I). Today artificial poppies are sold in Europe and the Us to raise money for war veterans.



**R.Sivadhariny**
12^A Bio 2019 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Let's Protect Public Property


Every one of us know that school is like our second home and teacher in the school is our second mother. Like wise we must think that the properties in the school are also like our own properties and we must take care of them as we take care of our own properties in our home.

But some children in school don't realize this truth and they vandalize the propeties of school. It may occur because



of a lack of meaningful activites, disciplinary problems and negative feelings such as revenge, boredom, anger and frustration. It can be the result of peer group pressure, playfulness, curiosity and pleasure too.

So, first we must stop the activities which are the root cause for vandalism. The vandals should be educated about the nagative effects of vandalism in a good way to prevent it and the policy makers of a school also must show keen interest in making Laws and orders to stop destroying the school properties. We must keep our school very clean and tidy. It is our prime duty to keep our school clean, neat and beatiful. So, each and every one of us should do our inner duty as well as the outer duty regulary. Then only we can prevent our school from pollution. School prefects and environmental club's members must show



their interest in checking or supervising student's duties. It should be a regular one.

The 5'S' system is also a very helpful one to take care of a school. The teacher and students, those who are incharge of 5'S' system of a school must keep it as an active one. If it is done regularly day by day One day it will be a successful one. That is, our school will be a "pollution free" school.

The educators must create the awareness of importance of their school among the students. They can arrange friendly competitions among the students on the importance of taking care of the school. Wall poster competions, essay, speech competions, etc also enhance the thought about the school.

We should hand over the school to our future generation without any lack in the school. So, let's start work together to build a healthy school for the sake of our future generation.



**Miss.A.Nivetha**
Grade -12$^{Com}$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE GREENHOUSE EFFECT





Life on Earth has been possible because the atmosphere that envelops the earth acts as a shield and reflects back most of the harmful rays of the sun. The gases present in the atmosphere trap the warmth from reflecting into the space.This keeps the earth warm. Other wise, it would have been a cold and lifeless planet during the night and scorching hot by the day. That is why the atmasphere has been compared with a green house.

- The most important green house gas is carbon dioxide.
- Power stations that run on coal or natural gas emit green house gases.
- Burning forests release carbon dioxides, which can be absorbed by new plant growth.
- Cars running on petrol release both carboon dioxide and nitrous oxide.




# THE LIVING EARTH

- It was in 1979 that a British Scientist James lovelock first proposed the gaia Theory. According to this theory, the earth maintained and regulated the delicate balance of nutrients in the envi ronment.




- All living oraganisms are built up of abouts 20 chemical elements like carbon,Nitrogen sulphur and calcium.
- Carbon dioxide dissolves with rainwater and reaches the sea. The dissoloved carbon dioxide is used by the marine organisms to make their shell. When they die, the shells form chalk.
- During their entire lifetime, living organisms consume the nutrients from the atmosphere. They give back the nutrients to the atmosphere only when they die.
- The environment needs to replenish its lost nutrients from dead organi sms to help sustain new life.



**Ann Chatharin Prabakar**
12A Bio 2019 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர் காலத்தில் வழக்கிலிருந்த கூத்துக்களும், ஆடற் கலைஞர்களும்

**சா**ந்திக் கூத்து, விநோதக்கூத்து எனும் இரு வகை அகக்கூத்துக்களுமே சோழர் காலத்தில் ஆடப்பெற்றன. இவற்றுள் சாந்திக் கூத்தே செல்வாக்குப் பெற்று விளங்கியது. சாந்திக்கூத்தின் முதல் பிரிவான சொக்கம் இக்காலத்தில் தான் சிறப்பான நிலையை ஏந்தியது. சொக்கத்தில் தேர்ந்தவர்கள் நிருத்த மாராயர், நிருத்தி விடங்கியர் என்று அழைக்கப்பட்டனர்.

சிவபாதசேகரனென்று தன்னையழைத்துக் கொண்டே முதல் இராசராசனே சொக்கத்தை முதன் முதலாக சிற்பக்காட்சியாக்கியவர். அவர் பணியைத் தொடர்ந்தே கும்பகோணம், வேங்கடத்தான் துறையூர்க் கோயில்களில் கரணத் தொடர்கள் சிற்பங்களாயின. சாந்திக்கூத்தின் பிற உட்பிரிவுகளான அகமார்க்கம் அபிநயக்கூத்து என்பனவும் சோழர் காலத்தில் பரவலாக ஆடப்பட்டன.



அகமார்க்கம் நட்டுவம், அபிநய நட்டுவம் என இரு வேறு சிறப்பு நட்டுவ நிலைகள் இருந்ததை, திருவிடை மருதூர்க்கோயில் கல்வெட்டு ஒன்று உறுதி செய்கின்றனது. அகமார்க்கம் திரு வொற்றியூரில் பின்பற்றப்பட்ட தேவரடியார்கள் அக மார்க்கம் நிகழ்த்தியதை இங்குள்ள ஆதிபுரீசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்று எடுத்துரைக்கின்றது. அபிநய நட்டுவம் என்பது சாந்திக்கூத்தின் ஒரு பிரிவான அபிநயக் கூத்தாகும். விநோதக்கூத்தும் ஆங்காங்கே ஆடப்பெற்றது. அதன் ஆறு பிரிவுகளுள் ஒன்றான குடக்கூத்து தமிழ் நாடடெங்கும் ஆடப்பெற்றதை கோயில் சிற்பங்கள் உறுதிசெய்கின்றன. தவிர வகைப்படுத்த முடியாத பல் வகை ஆட்டங்களும் சோழர் காலத்தில் வழக்கிலிருந்தன. இவற்றுள் வைகறை ஆட்டங்கள் இறைத் திருமுன் நிகழ்த்தப்பட்டமையை திருவெண்காடு சுவேதாரன் யேசுவரத்துக்கல் வெட்டு குறிப்பிடுகிறது.

ஆடல் பெண்டிர், தளியிலார், பதியிலார், கூத்திகள், தளித்தேவனார் மகளார், கூத்தப்



பிள்ளைகள், தளிர்ச்சேரி பெண்டுகள், தேவரடியார்கள் எனப் பல பெயர்களால் அழைக்கப் பட்டதைக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. அவர்களுக்கு கோயிலின் தேவைக்கேற்ப ஆடல் நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுக்கவும் அவர் தம் ஆடற்கலைத் திறனை வளர்க்கவும் வளமைப்படுத்தவும் கோயில்களில் நட்டுவர்களும் தலைக்கோலிகளும் இருந்தனர்.

கோயில்களுக்கு பெண்களைக் கொடையாகத் தரும் பழக்கம். இரண்டாம் நந்திவர்மர் காலத்திலேயே இருந்ததை காஞ்சி முக்தேசுவரத்துக் கல்வெட்டு உரைக்கும். இப்பழக்கம் சோழர் காலத்தில் பரவலாகக் கைகொள்ளப் பட்டமைக்கு பல கல்வெட்டுக்கள் சான்றுகளாக அமைகின்றன. இவர்களில் கலைத்திறமை இல்லாதவர்கள் கோயில் பணிகளான திரு அலகிடுதல், திருமெழுகிடுதல், கோயிலுக்கு வரும் நெல்லைக்குற்றி அரிசியாக்குதல், இறைவனுக்கு பூப்பறித்துக் கொடுத்தல் போன்ற பணிகளைச் செய்தனர்.




திருமதி.வசந்தி நேரு
முதுகலைமாணி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUCCESS LIFE

- **How do you define success in your life?**

Being successful means the achievement of desired visions and planned goals. Furthermore success can be a certain social status that describes a prosperous person that could also have gained fame for its favorable outcome. The dictionary describes success as the following "attaining wealth, prosperity and fame"

- **How do you achieve success?**



Set daily goals.
Take risks and chase success.
Surround yourself with success people.
Be focused on your goal and make your life goal oriented.
Imagine and visualize yourself being successful.
Make a plan for success.
Be spontaneous and listen to your gut.

- **What can you do to be successful in life?**



Focus on committment, not motivation.
Seek Knowledge, not results.
Get rid of stagnating thoughts.
Use your imagination.
Stop being nice to yourself.
Get rid of distractions.
Don't rely on others.

- **Seven ways to lead a more satisfying life?**

Focus on positive.
Find your stress relief.
Don't be afraid to take time for yourself.
Take responsibility for your actions.
Be more understanding.
Re evaluate your relationship.
Live your best life.



N.Nahentheney
Grade 12A Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# VIRUS - வைரஸ்

### கண்டுபிடிப்பு :

*Ivanovsky* என்பவரால் 1852ல் சித்திரவடிவ நோயால் பாதிக்கப்பட்ட புகையிலை தாவரத்திலிருந்து *TMV* (*Tobacco Mosaic Virus*) கண்டுபிடிக்கப்பட்டது. 1898ல் *Beijerink* என்பவர் அதனை *virus* எனப்பெயரிட்டார்.

### தோற்றம் :

கலக்கூர்ப்பின் பின்னரே வைரஸ் கூர்ப்படைந்திருக்க வேண்டும். *Prokaryota Eukaryota* கலங்களிலிருந்து நழுவிய



பாரம்பரிய பொருள் துண்டுகள் கலச்சூழலை அடைந்து பெருகும் போது *Virus* என அழைக்கப்படுவதாக நம்பப்படுகிறது.

### கட்டமைப்பு :

திட்டமான உருவத்தை வைரஸ் கொண்டுள்ளது நடுப்பகுதியில் பாரம்பரிய பதார்த்தமான *DNA* அல்லது *RNA* காணப்படும் அநேகம் தாவரங்களை தாக்கும் வைரஸ் *RNA*யையும் விலங்குகளை தாக்கும் வைரஸ் *DNA* யையும் கொண்டது ஆனால். இதற்கு விதிவிலக்காக *HTV, HIV, RNA*யைக் கொண்ட மனித னைத் தாக்கும் வைரஸ் ஆகும்.

### இயல்புகள் :

உயிர் வாழ்பவற்றில் மிகவும் எளியதும் *200 - 300mm* சிறியதுமான வைரஸ் இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடு மாத்திரம் தென்படுவதால் 1930ல் இந் நுணுக்குக்காட்டி கண்டுபிடித்ததன் பின் தெளிவாக இதன் வடிவம் ஆராயப்பட்டது. கலத்தினுள் புகுந்து அதனுள் வாழ்ந்து இனம்பெருக்குவதால் வைரஸ் யாவும் கட்டுப்பட்ட கலத்தக ஒட்டுண்ணியாகும். இயற்கையில் அதிகம் காணப்படும் இவை தாவரம், மனிதன் மற்றும் ஏனைய விலங்குகளை தொற்றி நோய்கள் பலவற்றை தோற்றுவிக்கும் வைரஸ் கரத்திற்கு வெளியே இனம்பெருக்காததால் செயற்கை வளர்ப்பூடகங்களில் வளர்க்க முடியாது. ஆகவே உயிருள்ள இழையமான கோழிக்குஞ்சு முளையத்தில் வளர்க்கப்படும்.


**J.ஜோபெல் வெலொன்றினா**
12B (விஞ்ஞானப் பிரிவு)




**ஏமாற்றியவர்களுக்கு**
**நன்றி சொல்!**
**அவர்கள்**
**ஏமாற்றத்தை**
**சொல்லி தரவில்லை...**
**இனி ஏமாறாமல்**
**இருக்க அனுபவத்தைக்**
**கற்றுத்தந்திருக்கிறார்கள்...!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளறை

எனக்கு இருள் சூழ்ந்த அந்த இடம்
அங்கு நான் மட்டும் தனிமையில் யாரோ
என்னை அங்கே அடைத்து வைத்திருக்கிறார்கள்
எங்கு திரும்பினும் சுவர்கள் ஆனால்
எனக்கோ உன் அன்பு – நேரம்
தவறாமல் வந்து விடும்
இருந்தும் நான்வெளி வராத மாதிரிதான்

சிலசமயம் என்கால்கலால் எட்டி உதைத்து
பார்க்கிறேன் இருந்தும் என்னால்
வெளிவரமுடியவில்லை
இருந்தும் அந்த இடத்தின் சிறுஅசைவு கூட
என்னை காயப்படுத்தியது இல்லை
ஆம் அன்று நான் எதிர்பார்த்து காத்திருந்த
நாள்வந்தது நான் வெளிவந்தேன்
வெளிவரும் மகிழ்ச்சியில் சத்தமிட்டபடி வந்தேன்

வெளிவந்த என்னை தூக்கி எடுத்து முத்தம்
இட்டது ஓர் அழகான இதயம் ஆம்
நான் இருந்தது என் அன்னையின் கருவறையில்
தாய் மனம் மாறாத சேயாய் நான் அங்கு
தவழ்கையில் என்னை பார்வையிட நித்தம்
ஒருகூட்டம் என்னை அள்ளி அணைத்து
முத்தம் இடதவிக்கும் என் தந்தை

அவர்கள் கண்கள் என்னில் பட்டுவிட
கூடாது என்பதற்காக கறுப்பு பொட்டு
வைத்து தன் சேவையில் அணைத்துக்
கொண்டவள் என்தாய்
நாட்கள் கடந்தோடி உலகைநான்
உணர ஆரம்பித்தேன் முழுமையாக
இந்த உலகை அறிந்தபின்

நான் சிந்தித்த முதல்விடயம்
இந்த உலகை விட நான்
இருந்த இருளறை மிகவும்
அழகானது…!



J.ஜோபெல் வெலொன்ரினா
12B (விஞ்ஞானப் பிரிவு)

# இடமாற்றம் வேண்டி…

பட்டம் பெற்று பதவியில் அமர்ந்து
படபடப்புடன் வேலைக்கு வந்து
பகுதியாய் பிரிக்கப்பட்ட வேலைகளை
பக்குவமாய் சரிவரச் செய்து

அதிகாரியிடம் ஒப்பம் இடும்போது
அவதியில் விட்ட பிழையானது
அவ்விடத்திலே கண்ணில் பட
அதனைச் சரியாக செப்பனிட்டு

உரியவரிடம் அனுப்பி வைக்கும்
உட்சாகம் நிறைந்த எங்கள் பணி,
உடனே வரும் அவசர அழைப்பு
உங்கள் தகவல் போதாதென்று

அதனைப் பெற்று சீர் செய்து
அனுப்பி வைக்கும் போதே
அடுத்த படிவம் எங்களை நாடிவர
அடுக்கிக் கொண்டே செல்லும் செயல்கள்

நாட்கள் நகர்ந்து வருடங்களாக
நாங்களும் இடமாற்றம் வருமென
நடப்பாண்டில் காத்திருக்கின்றோம்
இடமாற்றம் வேண்டி……



1. திருமதி.L.ரவீந்தர்
2. திருமதி.S.விஜயகுமார்
3. திருமதி.M.சுவேந்திரன்
4. திருமதி.W.A.மல்காந்தி
5. செல்வி.S.தேவகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை ஒழிப்போம் புதுயுகம் படைப்போம்



"இன்றைய இளைஞர்களே எதிர் கால தலைவர்கள்" என்ற மகுடவாசகம் எக்காலமும் பொய்யாகாது எதிர்காலம் என்பது இன்றைய இளைஞர்கள் கையிலே தங்கியுள்ளது. இளைஞர்களை எதிர் கால சிற்பங்களாய் செதுக்குகின்ற உழி மாணவர் பருவம் ஆகும். மாணவர் பருவத்தில் அவர்கள் உள்வாங்கும் விடயங்களே அவர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது. ஆனால் இன்று இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகப் போவதை அவதானிக்க முடிகிறது. இன்றைய நவீனத்தின் இடுக்குகளில் சிக்கித்தவிக்கும் இளைஞர்களின் சமூகத்தை வெகுவாக பாதிக்கும் உயிர்கொல்லி நோயாக போதைப்பொருள் பாவனை பரவிவருகிறது. இதற்கு சிறந்த மருந்துவம் நல் விழிப்புணர்வு ஆகும்.

**"கத்தியின்றி இரத்தமின்றி**
**யுத்தமொன்று வருகுது"**

என்று கவிஞர் ராமலிங்கப்பிள்ளை ஒரு நன்மையை நோக்கிப்பாடினார். இன்றும் அவ்வாறான யுத்தம் போதைப்பொருள் மூலம் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது. தனிமனிதன், குடும்பம், சமூகம் என முழு நாட்டையுமே சிரழித்துவிடுகிறது.

இலங்கை வியாபார கேந்திர நிலையமாகக் காணப்படுவதால் போதைப் பொருள் பரிமாற்றல்கள் அதிகமாக நிகழ்கிறது. இதனால் இளைஞர்களுக்கு இலகுவாக கிடைத்துவிடுகிறது. 13-15 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் அதிகமாக இந்த போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர் என ரவிந்திர பெர்ணாண்டே ஒரு ஆய்வில் குறிப்பிட்டிருந்தார்.

கிழக்கிலங்கையை பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த போதைப்பொருட்கள் உக்கிரமாக ஆக்கிரமித்துள்ளன. 30 வருடகால யுத்தம், சுனாமிப் பேரழிவு என அடுத்தடுத்து எமது தமிழ் சமூகம் அழிவைச் சந்தித்தது ஓரளவு மீண்டுவரும் நிலையில் யானை தன் தலையில் தானே மண்ணை வாரி போடுவது போல எமக்கு நாமே தீயிட்டு எம்மையும் எம்மானத்தையும் போதையில் அழித்துக்கொண்டிருக்கிறோம்.

புலிவாலை பிடித்த கதையாய் பள்ளிப் பருவத்திலும் கல்லூரிகளிலும் தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக்கங்களினால் பொழுதுபோக்காக போதைப் பொருளை பயன்படுத்தத் தொடங்கி, அதற்கு கொஞ்சம் கொஞ்சமாய் அடிமையாகி பின்னர் அதில் மீள முடியாது இறந்துவிடுகின்றனர். இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத்தலைவனால் அக்குடும்பமே சிதைந்துவிடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும். போதைப்பொருளை ஒழிக்க முதலில் அரசு முன்வரவேண்டும் ஆங்காங்கே அரச அங்கிகாரத்துடன் திறந்திருக்கும் மதுக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளைப் பூட்டிவிட வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் பூரண கவனம் செலுத்த வேண்டும் கடைகளுக்கும் மதில்களுக்கும் கண்காணிப்பு கமரா பூட்டும் பெற்றோர் பிள்ளைகளையும் கண்காணிக்க தவறக்கூடாது. அத்தோடு ஆசிரியர்களும் பூரண கவனம் செலுத்த வேண்டும். தாயின் கருவறை ஒரு குழந்தையை உருவாக்கவல்லது என்றால் ஒரு ஆசிரியரின் வகுப்பறை நல்ல மனிதனை உருவாக்கவல்லது. எனவே கடவுளின் கொடையாகிய நல் ஆரோக்கியத்தைப் பேணுவோம் போதையற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவோம்.



**ஆ.அனித்தா**
12B (வர்த்தகப் பிரிவு)

# கல்லூரி காலத்தை நினைத்தாலே இனிக்கும்



விழியோரம் நீர் கசிய
அன்று கல்லூரியில் நுழைந்த நான்
இன்றும் விழியோரம் நீர்கசிய
தனிமரமாய் நிற்கின்றேன்......
போகும் பாதை அறியாமல்

எத்தனையோ நாட்கள் இக்கல்லூரிக்கு
ஒழுங்காய் வரத்தவறினேன்!!!
ஆனால்
இன்று நான் வரத்தவிக்கின்றேன்
இக்கல்லூரி என்னை வீட்டுக்கு அனுப்பிவிட்டது

எங்கே செல்வேன், யாரை கேட்டு கதறுவேன்,
என்னை சிரிக்க வைத்த தோழியும்
என்னை சிந்திக்க வைத்த ஆசானையும் விட்டு
எங்கே செல்வது தனியாக???

ஆசான் எனும் தாயைப் பிரிந்து
தோழி எனும் நிழலை பிரிந்து
போகும் பாதை தெரியாமல்
எங்கே போவது?? .......

கல்லூரி காலம் முடிந்தாலும்
என் கனவுகள் முடியவில்லை
மீண்டும் வராத இந்த வசந்த நாட்கள்
என் வாழ்வின் பொற்காலம் .........

ஒரு பிரசவத்தில் பல குழந்தைகளை பெற்றெடுத்த
இக் கல்லூரியும் ஒரு தாய்தான்
மீண்டும் வராத இக்கல்லூரி காலத்தை
என்வாழ்வில் நினைத்தாலே இனிக்கும் .........

# எனது அம்மா



எனது அம்மா மிக அன்பானவர். கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்வதில் அவரைவிட வல்லவர் யாருமில்லை. நான் என்ன கேட்டாலும் இல்லை என்று கூறாமல் தருவதால் அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். படிப்பிலும் விளையாட்டிலும் நானும் எனது தம்பியும் தளைத்தோங்க ஊக்குவிப்பதில் பெரும் பங்காற்றுவார். நோய் வரும்போது நித்திரை மின்றி எம் நலம் காக்கப் பாடுபடுவார். பரீட்சையில் சித்தியடைந்ததும் மிகவும் சந்தோசப்பட்டு என்னைப் பாராட்டி என்னையும் மகிழ்விப்பார். என் அம்மாவிற்கு நிகர் யாருமில்லை.



**அனுஷாதனா**
தரம் – 5C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IS MEDICINE THE ROOT CAUSE OF OVER POPULATION?

## Abstract

*Over population is one of the major threats which we are facing in this 21st century. When considering any international issue, deep in the root you'll definitely find overpopulation. Therefore, over population has turned out to be the most frightening global issue in the world. The rapid improvement in the medical field is undoubtedly influencing international lifestyles. The general views about the influence of modern medicine in population remain neutral. The aim of this study is to bring forth the pros and cons of the advancement of medicine in world population.*

***Key words** : over population; international; advancement of medicine.*

### *Introduction :*

Over population refers to the exceeding of certain threshold limits of population density when environmental resources fail to meet the requirements of individual organisms regarding shelter, nutrition and so forth. It gives rise to high rates of mortality and morbidity (OECD 2001).Since 1750, there has been an unimaginable growth in human population. The human population pattern is growing in a geometric progression, not an arithmetic one (Daniel 2013). Worldwide, approximately one million people die every week. In that same week, two and half million people are born. In other words humanity's birth rate is 250% of our death rate (Reddit.com 2015). We are bound to think before we get too late. Over population has many causes. In some instances, advancement of medical facilities is considered as a reason of over population. This condition demands a great importance to study the impacts of medical influence in population. Medicine is a blade which can cut by both sides. Let's see which side is sharper.

### *Modern Medicine :*

A system in which doctors and other health care professionals (such as nurses, pharmacists, and therapists) treat symptoms and diseases using drugs, radiation and surgery is defined as Modern/ Mainstream medicine (NCI dictionary).

### Benefits of modern medicine :

It is always better to begin with the benefits. Modern medicine has proved it as a guardian angel in the world. The growth in modern medicine has resulted in a parallel growth of healthcare and sanitation around the world. Since the advent and development of modern medicine world's health status has changed dramatically (Medical News Today 2016). The medical and dental professions show a great responsibility in the knowledge and use of formidable agents which have been



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

put into their hands (Derrick 1973). Cures and remedies have been found for most of the diseases where some diseases are also made sure to have become extinct. A steady progress is shown in curing cancers and reducing HIV/AIDS. Medical processes offer the boon of longevity *(CQ press).* Infant and maternal mortality rates have dropped to a great extent.

In detail, longevity is becoming successful due to stem cell therapy. Results from the ICM survey suggest that 59% of Britons support stem cell research *(The guardian 2015).* Here, embryonic stem cells can grow into any kind of cell, thus helping to repair the organ systems of elders. Surgical field portrays its development through tele-surgery, surgical robots, organ transplants, cosmetic surgery and dentistry etc.

A lot of deaths have been prevented by proper blood transfusions. Various therapies have also contributed in curing non communicable diseases. Nowadays, without cutting open the body various ailments are being cured i.e. bladder stones, appendicitis and arthrosclerosis. Moreover modern medicine provides quick cures. Health facilities can be obtained worldwide.

**Impacts of modern medicine in overpopulation :**

Let us see how modern medicine influences the increase of human population. Though life span of man is increased, it in turn imposes on society the burden of supporting a huge number of unproductive individuals- the aged, the sickly and the disabled in addition to the young. Explosive population growth due largely to medical achievements raises the threat of overpopulation *(CQ press).* Better health care facilities have increased the lifespan increasing population as the death rate declines *(Hilgenchamp 2006).* The last 100 years have seen a rapid increase in population due to medical advances *(Kwame 2011).*

Advent of regenerative medicine, embryonic stem cells and therapies are playing a major part in longevity. There are also views that; epidemics are population control methods handled by nature and modern medicine is a barrier to it. Recombinant DNA technology, widely known as genetic engineering also has played a major role in increasing human life span by inducing healthy gene fragments in the DNA of man.

***Discussion :***

It is proven that modern medicine is influencing overpopulation. But, when taking a close look at the intensity of modern medical influence in overpopulation, it is definitely less than the other factors. Therefore it cannot be considered among the major causes. The inbuilt characteristic of the medical field is to cure diseases, uplift the living standard and health status of people. The intensity and activity of all other factors causing overpopulation can be controlled, but it can't be done to medicine



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and healthcare. Among the references, 10% of them include modern medicine as a cause of overpopulation. Among the 10%, no solutions regarding the influence of medicine in overpopulation have been cited.

In my view, medical field is doing its duty. Reducing the risk of overpopulation must be conducted focusing the other factors i.e. overproduction of food, poverty, genetic modification of species, poverty, unequal distribution of education worldwide and lack of public awareness and cooperation. Moreover, community participation and awareness is necessary to make any remedial moves regarding overpopulation.

### *Conclusion :*

In conclusion, modern medicine isn't merely the cause of overpopulation but it is a potential solution for it. Medical assistance is necessary to overcome overpopulation. To decrease human population, increasing the death rate sounds inhuman. In turn we can reduce the birth rate by contraceptive methods. I would also like to mention that man must leave creation to nature itself than trying to interfere in world's creation process via gene technology. Poverty must be reduced. Lessons on population must be integrated in school curricula at multiple levels to create a satisfactory awareness.

Whatever actions are taken, the support of the entire population is very essential. Other than these, when the population of a species grows beyond its carrying capacity, it reduces that capacity below the original level resulting in '*population crash*' or '*extinction*'. It is crisp clear that we are in the brink of extinction. So we must act quicker before we get too late.

### *References :*


1. *Causes of overpopulation; Hilgenchamp P.; 2006.*
2. *Daniel B.; Inferno; 2013.*
3. *Derrick D.; Medicines in our time; 1973.*
4. *How will medical advances change society? ; The guardian ; available in: https://www.theguardian.com/zurich futurology/story/0,,1952692,00.html*
5. *Kwame B. ; Population growth, Health and sanitation ; 2011 .*
6. *Medical advances-Benefits and risks; CQ Press; available in : library.cqpress.com/cqresearcher/ docment.php?id=cqresrre1958062300*
7. *NCI dictionary of medical terms ; 2015; available in: https://www.cancer.gov/publications/ dictionaries/cancer-terms?cdrid=454747*
8. *OECD Glossary of statistical terms; Organization of Economic and Cultural Development (OECD); Nov 16, 2001; Available in: https://stats.oecd.org/glossary/detail.asp?ID=1978*
9. *Overpopulation ; Reddit.com ; Aug 05, 2015; available in : https://www.reddit.com/r/overpopulation/ comments/3fvl1z/modern-medicine/*
10. *What is Modern Medicine?; Jan 05 2016; available in: https://www.medicalnewstoday.com/info/medicine/modern-medicine/php/*





**Romikha Andrew**
Grade - 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017" இந்திய பட்னா மாநிலத்தில் நடைபெற்ற சர்வதேச நாடுகளின் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கில் எமது அதிபர் கலந்து கொண்டார்.




செலிங்கோ காப்புறுதி நிறுவனம் பாடசாலை நூலகத்திற்கு கணினி அன்பளிப்பு



அதிபர் தினநிகழ்வு – 2017

ஆசிரியர் தின நிகழ்வு – 2017




2017 இல் தரம் 01 மொட்டுக்களுக்கான வரவேற்பு நிகழ்வு



சர்வதேச ஓட்டிசம் விழிர்ப்புணர்வு தினம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணர் பாசறை நிகழ்வு 2017



## கல்லூரியில் சிரமதானம் - 2017



## மாணவர் பாராளுமன்ற தேர்தல் - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகள்

அன்னையர் தினம் | தந்தையர் தினம் | சிறுவர் தினம்




## சுற்றுச்சூழல் தின நிகழ்வு



## கலாசார தினம்



## தாதியர் தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு

சுகாதாரச் செயற்பாடுகள்



விழிப்புணர்வு நிகழ்ச்சி

Hand wash





பெற்றோர் கூட்டம்

புனித யோசேவ்வாஸ் ஆண்டு நிறைவு விழா






பாடசாலை அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மனிதநேய தினம்



உலக மனிதநேய தினம் *World Humanitarian Day (WHD)* ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உலகளாவிய ரீதியில் யுத்தம் இயற்கை அனர்த்தம், நோய், போஷாக்கின்மை போன்ற வற்றால் பாதிக்கப்பட்ட பல இலட்சம் மக்களை நினைவுகூறும் வகையிலும், பணியாற்றுவோர் மற்றும் இப்பணிகளின் போது கொல்லப்பட்டோர், காயமடைந்தோர் ஆகியோரையும் நினைவுகூறும் வகையிலும் இத்தினத்தை அனுஷ்டிக்க வேண்டு மென எதிர்பார்க்கபடுகிறது 2008-12-11ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் *A/RES/63/139* இலக்க தீர்மானப்படி இத்தினம் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கமைய 1வது உலக மனிதநேய தினம் ஆகஸ்ட் 19.2009 இல் கொண்டாடப்பட்டது. இத்தினத்தை நாடுகளின் அரசாங்கமும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், அரச சார்பற்ற நிறுவனமும், மனித நேயம் கொண்டவர்களும் இணைந்து உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்க நடவடிக்கையை மேற் கொண்டனர்.

உலக வரலாற்றில் மனிதகுலம் பல தடை களைத் தாண்டி முன்னேறியுள்ளது. ஆரம்பத்தில் கடற்கொந்தளிப்பு, நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு போன்ற இயற்கையின் சீற்றங்களிலிருந்து தம்மை காத்துக்கொண்டு மனிதன் வளர்ந்தான். அடுத்த படியாக காட்டு வாழ்க்கையில் புலி, கரடி, சிங்கம், பாம்பு போன்ற கொடிய மிருகங்களின் தாக்குதலை சமாளித்து வாழக் கற்றுகொண்டான். மனிதர்க ளிலேயே பலர் மிருங்களாக மாறி மற்றவர்களை இனத்தின் பெயரால், நிறத்தின் தன்மையால், தேசத்தின் பெய ரால், மதத்தின் பெயரால் தாக் கத் தலைப்பட்டனர். இவ்வாறு மனிதர்களால் மனிதர்களுக் குத் தரப்படும் கொடுமை தான் இன்றைய காலம் வரை நீடித்து வருகிறது.

கல்வியறிவு, செல்வச் செழிப்பு, பட்டம், பதவி ஆகி யவை பெருமளவில் ஒருவ னுக்கு கிடைத்திருந்தாலும், அவற்றுடன் மனிதநேயம் என் பது அவனிடமில்லை என்றால், சேர்ந்துள்ள மற்ற வசதிகளால் அவனுக்கோ அவன் சார்ந்த சமுதாயத்திற்கோ எந்தப் பய னும் இல்லாமற் போய்விடும். மனிதரின் தன்மையின் உயர் போக்கை அடிப்படையாகக் கொண்ட உலக நோக்கு மனிதநேயமாகும். சிறப்பாக இயற்கை அம்சங்களின் கண் மூடித்தனமான நம்பிக்கை வைக் காமல் மனிதரின் பகுத்தறிவை, அறத்தை, ஆற்றலை மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம் முன்னிறுத்துகிறது. அனைத்து மனிதர்களையும் அது மதிப்போடு நோக்குகிறது. தமிழில் மனிதநேயத்தை மனிதாபிமானம், மனிதத்துவம் என்றும் குறிப்பிடுவர். உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து போஷாக்கின்மை, இயற்கை அனர்த்தங்கள், பயங்கர நோய்கள், வறுமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள



பல்லாயிரக்கணக்கான மக்களின் நிலையை ஆழமாக சிந்திக்க வேண்டியதாகவுள்ளது.

மனிதன் என்று வரும்போது அனைவரும் எலும்புகளாலும், தசைகளாலும் படைக்கப்பட்டவர்கள். அனைத்து மனிதர்களின் உணர்வுகளும் ஒன்றே ஒரு மனிதன் இயற்கையாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ பாதிக்கப்படும் போது அந்த மனிதனின் உள நிலைகளை சிந்திக்கவேண்டியதும், அம்மனிதர்களுக்கு உதவ வேண்டியதும் பாதிப்புக்குட்படாத மனிதர்களின் மனிதாபிமானத்தின் உயர் பண்பாகக் காணப்பட்டாலும் கூட, இதனை எத்தனை பேர் நிறைவேற்றுகின்றார்கள் என்பது கேள்விக்குறியே!

முதலாளித்துவ சமூக அமைப்புக்கள் தலைவிரித்துத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட ஒருவனுக்கு செய்யும் உதவிகள்கூட போருக்காகவும், புகழுக்காகவும், விளம்பரத்துக்காகவும் அமைந்திருப்பது வேதனைக்குரிய ஒரு விடயமே. நவீன தொழில்நுட்ப விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எல்லாவற்றையும் சிந்திக்கும் போது மனிதாபிமானத்தின் அடிப்படையை உணரத் தவறுகிறோம். மனிதாபிமான சிந்தனைகள் உயரிய முறையில் முன்னெடுக்கப்படுமிடத்து இன்றைய உலகில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு எப்போதே முடிவெடுத்திருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மனிதாபிமான தினத்தை பிரகடனம் செய்கையில் யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், நோய், போஷாக்கின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதை கவனத்தில் எடுக்கும் தினமாகவும் இத்தகையோருக்கு உதவிகள் வழங்குவோரை கௌரவிக்கும் தினமாகவும் கொள்ள வேண்டும் என எதிர்பார்த்து இத்தகைய நிலைப்பாடுகளுக்கு ஒருதினம் மாத்திரம் போதாது. பாதிக்கப்பட்டோரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டியது மனிதாபிமானமிக்க ஒவ்வொருவரினதும் கடமையாகும். இத்தகைய உணர்வூட்டல்கள் சமய ரீதியாக, கல்வியல் ரீதியாக ஊட்டப்படவேண்டியது அத்தியாவசியமான ஒன்றே. மனித உணர்வுகளை ஓரிரு தினங்களுக்குள் மாற்றிவிட முடியாது. ஒரு மனிதனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நிலை இயல்பாக உருவாக்கம் பெறுமிடத்து, இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக்கூடிய பலாபலன் நிலையானது. நிச்சயமாக புகழை எதிர்நோக்காமல் இலாப நோக்கங்களைக் கருத்திற்கொள்ளாமல் இவற்றையே வியாபாரமாக்காமல் உண்மையான நோக்குடன் மனித நேயமிக்கவர்களைக் கௌரவிக்க வேண்டியது கடமையே. அதேநேரம் உண்மையான நோக்கமிக்கவர்கள் இத்தகைய கௌரவங்கள் எதிர்பார்க்கப் போவதில்லை.



**R.மதுமிதா**
12A (வர்த்தகப் பிரிவு)



# பசி

பசி!
பாலிற்கு
வீறிட்டு
அழுதது குழந்தை:
கொடுப்பதற்கு
அந்த தாயிடம்
கடைசிவரை
இருந்தது
வெறும்
கண்ணீர் மட்டும் தான்!

பசித் தீ!
அடுப்பை மூட்டினாள்
அந்தத் தாய்
பற்றவைத்த
ஒவ்வொரு தடவையும்
தீ....
அணைந்து போனது
அவள் அழுத கண்ணீரால்!

சத்தியமாய்
என் தலையில் கைவைத்துச்
சொல்லுகிறேன்
அவளதும்,
அவள் பிள்ளைகளதும்
வயிற்றில் மட்டும்
முளாசி
எரிந்துகொண்டேயிருந்தது
பசித் தீ !

**முடியும் வரை**
**முயற்சி**
**செய்!**
**முடியாது போனால்**
**பயிற்சி**
**செய்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேண்தகு அபிவிருத்தி // நிலைத்து நிற்கும் அபிவிருத்தி

அதிகரித்துவரும் மனித தேவைகளை நிறைவுசெய்து கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் பாரியளவிலான சுற்றுச்சூழல் வளங்களின் உபயோகத்தினையும் அதே நேரம் இதனால் சூழலுக்குள் விடப்படும் பெருமளவிலான கழிவுப்பொருட்களின் வெளியேற்றத்தையும் கவனத்தில் எடுக்கும்போது சுற்றுச்சூழலின் தரத்தைப் பேணிப் பாதுகாப்பதில் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கான தேவை முக்கியத்துவமடைகின்றது.

நிலைத்துநிற்கும் அபிவிருத்தி எனும்போது சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவகையிலும், வருங்கால சந்ததியினரும் பயன்படுத்தக் கூடியவகையில் வளங்களை பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி அல்லது பேண்தகு அபிவிருத்தி எனப்படுகின்றது.

★ **உணவு விவசாய தாபனம் :** இயற்கை வளங்களின் அடிப்படை முகாமைத்துவத்தையும், நிகழ்கால எதிர்கால சந்ததியினரின் தேவைகள் அவற்றின் கிடைப்பனவுகளை நிச்சயப்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் தொழில்நுட்ப ரீதியான மாற்றங்களை நெறிப்படுத்துவதாகும்.

★ **புறுண்லாண்ட் ஆணைக்குழு :** வருங்கால தலைமுறையினர் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ளக்கூடிய ஆற்றலின் மீது தாக்கம் எடுத்துவராமல் இன்றய தலை முறையினரின் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் அபிவிருத்தி செயன்முறை நிலைத்துநிற்கும் அபிவிருத்தியாகும்.

**பேண்தகு அபிவிருத்தியின் / நிலைத்துநிற்கும் அபிவிருத்தியின் அவசியம் :**

1. **அதிகரித்துவரும் குடித்தொகைத் தேவைகளை நிறைவு செய்தல் :**

   இன்று உலகின் சனத்தொகையானது ஆரம்பக்காலங்களைவிட பன்மடங்கு அதிகரித்து வருகின்றது. 1999ல் ஆறு பில்லியனாகக் காணப்பட்ட சனத்தொகை 2012 இல் எழு பில்லியனாக அதிகரித்ததோடு 2024 இல் எட்டு பில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

   குடித்தொகைக்குத் தேவையான உணவு, சேவை மற்றும் நுகர்வுப் பொருட்களின் தேவையினை வழங்குவதிலுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நிலைத்துநிற்கக்கூடிய அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு ஒரு சிறந்த உத்தியாக உள்ளது.

2. **வளங்களின் வீண்விரயம் தடுக்கப்படும் :**

   எல்லா நாடுகளிலும் வளங்கள் ஒழுங்கான, முறையில் பரந்து காணப்படாமையுடன் இவை சரியான முறையில் உச்ச பயன்பாட்டினைப் பெற்றிருப்பதாகவும் இல்லை. இதனால் வளங்களின் கனிசமானளவு விரயம் காணப்படுகின்றது. இதனால் நிலைத்திருக்கக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி செயன்முறையின் கீழ் வளங்களின் பயன்பாடு அதி உச்ச நிலையினைப் பெற்றதாக அமையும்.

3. **வறுமை நாடுகளுக்கான வறுமை போக்கப்படும்**

அபிவிருத்தியடைந்த நாடுகளில் உலக சனத்தொகையில் 1/3 பங்கினர் உள்ளனர். ஆனால் உலக வளங்களில் 2/3 பங்கினை அவை அனுபவித்து வருகின்றன. அதேவேளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உலக சனத்தொகையில் 2/3 பங்கினைக் கொண்டிருந்தாலும் உலக வளங்களில் 1/3 பங்கினையே பயன்படுத்தி வருகின்றன. இந்த நிலைமையை மாற்றுவதுடன் வளங்களின் மீள்பரம்பல் மூலம் வறிய நாடுகளின் வறுமை போக்கப்படும்.

4. **சூழல் மாசடைவினைக் கட்டுப்படுத்தலாம் :**

சனத்தொகை அதிகரிப்பினால் அதிகளவில் காடுகள் அழிக்கப்படுவதுடன், கழிவுகளினால் சுற்றுப்புறம் மாசடைதல் முதலிய சூழல் மாசடைவுகள் ஏற்படுகின்றன. இவை நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கொள்கையினால் சூழல் மாசடைவைக் கட்டுப்படுத்த வழிவகுக்கும்.

5. **பௌதீக இடர்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் :**

இன்று உலகில் அதிகரித்துவரும் புவி வெப்பமடைதல், ஓசோன்படை அருகிச் செல்லல், கடல்மட்ட உயர்வு, துருவப்பனி உருகுதல், காலநிலைமாற்றம் போன்றவற்றைத் தடுப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி முறை அவசியமாகும்.

6. **வனவிலங்குகளின் அழிவைக் கட்டுப்படுத்தல் :**

உணவுக்காக அதிகளவில் வன விலங்குகள் மற்றும் கால்நடைகள் அழிவடைவதனால் உயர்ப்பல்வகைமை பாதிக்கப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி முக்கியமானதாகும்.

7. **தற்போதைய அபிவிருத்தி முறைகளின் குறைபாட்டினை களையலாம்**

தற்போதைய அபிவிருத்தி நடைமுறைகள் எதிர்காலத்திற்குத் தாக்குப்பிடிக்கக்கூடியனவாக இல்லை. இதனால் எதிர்காலத்திற்கு ஏற்ற வகையிலான அபிவிருத்தி முறைகள் அவசியமாகும்.

## நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி அணுகுமுறையை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பின்பற்றுவதிலுள்ள பிரச்சினைகள் :

1. **வளங்களின் தேவை :** அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு துரித பொருளாதார அபிவிருத்தி வேண்டப்படுகின்றன. இதனால் இந்நாடுகளின் பயன்பாட்டிற்கு அதிகளவான வளங்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறான அதிகரித்த வளங்களின் பயன்பாடு வளங்களுக்கான மேலதிக அழுத்தங்களைத் தோற்றுவிக்கின்றன. வளங்களின் பயன்பாடும் வளங்களைப் பேணிப் பாதுகாத்தலும் ஒன்றில் ஒன்று முரண்பட்டுக் காணப்படுகின்றது.

2. **துரித குடித்தொகை வளர்ச்சி :** அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொதுவான இயல்பு துரிதமான குடித்தொகை வளர்ச்சியாகும். இதனால் குறைந்தபட்ச வளங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தியே உணவு, சேவை மற்றும் பொருட்களை வழங்க வேண்டியுள்ளது. இதனால் வளங்களின் பயன்பாட்டிலும் அவற்றைப் பேணிக்காத்தலுக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

3. **கல்வியறிவு குறைவு :** குறைந்தளவான கல்வியறிவு காணப்படுவதனால் அபிவிருத்தி நடவக்கைகளின் போது மக்களும் பொதுத்துறை உத்தியோகத்தர்களும், இவர்களது நடவடிக்கைகள் எந்தளவுக்கு சூழலைப் பாதிக்கும் என அறிந்ததில்லை.

4. **வறுமை நிலை :** வறுமை நிலை காரணமாக ஏற்படுத்தப்படும் மக்களின் நடவடிக்கைகள் சூழலை பாதிப்படையச் செய்கின்றது. சூழலைப் பற்றிய போதிய அறிவு இருந்தாலும் வறுமையினால், தமது தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர். இரண்டாவதாகவே சூழல் பாதுகாப்பு என கருதிக் கொள்கின்றனர்

5. **மூலதனம், தொழிநுட்ப அறிவு இன்மை :** அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதிய மூலதனம் மற்றும் உயர் தொழிநுட்ப அறிவு என்பன இல்லாமையும் மேலும் இவற்றுக்காஆக வளர்ச்சியடைந்த நாடுகளில் தங்கியிருக்கின்ற நிலையும் காணப்படுகின்றமை.

6. **சூழல் வளங்களை முழுமையாக பயன்படுத்தல் :** வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் வளர்ந்த நாடுகளுக்கான மூலப்பொருட்களுக்காக தமது சூழலை வழங்குகின்றன. மற்றும் விவசாயப் பொருட்களை தமது நாட்டின் குறைந்தபட்ச நிலையினுள்ள காடுகள் மற்றும் நிலங்களை பயன்படுத்தியே வழங்கிவருதல்.

7. **சமூகப் பிரச்சினைகள் :** அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் குறைந்தளவான வளங்களை பயன்படுத்தி வறுமை, மந்த போசாக்கு, வேலையின்மை, பயங்கரவாதம் முதலிய சமூகப்பிரச்சினைகளை தீர்ப்பது கடினம்.

## இலங்கையில் பேண்தகு அபிவிருத்தி

இலங்கை வாழ் மக்களுக்கு ஏற்படுகின்ற தொற்றாத நோய்களை குறைப்பதற்கும், சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வருங்கால சந்ததியினரும் பயன்படுத்தக்கூடிய வகையில் வளங்களை பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு பேண்தகு அபிவிருத்தி நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தோடு அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் கடந்த ஆண்டிலிருந்து பாடசாலை மட்டத்திலும் விரிவுபடுத்தப்பட்டது.

**பேண்தகு அபிவிருத்தி திட்டங்களாவன,**

1. **விவசாயத் திட்டம் :**

- நாட்டில் தன்னிறைவு அபிவிருத்தி, பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வண்ணம் எமது நாட்டின் சுதேச கைத்தொழில் விவசாயத்தினை உயர் மேம்பாட்டுடன் நிலை பேறடையச் செய்தலும், வளமான வாழ்வினையும், ஆரோக்கியமான வாழ்வினையும் கட்டியெழுப்பலும் தன்னிறைவுப் பொருளாதாரத்தினை நாட்டில் உன்னத நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும் வகையில், ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்குதலும், சமூக நிலை பேறு, வளமான நாடு என்பவற்றினைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்தல்.

நிலையான ஆரோக்கியமான வாழ்வுடன் நோய் நொடியின்றி, சுகாதாரமாகவும் ஊட்டம் போஷாக்கு நிறைந்த எதிர்கால சந்ததியினரைக் கட்டியெழுப்பல்.

**2. மதுபோதை பாவனைத்தடுப்பு :**

சமூகத்தினை சிறப்பான முறையில் பாதுகாப்பதுடன் சமூக மேம்பாட்டினை உயர்த்து வதனை நோக்காகக் கொண்டு மதுபாவனைகளை தடுத்தல்.

**3. சிறுவர் பாதுகாப்பு :**

- எதிர்கால இளம் சமுதாயத்தினரினை சமூக வன் கொடுமையில் இருந்தும் துஷ்பிர யோகங்களில் இருந்தும் பாதுகாத்து வளம் மிக்க எதிர்கால சந்ததியொன்றினை உருவாக்கல்.
- தற்காலத்தில் இடம் பெறுகின்ற சிறுவர் உரிமை மீறல்களினை தடுத்து அவர்களின் உரிமைகளினைப் பெற்றுக் கொடுப்பதும் கல்வி கற்பதற்கான பூரண வாய்ப்புக் களினை வழங்கலும் வளமான ஆரோக்கியம் மிக்க எதிர்கால சந்ததியினரைக் கட்டியெழுப்பலாகும்.
- கல்வி, நவீனம், பண்பாடு, ஆன்மீக விருத்தி நிறைந்த வளம் மிக்க எதிர்கால சமூக மொன்றை சமூக கொடுமைகள், சீரழிவுகளில் இருந்து காத்து மேம்பாடடையச் செய்தல்.

**4. சிறுநீரக விழிப்புணர்வு :**

- ஆரோக்கியமான சௌக்கிய வாழ்வுள்ள தேக சுக நலனினை உயர்த்தும் வண்ணம் மானிட உயிர் வாழ்வை நீடிந்து நிலைபெறச் செய்வதற்கு சிறு நீரகங்களினை காத்தல் அவசியமாகும்.
- அதிகரித்து வருகின்ற சிறு நீரக நோயாளிகளினையும் சிறு நீரக பாதிப்பினையும் குறைக்கும் வண்ணம் சிறு நீரகப் பாதிப்புத் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தலும், மானிட உயிர்களினை காத்தலும் மானிட உயிர்களின் நிலவுகையினையும், இருப்பினையும் உறுதிப்படுத்தலும்.
- சிறப்பான மனிதவாழ்வினை ஏற்படுத்தலும் ஆரோக்கியமான மனித உறவுகளி னையும் சூழலினையும் வளப்படுத்துவது எதிர்கால சந்ததியினரினை முறையாகக் கட்டியெழுப்புவதில் உதவும்.

**4. சிறுநீரக விழிப்புணர்வு :**

- சுகாதாரமும் செழிப்பும் நிறைந்த பசுமையான சூழல்களினை உருவாக்கும் வண்ணம் சுற்றாடல் மாசடைவதனை இழிவளவாக்குவதற்காக மரங்களினை நாட்டி வளம் பெறச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆரோக்கியமான பசுமைச் சூழலினை ஏற்படுத்தும் வண்ணம் மரங்களினை நடுவதன் மூலமும் பிளாஸ்டிக் பொலித்தீன் போன்ற மாசாக்கிகளில் இருந்து சூழலைப் பாதுகாத்தலும் பூமியின் உயர்வான மண் வளத்தினை முறையாகவும் பாதுகாப்புடனும் பேணுவது கடமையாகும்.
- வளி மண்டலத்தில் தேவையற்ற வாயுக்கள் வெளியிடப்படுவதனைக் கட்டுப்படுத்த லும். ஆரோக்கியமான சுகாதார மான வளிமண்டலத்தையும் சுத்தமான காற்றைப் பெற்றுக் கொள்வதும் அவசியமானதாகும்.



**திரு. க. அரியநாயகம் - SLTS**
B.A. - (ஆசிரியர்)

# எமது பாடசாலையில் பேண்தகு நிகழ்ச்சித்திட்டம்

**ந**ச்சூட்டப்பட்ட உடன் உணவுகளை பொலித்தீன் பைகளில் உணவளிக்கின்றனர் பெற்றோர். போதையின் பாவனையை ருசிபார்க்க



வைத்து வன்முறை, தற்கொலைகளை உருவாக்குகின்றனர். இவற்றை முற்றுமுழுதாகக் குறைத்துக்கொண்டு நல் ஆரோக்கியமான மாணவச் சமுதாயத்தை உருவாக்குவதற்காக எமது நாட்டின் தலைவரினால் 2016 ஆம் ஆண்டு விவசாயமும் உணவு உற்பத்தியும், சூழல் பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு, சிறுவர் பாதுகாப்பு, சிறுநீரக நோய்த்தடுப்பு ஆகிய கருப்பொருட்களைக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டதே பேண்தகு நிகழ்ச்சித்திட்டமாகும். இக்கருப்பொருளை உள்ளடக்கியதாக எமது பாடசாலையில் அதிபரின் வழிகாட்டலுடன் 2017ம் ஆண்டு வைகாசி மாதத்திலிருந்து விவசாயமும் உணவு உற்பத்தி பசுமைத்தோட்டம் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவுகளைத் தயாரித்து வழங்கி வருகின்றனர். அத்தோடு பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனைகளை முற்றாகத் தடை செய்வதோடு சிறந்த திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் டெங்கு, ஒழிப்பு சிரமதானங்கள், மீள்பாவனை செயற்பாடுகளை மேற்கொண்டு பசுமையான சூழலைப் பாதுகாத்து வருகின்றனர். எமது சூழல் பாதுகாப்பணியினர் சீர்கெட்ட போதைப் பாவனையில் சீர்குலைந்த கல்வி நிலையை சீரம்தூக்கி செழிப்படையச் செய்து பாதுகாப்புடன் சவால்களை எதிர்நோக்கி வாழ்வில் வெற்றியடைய எமது மாணர்க்களுக்கு விழிப்புணர்வு நாடகங்கள், விழிப்புணர்வு செயலமர்வுகளை நடாத்தி விழிப்படையச் செய்துள்ளனர். போதைப்பொருள் தடுப்பு, சிறுவர் பாதுகாப்பு குழுவினர் நீரின் முக்கியத்துவத்தையும் நீர் அருந்தி சிறுநீர் கழித்து சிறுநீரகத்தைப் பாதுகாப்பதற்காக *Hand wash*, நவீன மலசலகூடங்கள், கவிந்நிலையான மலசலகூடங்களை பாடசாலையில் செயற்பாட்டின் ஊடாக செயற்படுத்தி வருகின்றனர்.



**திருமதி. டி. மகேஸ்வரன்**
(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செல்வாக்கு

இலங்கையிலுள்ள சகல மாணவர்களுக்கும் அதி சிறந்த பண்புசார், தரம்மிக்க கல்விக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொருட்டு பாடசாலை மட்டத்தில் தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுப்பதற்காக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பாடசாலைச் சமூகத்தினருக்கு அதிகாரம் வழங்கும் 2013/7 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கமைய சகல பாடசாலைகளிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தையும், இதில் தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுக்கக்கூடிய பாடசாலை அபிவிருத்திக் குழுவையும், பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும், முடிவுகளையும் அமுலாக்கம் செய்யும் பொறுப்புக்களையும் கொண்ட பாடசாலை முகாமைத்துவக் குழுவையும் ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும்.

2013/7 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி 2000 இற்கு மேற்பட்ட பாடசாலை ஒன்றில் ஆசிரியர் குழாத்திலிருந்து ஆசிரியர் சங்கக் கூட்டத்தின் மூலம் அதிபர் உட்பட 8 பேர் தெரிவு செய்யப்படல் வேண்டும். அதேவேளை பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் பெற்றோர்களிலிருந்து 8 உறுப்பினர்களோடு 2 கணக்காய்வாளர்கள் (இவர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அல்ல) தெரிவு செய்யப்படல் வேண்டும். அத்தோடு அங்கீகரிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கத்தின் விஷேட கூட்டத்தின் மூலம் 2 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படல் வேண்டும். மேலும் வலயக் கல்விப் பணிப்பாளரின் சார்பில் நியமிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரும் உள்ளடக்கிய 19 பெயரைக் கொண்ட பாடசாலை அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்படல் வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டத்தில் பெற்றோர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் போது, பாடசாலையின் அபிவிருத்தித் தேவைகளை இலகுவாக இனங்காண்பதற்காக தரம் 1 – 3 வரை ஒரு பெற்றோரும், தரம் 4 – 5 வரை ஒரு பெற்றோரும், தரம் 6 – 7 வரை ஒரு பெற்றோரும், தரம் 8 – 9 வரை ஒரு பெற்றோரும், தரம் 10 – 11 வரை ஒரு பெற்றோரும், தரம் 12 – 13 கலை, வர்த்தகப் பிரிவிலிருந்து ஒரு பெற்றோரையும் தரம் 12 – 13 விஞ்ஞானப் பிரிவிலிருந்து ஒரு பெற்றோரையும், செயலாளராக ஒரு பெற்றோரையும் தெரிவு செய்தல் வேண்டும். அதேபோல ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இருந்து ஆசிரியர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் போது ஒவ்வொரு பிரிவின் பௌதீக மற்றும் கற்றல் வளத் தேவைகளை இனங்காண்பதற்காக தரம் 1 – 3 வரை ஆசிரியர்களில் இருந்து ஒருவரையும், தரம் 4 – 5 வரை ஆசிரியர்களிலிருந்து ஒருவரையும் தரம் 6 – 7 வரை ஆசிரியர்களில் இருந்து ஒருவரையும் தரம் 8 – 9 வரை ஆசிரியர்களில் இருந்து ஒருவரையும், தரம் 10-11 வரை ஆசிரியர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஒருவரையும், தரம் 12 – 13 கலை, வர்த்தகப் பிரிவிலிருந்து ஆசிரியர்களில் ஒருவரையும், தரம் 12 – 13 விஞ்ஞானப் பிரிவிலிருந்து ஆசிரியர் ஒருவரையும், மேலும் பொருளாளராக ஒரு ஆசிரியரையும் தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் பதவிக்காலம் 2 வருடங்களாகும்.

பாடசாலை அபிவிருத்திக் குழுவானது பாடசாலையின் அபிவிருத்திக்குச் சாதகமாக அமையும் போது, பாடசாலையில் பண்புசார் விருத்தி ஏற்பட்டு பாடசாலையின் சாதனை மட்டம் உயரும் என சிறிவர்த்தன.எம் (2017) எனும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். அதேவேளை பாடசாலை அபிவிருத்திக் குழுவானது பாடசாலையின் அபிவிருத்திக்கு பின்வருமாறு பங்களிப்புச் செய்யமுடியுமென 2013 / 7 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1. பாடசாலை இலக்குகளை அடைவதற்குப் பொருத்தமான தேவைகளை முன்னுரிமைப்படுத்தி பாடசாலை அபிவிருத்தித் திட்டமிடலை மேற்கொள்ள உதவுதல்.
2. உரிய காலத்தினுள் சுழற்சி ஐந்தாண்டுத் திட்டம், வருடாந்த அமுலாக்கல் திட்டம் ஆகியவற்றைத் தயாரிக்க உதவ வேண்டும்.
3. மாணவரின் கற்றல் தேவைகளை இனங்கண்டு மாணவரின் கற்றல் அடைவை மேம்படுத்தக் கூடிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும்.
4. மாணவர்கள் ஏதாவதொரு இணைப்பாட விதானச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்குத் தூண்டக்கூடிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவவேண்டும்.
5. பாடசாலைக்குத் தேவையான கற்றல் வளங்களை இனங்கண்டு உரிய காலத்தினுள் பெற்றுக்கொடுக்க உதவ வேண்டும்.
6. பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்திக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுக்க உதவ வேண்டும்.
7. பாடசாலையின் கவிவு நிலையை மேம்படுத்தக் கூடிய வேலைத்திட்டங்களில் பங்குபற்ற வேண்டும். உதாரணம் டெங்கொழிப்பு வேலைத்திட்டம், வகுப்பறையை அழகுபடுத்தல்.
8. ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களுக்கு உதவ வேண்டும்.
9. பாடசாலைச் சூழலை தூய்மையாகப் பேணுவதற்கு உதவ வேண்டும்.
10. பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வலுப்படுத்த அவசியமான புனரமைப்பு மற்றும் திருத்தல் வேலைகளைச் செய்வதற்கு வேலைத்திட்டம் தயாரிக்க உதவ வேண்டும்.
11. பாடசாலைச் சொத்துக்களைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் உதவுதல்.
12. பாடசாலையின் அபிவிருத்திக்கு பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெற்றுக் கொடுத்தல்.
13. பாடசாலையில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்படின் தீர்த்து வைக்க உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பீற்றர் ட்ரக்கர் (2017) எனும் ஆய்வாளரின் கருத்துப்படி பாடசாலை அபிவிருத்திக் குழுவானது பாடசாலையின் அபிவிருத்திக்கான ஒரு திறவு கோலாக இருக்க வேண்டும் எனவும், பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான பிணைப்புப் பாலமாகச் செயற்பட்டு பாடசாலை சமூகத்திற்கு பரிபூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதோடு, பாடசாலையின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி குழுவானது பாடசாலையின் அபிவிருத்திக்குத் தடையாகவும், முட்டுக்கட்டையாகவும் அமையும் சந்தர்ப்பங்கள் அதிகளவு இடம்பெறுவதாக சிறிவர்த்தன.எஸ் (2016) எனும் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். மேலும் பாடசாலையின் பௌதீக அபிவிருத்தியில் அதிபருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும், பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாடுகளின் தலையீடு செய்யும் அதிகாரம் இல்லை எனவும் பியசேன.எம் (2017) எனும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். அதே வேளை பீற்றர் ஜோன்சன் (2017) எனும் ஆய்வாளர் கூற்றுப்படி அனேக பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் பாடசாலையின் அபிவிருத்தியில் அக்கறை காட்டாது முகாமைத்துவச் செயற்பாடுகளில் அதிகளவு தலையீடு செய்வதற்காக குறிப்பிடுவதோடு, சில பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களில் சிலர் நேரடியாக வகுப்பறைக்குச் சென்று ஆசிரியரின் கற்பித்தலை மேற்பார்வை செய்தல், ஆசிரியர்களுடன் முரண்படுதல், புதிய மாணவர் அனுமதியின் போது தங்களது விருப்பு வெறுப்புப்படி நடந்துகொள்ளல். பாடசாலையின் முகாமைத்துவக் கட்டமைப்புக்கு ஆசிரியர்களை நியமிக்க அதிபரை வற்புறுத்தல் போன்ற முகாமைத்துவ நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதேவேளை சில பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரை இடமாற்றம் செய்வதற்கு தீவிரமாகச் செயற்படுதல், பாடசாலை முகாமைத்துவக் குழு மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துதல் ஆசிரியர், அதிபர் போன்றோரின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்தல், ஆசிரியர்களை அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் பாடசாலையில் அபிவிருத்தியில் எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை எனவும் குமார் வெங்கட் மற்றும் குழுவினர் (2016) குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை அதிபர்கள் முதற்தர முகாமையாளராகவும் முகாமைத்துவ அணுகுமுறைகள், தலைமைத்துவ அணுகுமுறைகள், நிதி முகாமைத்துவம், தாபனக் கோவை விதிகள், சுற்று நிருபங்கள் போன்றவற்றில் நிபுணத்துவம் உடையவராகவும் உள்ளபோதே பாடசாலை அபிவிருத்திக் குழுவை பாடசாலையின் தூரநோக்கு, பணிக் கூற்று என்பவற்றை நோக்கி வழிநடாத்த முடியும் எனவும், இதில் குறைபாடு உள்ளபோதே பாடசாலை அபிவிருத்திக்குழுக்கள் அதிபரின் முகாமைத்துவப் பணிக்கு இடையூறாக இருக்கும் எனவும் குமரேசன்.ஆ.(2016) எனும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். 2013/7 சுற்றுநிருபத்தின் படி பாடசாலை அபிவிருத்திக் குழுவை வினைத்திறனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்ய பின்வரும் செயற்பாடுகளை பாடசாலை அதிபர் முன்னெடுக்க வேண்டும்.

- பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 வருடங்களுக்கு வரையறுக்க வேண்டும்.
- இரு வருடங்களுக்கு ஒரு தடவை மார்ச் 31க்கு முன் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய பாடசாலை அபிவிருத்திக் குழுவை தெரிவு செய்தல்.
- புதிதாக தெரிவு செய்யப்படும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கு இரு நாள் வதிவிடச் செயலமர்வை நடாத்தி 2013/7 சுற்றுநிருபம், தாபனவிதிக் கோவை, நிதிப்பிரமாணம், ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்தல் பற்றிய போதியளவு விளக்கத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு மாதமும் பாடசாலை அபிவிருத்திக் குழு கூட்டத்தைக் கூட்டி பாடசாலை அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்களை எடுத்தல்.
- கூட்டக் குறிப்பை பக்க இலக்கம் இடப்பட்ட CR புத்தகத்தில் தாய் மொழியில் பதிவு செய்தல் வேண்டும். அத்தோடு சகல ஆவணங்களையும் அதிபரின் பாதுகாப்பில் வைத்திருத்தல்.
- ஒவ்வொரு மாதமும் நடைபெறும் பாடசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளரின் பிரதி நிதியைக் கலந்துகொள்ளல் செய்வதன் மூலம் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினை ஏற்படும் போது உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க உதவுவார்.
- பாடசாலையின் நிதி முகாமைத்துவம் ஒளிவு மறைவு இன்றி இருப்பதோடு ஒவ்வொரு மாதமும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.
- பாடசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் 19 உறுப்பினர்கள் தவிர்ந்த கணக்காய்வாளர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கக் கூடாது.
- கணக்காய்வாளர்கள் அதிபரின் அழைப்பின் பேரில் பாடசாலைகு வருகை தந்து உள்ளகக் கணக்காய்வை செய்ய வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திக்குழுவிற்கும் அதிபருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படும் போது வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்து உரிய தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, பாடசாலை அபிவிருத்திக் குழுவானது, பாடசாலை முகாமைத்துவக் குழுவுக்குப் பூரண ஒத்துழைப்புடன் செயலாற்றுவதுடன், இவையிரண்டும் ஒன்றை யொன்று அனுசரித்து பங்களிப்புடன் செயலாற்ற வேண்டும். இக்குழுக்கள் இரண்டும் தங்களுடைய வகிபங்குகளையும் தொழிற்பாடுகளையும் பற்றி மிகவும் தெளிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு தமது இரு குழுக்களுக்கிடையேயும் ஒழுங்கான தொடர்பைப் பேணி வரவேண்டும். இவை மிகவும் நேர்த்தியாக இடம்பெற வேண்டுமெனில் அதிபர் சகல சுற்றுநிருபங்கள், கல்வி வெளியீடுகள், தாபன விதிக் கோவைகள் போன்றவற்றில் போதியளவு விளக்கமும், கல்வி முகாமைத்துவம் தொடர் பாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியையும் பயின்றிருக்க வேண்டும். எனவே தான் சகல அதிபர்களும் தொழில்வாண்மைத்துவத் திறனை மேம்படுத்துவதோடு, காலத் திற்குக் காலம் இற்றைப்படுத்தவும் வேண்டும். இதன் மூலமே பாடசாலையின் பண்புத்தர விருத்திக்கு வித்திட முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


- ஆறுமுகம் செல்வநாயகம் (2015), அஸ்ரா கிராபிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், திருகோணமலை.
- கல்வி அமைச்சு (2014), பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான, கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடு தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டற் கைநூல், இசுறுபாய, பத்தரமுல்ல.
- குமரேசன்.ஆ.(2016), இலங்கையில் பாடசாலை அபிவிருத்திக்குழுக்களின் தலையீடு பற்றிய மதிப்பீட்டாய்வு, தேசிய கல்வி நிறுவகம் (வெளியிடப்படாதது).
- குமார் வெங்கட் மற்றும் குழுவினர் (2016), பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய ஆய்வு. தேசிய கல்வி நிறுவகம் (வெளியிடப்படாதது).
- தேசிய கல்வி நிறுவகம் (2014), பாடசாலை நிதி முகாமைத்துவம், தொழில்வாண்மை அபிவிருத்தி, மற்றும் கல்வி முகாமைத்துவம், மீப்பே.
- தேசிய கல்வி நிறுவகம் (2014), பாடசாலை மேம்பாட்டை வழிப்படுத்தலும், மாற்றலும், கல்விப்பீடம், மீப்பே.
- Peter drucker (2017), Constraints to Implementation of the PSI in Primary Schools in Siaya District, Kenya.
- Peter Johnson (2017), School Develoopment Team in a Programme for School Improvement, Nanyang Techninological Univercity, Singapore.
- Sriwardana.M (2017), The study on programme for school improvement in Sri Lanka, University of Peradeniya (unpublished).



**திரு.ந.சந்திரகுமார் -SLPS**

COE (Merit), Sp.Trd in Sc, Dip.in Th, Dip.in Agri(Gold medal), B.Ed in Sc(Hons), M.A in Phi(Hons), M.A in Ed.(First Class), M.Ed(OUSL), PGDLL & AL, Post B.Ed in School Administration, PGDEM, PhD(R), PGD CL (R)

பிரதி அதிபர் (நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 13 வரை உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்

